
# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஏப்ரல்-2016
பருவம் 2 புனல் -19

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20

## அடித்தட்டு மக்களை அழிக்கும் அண்ணன்மார் விழாக்கள்



# அனைவருக்கும்
# காட்டாறு குழுவின் வாழ்த்துக்கள்!

காட்டாறு தொகுப்புக்குழுத் தோழர் பெரியார் செல்வியின் தங்கை அன்புமணி - முத்து ராஜா இணையருக்கு 04.04.16 அன்று பெண் குழந்தை பிறந்துள்ளது.34 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில் தான் தோழர் பெரியார் செல்வி அவர்களின் அம்மா கௌரி - அப்பா ஜோதிவேலு ஆகியோருக்கு, மயிலாடுதுறை பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில் திருமணம் நடைபெற்றது.

காட்டாறு குழுவின் திருப்பூர் ஜீவாநகர் பரமேசுவரி - குமார் இணையரின் மகள் கு.ப.இளமதி அவர்களுக்கு ஏப்ரல் 6 ஆம் நாள் அன்று பிறந்தநாள்.

காட்டாறு கலைக்குழு தோழர் திருப்பூர் மணிகண்டன் அவர்களுக்கு ஏப்ரல் 9 அன்று பிறந்த நாள்.

காட்டாறு குழு ஆண்டுக்கட்டணத் தொடர்பாளர் தோழர் திருப்பூர் வேணி அவர்களுக்கு ஏப்ரல் 11 ஆம் பிறந்தநாள்.

Team Life Science அமைப்பின் பொறுப்பாளர் உடுமலை தோழர் மலரினியன் - சுடரொளி இணையரின் மூத்தமகள் தேனிலா அவர்களுக்கு ஏப்ரல் 11 அன்று பிறந்தநாள்.

காட்டாறு வெளியீட்டாளர், ஆசிரியர் பொள்ளாச்சி விஜயராகவன் - தனலட்சுமி இணையரின் பேத்தி லோ.இலக்கியா அவர்களுக்கு ஏப்ரல் 13 அன்று பிறந்தநாள். அடுத்த பேத்தி லோ.இனியா அவர்களுக்கு மே 23 அன்று பிறந்தநாள்.

அனைவரது பிறந்த நாட்களின் நினைவாக பொள்ளாச்சி விஜயராகவன் அவர்களும், உடுமலை மலரினியன் அவர்களும் இணைந்து காட்டாறு ஏட்டிற்கு 3000 ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளனர். இருவருக்கும் நன்றி. அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

காட்டாறு தொகுப்புக்குழு தோழர் யாழ்மொழி, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளராக (Scientist - Indian Space Research Organization) பணி நியமனம் பெற்றுள்ளார் என்பதை பெருமையுடன் அறிவிக்கிறோம். ஐ.ஐ.டி, ஐ.ஐ.எஸ்.சி. போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் படித்த வட இந்திய பார்ப்பன மாணவர்களின் கடும் போட்டிகளை வென்று ஆராய்ச்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவரது இலக்கை அவரே திட்டமிட - முழு ஒத்துழைப்புக் கொடுத்த அவரது பெற்றோர்கள் மதுரை வாசுகி - முருகேசன் ஆகிய தோழர்களுக்கும் வாழ்த்துக்கள். முன்மாதிரியான பெற்றோர்கள் - முன்மாதிரியான யாழ்மொழி


கு.ப.இளமதி


மணிகண்டன்


வேணி


தேனிலா


லோ.இலக்கியா
லோ.இனியா


மதுரை வாசுகி - முருகேசன்

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
விடுதலைமொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

**சட்ட ஆலோசனைக்குழு:**
வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரம் & விற்பனைத் தொடர்பு:**
சி. விஜயன் 94881 79109
சேயூர் செந்தில்குமார் 90252 47411
ஜீவாநகர் குமார் 99944 77013
ஆ. பாண்டியன் 96591 12891
கடத்தூர் காந்தி 99428 76665
ஈரோடு வெங்கட் 97884 95774

**ஆன்லைன் சந்தா - நன்கொடை:**
பெரியகுளம் குமரேசன் 99943 65133

**ஆண்டுக்கட்டணத் தொடர்பு:**
திருப்பூர் வேணி 77084 58086

**வடிவமைப்பு:**
முகிழ் மீடியா 97873 20044

**அச்சு:**
க்ரியேட்டிவ் க்ராஃபிக் , சென்னை

**உரிமை, வெளியீடு, ஆசிரியர்:**
சி.விஜயராகவன்

**பொறுப்பாசிரியர்:**
சி. இராவணன் 97868 89325

# “ஜாதி மறுப்புத் திருமணங்களில் மட்டுமே பங்கேற்போம்! ஒரே ஜாதிக்குள் நடக்கும் திருமணங்களைப் புறக்கணிப்போம்!!”

திராவிடர் கழகம் கடந்த மார்ச் 18, 19 ஆம் தேதிகளில் திருச்சி சிறுகனூரில் நடத்திய ஜாதி - தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில், திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் கி. வீரமணி அவர்கள் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். மாநாட்டின் இடையே அவர் பேசிய இந்த உரை. 29.03.16 விடுதலையில் தலைமைக்கழக அறிவிப்பாகத் தனியாகக் கட்டம் கட்டப்பட்டு வெளியிடப்பட்டது.

“இனி தாம் கலந்து நடத்திவைக்கும் திருமணங்கள், ஜாதிமறுப்புத் திருமணங்களே என்று திட்ட வட்ட மாக அறிவித்தார். (சில விதிவிலக்குகளும் உண்டு என்றாலும் கூட) - திருமணங்களில் விதவை மறு மணம், மண விலக்கு மறுமணம், ஜாதி ஒழிப்பின் பட்டியலில் இடம் பெறும். அதன்படி இனி தேதி வாங்கத் தலைமைக் கழகத்தின் அனுமதி பெறுமுன் இவ்விதிக்குப் பொருந்தும் மணவிழா என்பதை அருள்கூர்ந்து உறுதிப் படுத்திக் கொண்டு அணுகு மாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். - தலைமை நிலையம், திராவிடர் கழகம்.

அடுத்த நாள் 30.03.16 விடுதலையில் ஒரு சிறப்புத் தலையங்கமே எழுதப்பட்டது. ஜாதி ஒழிப்புக் களத்தில் இந்த அறிவிப்பு மிக மிக முக்கியமான ஆயுதமாகும். தமிழ்நாட்டில் ஜாதி ஒழிப்புப் பேசும் அமைப்புகள் நூற்றுக்கணக்கில் உள்ளன. நல்ல தொண்டர் பலம் உள்ள அமைப்புகளே 10 க்கும் மேற்பட்ட அமைப்புகள் உள்ளன. அவை அனைத்திற்கும் வழிகாட்டுவது போல இந்த அறிவிப்பு அமைந்துள்ளது.

வரும் 17.04.2016இல் கோவையில் ‘ஜாதிமறுப்பு மக்கள் கூட்டியக்கம்’ சார்பில், தமிழ்நாட்டிலுள்ள எண்ணற்ற ஜாதி ஒழிப்பு அமைப்புகள் இணைந்து ‘ஜாதிவெறி ஆணவப்படுகொலை எதிர்ப்பு மாநாட்டை’ நடத்த உள்ளன.

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகளின் கவனம் திசைதிரும்பியுள்ள இந்நேரத்தில், முற்போக்கு அமைப்புகள் ஒரு முக்கியக்கடமையாக இம்மாநாட்டை ஏற்பாடு செய்தது மிகவும் பாராட்டத்தக்க பணியாகும். இம்மாநாடு அரசிற்கு முக்கியமாக ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளது.

“ஜாதிமறுப்பு இணையரைக் காக்கச் சிறப்புச்சட்டம் இயற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றமும், இந்திய மகளிர் ஆணையமும், இந்தியச் சட்ட ஆணையமும் பரிந்துரைத்ததை மத்திய, மாநில அரசுகள் ஏற்றுக்கொண்டு, ஆணவக் கொலைகள் தடுப்புச்சட்டத்தை இயற்ற வேண்டும்.”

என்று கோருகிறது. இக்கோரிக்கை பல ஆண்டுகளாகப், பல அமைப்புகளாலும் முன்வைக்கப் படும் கோரிக்கை. அரசுகள் இதை ஏற்று அரசு உடனடியாக ஆணவக்கொலைத் தடுப்புச் சிறப்புச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

அதேசமயம், கடுமையான சட்டங்கள் மட்டும் தனியாக சமுதாயத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வந்துவிடாது என்பதை அனைவரும் அறிவோம்.

படுகொலை செய்யப்பட்ட, உடுமலை சங்கரின் மாமனார் சின்னசாமி தனது வாக்குமூலத்தில்,

"எனது மகள் கௌசல்யா வேறு சாதியை சேர்ந்த சங்கரைத் திருமணம் செய்து கொண்டதில் எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் விருப்பமில்லை. எனது மகளின் இந்தச் செயலால் உறவினர்கள் என்னைக் கேவலமாக பேசினார்கள். என்னால் கோவில், விழா உள்பட வெளியே எங்கேயும் செல்ல முடியவில்லை. இது எனக்கு அவமானமாக இருந்தது. எங்களுடன் வராவிட்டால் உன்னையும், உனது கணவரையும் தீர்த்துக் கட்டி விடுவோம் என கௌசல்யாவை மிரட்டியும் கௌசல்யா வரவில்லை."

– நக்கீரன் இணையதளம் 22, மார்ச் 2016

இந்த வாக்குமூலம் நமக்குத் தெளிவுபடுத்துவது ஒன்றுதான். இந்த வழக்கிலும் சரி, இதுபோன்ற ஆணவக்கொலைகள் அனைத்திலும் சரி, கொலை செய்தவர்களைவிட, கொலை செய்யத் தூண்டிய ஜாதிசனம், சொந்த பந்தங்கள், உறவுமுறைகள், அவர்களுக்கு அந்தச் சிந்தனையை ஊட்டிய இந்துமதக் கருத்தியல்கள் இவைதான் முக்கியக் குற்றவாளிகள்.

இந்த சமுதாயத்தின் சிந்தனையில் மாற்றம் தேவை. இன்றைய காலத்தைவிட மிகக் கொடூரமான ஜாதிவெறிக் கும்பல் வாழ்ந்த காலத்தில்தான் தோழர் பெரியார் தனது ஜாதி ஒழிப்புப்பணிகளைச் சாதித்திருக்கிறார். அவர்காலத்தில் ஆயிரக்கணக்கான ஜாதி மறுப்புத் திருமணங்கள் எப்படி சாத்தியப் பட்டது?

தோழர் பெரியாரால் 1928 இல் சுயமரியாதைத் திருமணம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏராளமான தோழர்கள் அப்போதே சுயமரியாதைத் திருமணங்களையும், ஜாதிமறுப்புத் திருமணங் களையும் நடத்திக்கொண்டனர். அப்போது இன்றுள்ள சட்டப்பாதுகாப்புக்கூடக் கிடையாது. திருமணத்தைப் பதிவு செய்யவே வழிகிடையாது. அவர்களின் குழந்தைகளுக்குச் சொத்துரிமை, வாரிசுரிமையிலும் இன்றுள்ள பாதுகாப்பு அன்று கிடையாது. இந்த ஆபத்துக்களை எல்லாம் தாண்டி ஜாதி ஒழிப்புக்காகப் பெரும் விலை கொடுத்து, ஜாதிமறுப்புத் திருமணங்களைத் தம் வாழ்வில் நடத்திக்காட்டினர் பெரியார் தொண்டர்கள்.

அன்று பெரியார் வழிகாட்டினார். அமைப்புத் தோழர்கள் செயல்படுத்தினர். மக்கள் பின்பற்றினர். அதன் விளைவாகவே சட்டம் வந்தது. ஆனால் இன்று நமது அமைப்புகளின் தோழர்கள் ஜாதிமறுப்புத் திருமணங்களுக்குத் தயாராக இருக்கிறார்களா? இருந்தால் தலைவணங்கிப் பாராட்டுவோம். இல்லாவிட்டால்?... அவர்களை அமைப்புகளும், தலைவர்களும் அத்திசை நோக்கி நகர்த்த வேண்டியது தான் முக்கியக்கடமை.

அதற்கான முன்முயற்சிதான் - முதல் அடி தான் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் கி.வீரமணி அவர்களின் அறிவிப்பு. ஒருவேளை திராவிடர் கழகத் தலைவரைப் போன்று வெளிப்படையாக அறிவிக்காமல் - செயலில் அவ்வாறு இயங்கும் தலைவர்களும் இருக்கலாம். எப்படி இருந்தாலும், இந்தச் சூழலில் வெளிப்படையாக, நான் "ஜாதி மறுப்புத் திருமணங்களை மட்டுமே நடத்தி வைப்பேன். ஒரே ஜாதிக்குள் நடக்கும் திருமணங்களைப் புறக்கணிப்பேன்" என்று அறிவிப்பது என்பது மிகப்பெரும் சமுதாயப் புரட்சிக்கான அடிப்படைக் கட்டுமானம் போன்றதாகும்.

முதல் கட்டமாக, ஜாதி மறுப்புத் திருமணங் களுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகள், அதன் தலைமைகள், தோழர்கள், செயல்வீரர்கள் இதுபோன்று தமது இயக்க ஏடுகளில், அதிகாரப்பூர்வ சமூகவலைத்தளப் பக்கங்களில் வெளிப்படையாக அறிவிப்பது - அறிவித்தபடி செயல்படுவது, ஜாதி ஒழிப்புக்கு மிகவும் அவசியமான - அடிப்படையான பணியாகும்.

ஜாதி மறுப்பு மக்கள் கூட்டியக்கத்தில் இணைந்துள்ள அமைப்புகள், அதில் இணையாமல் தனித்து தத்தமது அமைப்புகள் சார்பாகவே ஜாதி ஒழிப்புக்காகப் பணியாற்றும் சில பொதுவுடைமை இயக்கங்கள், மார்க்சிய - லெனினியக்குழுக்கள், தலித் அமைப்புகள், தமிழ்த்தேசிய அமைப்புகள் என அனைத்து அமைப்புகளுக்கும் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறோம். ஆர்ப்பாட்டங்களும், மாநாடு களும் அரசிற்குத்தான். நமது கடமை? நமது பொறுப்பு?

உங்கள் தோழர்களுக்கு - உங்களது இயக்கத்தில் பணியாற்றும் தோழர்களுக்கு, நீங்கள் நடத்தி வைக்கும் திருமணங்களாவது உறுதியாக ஜாதி மறுப்புத் திருமணங்களாகவே இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அத்திருமணங்களில் தலைவரோ, தலைமைக் கழகமோ பங்கேற்க மாட்டோம் என்று அறிவித்தால் அதுவே, ஆணவக்கொலைகளுக்கு நமது அளவில் நாம் நடத்தும் மிகச்சிறப்பான எதிர் வினையாக அமையும்.

**இப்படி அறிவிக்கும் அமைப்புகளின் எண்ணிக்கை பெருக வேண்டும். சமுதாயத்தில் ஜாதி மறுப்புத் திருமண இணையர்களின் எண்ணிக்கை உயர வேண்டும். சமூக இயல்பாக இவை மாற வேண்டும். அதற்கு அமைப்புகள் தான் முன் முயற்சி எடுக்க வேண்டும். 'ஜாதிவெறி ஆணவப் படுகொலை எதிர்ப்பு மாநாடு' இதற்கான பிரகடன மாநாடாக அமைந்தால் எதிர்கால வரலாறு உங்களை வாழ்த்தும்!.**

அழகுக்கு இவையெல்லாம் முக்கியமில்லை. நீங்கள் யார், என்ன செய்கிறீர்கள் என்பதில்தான் அழகே இருக்கிறது.

# ‘மலர் டீச்சரின்’ அறிவியல் பார்வை

மலையாள ‘ப்ரேமத்தில்’ நடித்து, ஒட்டுமொத்தத் தென்னாட்டு சினிமா இரசிகர்களுக்கும் ‘மலர்க்காய்ச்சல்’ கொடுத்தவர் சாய் பல்லவி. ப்ரேமம் படத்தை தெலுங்கு, தமிழில் ரீமேக் பண்ணலாம் என்று பல தயாரிப்பாளர்கள் முயன்றபோது, படத்தில் சாய்பல்லவி நடித்த ‘மலர் டீச்சர்’ ரோலுக்கு வேறு எவரையும் பொருத்திப் பார்க்க - கற்பனை செய்து பார்க்கக்கூட இயலாமல் சமூக வலைத்தளங்கள் பொங்கி எழுந்தன. அவ்வளவு வரவேற்பைப் பெற்ற சாய்பல்லவி இப்போது ‘கலி’ படத்தில் துல்கர் சல்மானுடன் எந்த ஒப்பனையும் இல்லாமல் நடித்துள்ளார்.

ஒருதலை இராகம், உயிருள்ளவரை உஷா, புதுக்கவிதை என அந்தக் காலத்திலேயே கதாநாயகிகள் முகத்தில் தோன்றும் பருக்களோடு நடித்துள்ளார்கள். அது ஒரு அழகுக்குறைபாடாகக் கருதப்படாமல், வெற்றி நாயகிகளாக வளர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் நமது இளம் பருவ ஆண்கள், பெண்களின் மிகப் பெரும் கவலை முகப்பரு. இந்தக் கவலையைத் தூண்டிவிட்டு பன்னாட்டு அழகுப்பொருள் நிறுவனங்கள் கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கின்றன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு முகப்பருக்களை மறைக்காமல் நடித்துள்ளவர் சாய் பல்லவி. ‘கலி’ யில் எந்த ஒப்பனையும் இல்லாமல் நடித்து ஒரு அழகுக்குப் புது இலக்கணத்தைத் தருகிறார். ( தி தமிழ் இந்து நேர்காணலில் ஒரு கேள்வி)

**‘கலி’ படம் முழுக்க, ஒப்பனை இல்லாமலே வருகிறீர்களே?**

படத்தின் இயக்குநர் சமீர் உங்களுக்கு மேக்கப் வேண்டுமா? என்று கேட்டார். ஒப்பனை போட்டுப் பார்த்த பிறகு, முன்னால் இருந்த முகமே நன்றாக இருந்தது. சொன்னவுடன் சமீரும் அதை ஏற்றுக்கொண்டார்.

முதலில் என்னுடைய குறைபாடுகள் மேல் எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியதற்கு, அல்போன்ஸுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அவர் ’பிரேமம்’ படத்தில் ‘மலர்’ கதாபாத்திரம் இயல்பாக இருக்க வேண்டும் என்றே விரும்பினார். மற்ற எல்லாப் பெண்களையும் போல நானும் ஆரம்பத்தில் பருக்களை வெறுத்திருக்கிறேன். ஆனால் அதை மாற்றாமல் அப்படியே நடித்ததுதான் என்மீதான நம்பிக்கையை எனக்கே ஏற்படுத்தியது. இது சின்னச்சின்ன குறைகளைக் கொண்ட இளம்பெண்கள் பலருக்கும் ஊக்கமூட்டுவதாக அமையும்.

என் வாழ்க்கையில் இதுவரை நான் மேக்கப் போட்டதில்லை. அதில் ஆர்வமும் இல்லை. நான் இப்போது எப்படி இருக்கிறேனோ அதைத்தான் விரும்புகிறேன். அடுத்து வரும் படங்களில் இயக்குநர் சொன்னால், ஒப்பனைக்கு நிச்சயம் மறுப்பு சொல்லமாட்டேன். ஆனால் ஒரு விஷயம். அழகுக்கு இவையெல்லாம் முக்கியமில்லை. நீங்கள் யார், என்ன செய்கிறீர்கள் என்பதில்தான் அழகே இருக்கிறது.

-(R.C)


சாய் பல்லவி

# பலி ஆடுகள்

எல்லாத்தயும் வரச்சொல்லிபுட்டு இப்பிடி சும்மாவே இருந்தா என்னா அர்த்தம் என அனைவரின் மௌனத்தைக் கலைத்தான் மயில்சாமி.

அது ஒன்லீங்கன்னா இத்தன வயிசுக்கப்பொற நம்ம மதினி ஏதோ ஒரு ஆளுகோட அப்பிடி இப்பிடி பேசிகிட்டு பழகிகிட்ருக்கா ஏதோ கண்ணாலங்கூட கட்டிக்கப்போகுதுன்னு அரசல்புரசலா ஊருல பேசிகிறாங்கோ அதபத்திப் பேசதா எல்லாத்தையும் வரச்சொல்லியிருந்தோம்.

இதுதானாக்கும். நாங்கூடா என்னமோ ஏதோன்னு பதறிக்கிட்டிருந்தேன். இப்ப போலாம் பொறவு போலன்னு நாளக் கடத்திகிட்டிருந்தேன். ஆபீசுல அம்புட்டு வேல, அதுக்குத் தோதா என் நண்பனோட பெரியப்பாருக்கு ரெண்டாங் கண்ணாலம் வந்துச்சா, அதச் சாக்கா வச்சுதான் ஒரெட்டு வரமுடுஞ்சுச்சு.

யாரு ஆறுமாத்திக்கி முன்னாடி கெழவி ஒன்னு செத்துச்சே, அந்தக் கெழவி புருஷனுக்கா கண்ணாலம் அவுருக்கு அறுவது வயச நெருங்கோணுமே புள்ள குட்டியல்லா இருந்துச்சே அவங்கல்லா கவனிக்கிலியாக்கும்?

கவனிக்கிறாங்களோ இல்லியோ மக்க மருமக்ககிட்டப் போயி, சோறூத்து, தண்ணியூத்துன்னு நிக்கோணுமா அவுரு ஆம்பள தானே வயசான காலத்துல ஒத்தாசைக்கு ஒரு ஆளுவேணுமுல்லோ, அவுருக்குத் தோதான ஒரு ஆளப்பாத்துக் கண்ணாலம் கட்டுனுதுல என்ன தப்பு? சரி அதவுடு கண்ட நாயத்த பேசியிட்டு நம்மூட்டு நாயத்த வுட்டுட்டோம் பாருங்க. வள்ளிக்கண்ணு மதினி வந்துடுச்சா பாரு. அதவொரு சத்தம் போட்டுவுட்டுப் போவோனும். ரெண்டு பயலுகளும் அவளப் பாடாப் படுத்துவானுங்க இருட்டறதுக் குள்ள வூடுபோய்ச் சேரோணும்

மணி ஆறாவுதல்ல. அவ வர்ர நேரந்தான். வரவிட்டு செத்த நல்ல புத்திமதி சொல்லுங்கோண்ணா அவயென்ன புருசன எழந்தவ மாதிரியா இருக்கா? பூவும்பொட்டுந்தான் வக்கறதில்லயே ஒழிய மத்தபடி நாளுக்கொரு சேல, தினுசு தினுசா கட்றதென்ன? அதுக்கு மேட்சிங்கா ரவிக்க போடறதென்னா? வயிசுப் புள்ளயாட்டம் ஜடைபோட்டுக்கிட்டு தலசீவிச் சிங்காரிக்கறதென்ன? ரெம்பதா மினுக்குறா என வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் மனோன்மணியைப் பற்றிப் பேச்சு பேசினாள் அன்பழகனின் தங்கை ஆராயி. சில வருடங்களுக்கு முன்பு....

எல்லாரு வாங்க எங்க வூடு சின்னதாத்தாயிருக்கு. செத்த பொறுத்துக்கோங்கோ ஆம்பளகெல்லாம் பந்தக்கடிய நாக்காலியில ஒக்காருங்க. பொம்பளங்க வூட்டுக்குள்ள வந்தொக்காருங்கோ. இந்த இப்ப காப்பித் தண்ணி பலகாரத்துக்கு ரெடி பண்றேன். அதுக்குள்ள மணியு வந்துருவாள், என மனோன்மணியின் அம்மா சொல்லிக்கொண்டிருக்கும்போதே மனோன்மணியம் வந்துசேர்ந்தாள்

உற்றார் உறவினர்களைப் பேந்தப்பேந்தப் பார்த்துக்கொண்டே யாரும்மா இவங்க இம்புட்டுப்பேரு வந்திருக்காங்க என்றாள் மனோன்மணி

ஒங்கண்ணாலத்துக்கு நிச்சியம் பண்ண வந்திருக்காங்க வொங்க அப்பனோட ஒன்னுவிட்ட தங்கச்சி பயதா அவுரும் ஒன்னமாதிரியே பத்தாங்கௌாசு படிச்சிட்டு டவுன்ல ஏதோ வேல பாக்கறாறாம் பேருகூட அம்பழகனாம்.

ஏம்மா நா இப்பத்தான பத்தாங்கிளாஸ் பரிச்சியே எழுதியிட்டு வந்திருக்கேன். எனக்கு இப்போதக்கி கண்ணாலம் வேணாம். நான் இன்னு நெறயப் படிக்கோணும் டீச்சர் வேல வாங்கோணும். அதுக்கப்புறம் எனக்கு கண்ணால கட்டி வைங்க.

இவ யாருடி கூறுகெட்டவளாயிருக்கா நீ வயிசுக்கு வந்து ரெண்டு வருசமுடுஞ்சு மூனாவுது வருச வரப்போவுது இனியு எத்தினி நாளாக்கி இப்பிடி வூட்டோடயே வச்சிருக்குறது நெருப்ப மடியில கட்டுன மாதிரியல்லோ இருக்கு. நீ அழகாவேற பொறந்துட்டியா, காலாகாலத்துல ஒனக்கொரு கண்ணாலம் பண்ணாத்தா எங்களுக்கு நிம்மிதி.

ஏம்மா எனக்கு கண்ணாலமுன்னு சொல்றீங்க என்ன ஒரு வார்த்த கேட்குறதில்லயா? மாப்ளா யாரு எவுரு? கருத்தவனா செவத்தவனா? வயிசுப்பயல கௌவாடியா? எனக்குப் புடுச்சிருக்கா இல்லியா? எதாச்சு என்னியக் கேட்டீங்களா

அடி கூறுகெட்ட குப்பாயி ஒன்ன ஏண்டி கேக்கச் சொல்ற? நம்மெல்லாம் பொம்பளங்கிடி. வுங்க அமாய கேட்டா வுங்க அப்பிச்சிக்கு கண்ணாலம் கட்டினாங்களா? இல்ல என்னக் கேட்டு உங்க அப்பனுக்குக் கட்டி வைச்சாங்களா இதெல்லா ஆம்பளங்க பாத்து முடிவு பண்றது. அவுங்க பாத்து கழுதக்கி கழுத்த நீட்டச் சொன்னாலும் நாமோ நீட்டோனுமுடி. நாம பொறந்ததும் அப்பனுக்குக் கட்டுப்பட்டு கெடக்கோனு கண்ணால ஆனதும் புருஷனுக்கு கட்டுப்பட்டு வாழோனு பைய பொறந்த கடசிவரக்கும் அவனுங்க காலுக்கடியில கெடந்து சாகோனு இது நம்ம தலயெழுத்து நம்மல யாரும் கேட்க மாட்டாங்கடி நம்ம பொறப்பு அப்பிடி. நீ போயி கை காலு மூஞ்சிய கழிவி துணிய மாத்தியிட்டு அந்த தெரட்டிக்கு வந்த சேல கட்டியிட்டு ரெடியாவு

இதற்குமேல் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்த மனோன்மணி வேறு வழியில்லாததால் அவள் அம்மா சொன்னது போல் தயாரானாள். இரவு ஒன்பது மணிக்கு மேல் மனோன்மணியின் திருமணம் நிச்சயமானது. திருமண வயது பதினெட்டு என சட்டம் சொன்னாலும் சேரிகளில் பெண் வயதுக்கு வந்தவுடன் ஆறு மாதம் ஓர் ஆண்டுக்குள் குழந்தைத் திருமணம் கட்டாயம் நடந்துவிடும் மனோன்மணி மட்டும் என்ன விதிவிலக்கா? இந்த இரண்டாண்டுகளைக் கடத்தியதே பெரிய விசயம்தான்.

பதினைந்து வயதில் திருமணம் பதினேழு வயதில் இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என மனோன்மணியின் வாழ்க்கை ரெக்கைகட்டிப் பறந்தது. குழந்தை குட்டியென ஆனதும் கணவரின் வருமானம் குடும்பம் நடத்துவதற்கு கட்டுப்படியாகவில்லை கணவருக்கு உதவியாக ஏதாவது வேலைக்குச் சென்றால் குடும்பம் தற்காலிகமாக மூச்சுவிடும் என்ற நிலையில் மனோன்மணி காட்டு வேலைகளுக்குச் செல்லத் தொடங்கினாள். குழந்தைகளை பால்வாடியில் விட்டுவிட்டு வீட்டிற்கு அருகில் இருக்கும் தோட்டங்களுக்கு மட்டுமே காட்டு வேலைக்குச் சென்று வந்தாள்

கணவரை எதிர்பார்க்காமல் தனக்கும் தன் குழந்தைகளுக்கும் தேவையானவற்றைத் தன்னுடைய உழைப்பில் பூர்த்தி செய்து கொண்டதில் பேரானந்தத்தைக் கண்டாள். ஆனால் மனோன்மணி காட்டு வேலைக்குச் செல்வதால் தன்னுடைய கட்டை மீறிச் சென்று விடுவாளோ அல்லது அவளது அழகு மற்ற ஆண்களை ஈர்த்துவிடுமோ என்ற அச்சத்தில் மனோன்மணியை காட்டு வேலைகளுக்குச் செல்ல வேண்டாம் எனக் கட்டுப்பாடு போட்டுவிட்டு தன்னுடைய உழைப்பை கூட்டிக் கொள்ளத் தொடங்கினான் அன்பழகன்.

தான் பெற்ற இரண்டு குழந்தைகளுடன் தன் கணவரோடு பிறந்த மற்றவர்களுக்கும் இரண்டாம் தாயாக தன் குழந்தைகளாகவே பாவித்து வளர்க்கத் தொடங்கினாள் மனோன்மணி. மற்றவர்கள் வேலைக்குச் சென்றால் அந்த வருமானத்தை அவர்களின் எதிர்காலக் கணக்கில் சேமிக்கத் தொடங்கினாள். அந்தச் சேமிப்பு வளர்வது போல் அவர்களும் வளரத் தொடங்கினார்கள். அவரவர்கள் சேமிப்பில் அவரவர்களுக்குத் திருமணத்தையும் நடத்தி முடித்துத் தனித்தனியாகக் குடியமர்த்தி தன் கண்காணிப்பில் வைத்துக் கொண்டாள் மனோன்மணி.

தனக்கு மறுக்கப்பட்ட கல்வி தன் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்ற வெறியில்தான் காட்டு வேலைகளுக்குச் செல்லத் தொடங்கினாள். அதுவும் தன் கணவருக்குப்பிடிக்கவில்லை என்றதும் அந்த வேலைக்கும் செல்லவில்லை. ஆனால் தன் கணவரிடம் கெஞ்சி கூத்தாடி ஒரு தையல் மெஷின் வாங்கி தரச்சொல்லித் தைத்துப் பழகி தையல் தொடர்பான புத்தகங்களை வாங்கிப் படித்து நைந்துபோன சின்னச் சின்ன துணிகளைத் தைக்கத் தொடங்கி தனக்கு தேவையான ஜாக்கெட்டுகள் தன் குழந்தைகளுக்குத் தேவையான துணிகளைத் தானே தைத்துக் கடையில் வாங்கும் வேலையைத் தவிர்த்துக் கொண்டாள். நாளடைவில் தையல் கலையில் கைதேர்ந்தவளாகி, அந்தக் கிராமத்தில் சிறந்த தையல் கலைஞர் என்ற பெயருடன் தன் கணவரின் வருமானத்திற்கும் துணைபுரிந்தாள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாட்டுக்கறி எடுத்து மனோன்மணி சமைத்தால் அது தாழ்த்தப்பட்ட மக்களின் உணவு என்ற உணர்வைத் தாண்டி அதன் மனம் சுவை சேரியைத்தாண்டி ஊருக்குள் புகுந்து உயர்சாதியினரையும் திருட்டுத்தனமாக உண்ணத்தூண்டும். தையல் கலையைவிட சமையல் கலையில் மிகவும் திறமையானவள் மனோன்மணி என்பதை அவள் சமைக்கும் ஒவ்வொரு உணவும் சேரிக்கும் ஊருக்கும் சொல்லும்.

பட்டாம்பூச்சியாகப் பறந்து ஓடி வாழ்ந்த அவளது வாழ்க்கையில் பேரிடியாக இறங்கியது அன்பழகனின் மரணம். ஒரு விபத்தில் மரணமடைந்த அன்பழகனின் உருவம் சிதைந்து சின்னாபின்னமாகி ஓலைப் பாயில் உருட்டிக் கட்டியிருப்பதைக் கண்ட மனோன்மணி தலைவிரிகோலமாக பத்துபேர் இறுக்கிப் பிடித்தும் திமிறிக் கொண்டு ஓலைப்பாயில் விழுந்து அழுத விதம் பார்ப்போரையெல்லாம் கண்கலங்கி கதி கலங்க வைத்தது.

அன்பழகனை இழந்து ஒரு மாதம் ஆனபின்பும் அவனின் இழப்பை ஈடுசெய்ய முடியாத மனோன்மணிக்கு உலகமே இருண்டுபோனது போன்ற ஒரு உணர்வு. திரும்பும் திசையெல்லாம் அன்பழகனின் உருவமே காட்சி அளித்தது. பகல் ஒரு வழியாக ஓடினாலும் இரவு அவளை இம்சை செய்தது. தானும் தற்கொலை செய்து கொள்ளலாமா என்ற எண்ணம் வந்து வந்து போய்கொண்டிருந்தது. தனது தோழியின் ஆறுதல் மொழிகளால் தன்னைத் தேற்றிக்கொண்டாள்.

அன்பழகன் விபத்தில் இறந்ததற்கு உரிய இழப்பீட்டைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்களைப் பெறுவதற்காகத் தோழியுடன் அரசு அலுவலகங்களுக்குச் செல்வது ஒரு புதிய வேலையாக வந்தது.

என்னம்மா உங்களுக்கு என்ன வேணும்?

அய்யா இவ வூட்டுக்காரு போனமாச ஆக்சிடெண்ட்ல செத்துப்போயிடாருங்க. டவுனாபீசுல செத்துப் போன சட்டிபிகேட்டெல்லாங் குடுத்துட்டாங்க. வாரிசு சாட்டிபிகேட்டும், வெதவ சட்டிபிகேட்டும் வேணுமுங்க. மணியக்காரர்கூடக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துட்டாருங்க. இதுல தாசில்தாரய்யாகிட்டு ஒரு கையெழுத்து வாங்கிக் குடுத்தீங்கின்னா உங்க புள்ளகுட்டியெல்லா நல்லாருக்குங்க என்றாள் தோழி

கையெழுத்து வாங்கி குடுக்கிலீன்னா எம்புள்ள குட்டியெல்லா நாசமாபோயிடுமா என்ன பேச்சு பேசுற நீ ? போயிட்டு ரெண்டு நா கழுச்சு வா வரும்போது இது ஆக்சிடெண்ட் கேசு, நெறய பண வரும். அதனால ஒரு ரெண்டாயிரம் ரூவா பணங்கொண்டா என்றான் வட்டாட்சியர் அலுவலக எழுத்தர் காளிங்கராயன்.

அம்புட்டுக் காசுக்கு இவ எங்க போவாங்கய்யா அவளே புள்ளக்கி காலேஜில பணங்கட்ட முடியலேங்குறதுக்குதான், மகளிர் சங்கத்துல ஏதோ ஒதவி செய்வாங்கன்னு இந்த சட்டிபுகேட்டு வாங்க வந்திருக்கா என்றாள் தோழி

அப்பிடியா அப்போ போயி நீங்க வூட்ல இருங்க, ஆர் ஐ வந்து வெசாரண செஞ்சதுக்கப்புறம் தாசில்தாருகிட்டக் கையெழுத்து வாங்கித்தாரேன். எப்பிடியும் ரெண்டு மாசம் ஆயிடும். அதுக்கப்புறம் வாங்க என்றான் காளிங்கராயன், மேலும்

சரி ஒன்னு செய்யுங்க இன்னக்கி வெள்ளிக்கெழம, நாயித்துகெழமன்னிக்கி அந்தப் பொண்ண மட்டும் வரச்சொல்லு. தாசில்தாருகிட்டக் கையெழுத்து வாங்கி வக்கிரேன், எனச் சொல்லி மனோன்மணியைக் கடித்து தின்பவனைப்போல் காமவெறியோடு பார்த்தான் காளிங்கராயன்.

இவற்றையெல்லாம் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மதியழகன் வேகமாக வந்து, ஏண்டா நீயெல்லா திருந்தவேமாட்டியா? அவங்களே ஏதோ சிறுகச்சிறுகச் சேமிச்ச காச சீட்டுக் கம்பெனியில பறிகொடுத்தவங்க மாதிரி வந்து நிக்குறாங்க. அவங்கக்கிட்டப்போயி நாயித்துக் கெழம வா, திங்கக்கெழம வான்னுகிட்டு, உங்களுக்கு என்னமா வேணும்? என்று கேட்டான்

அய்யா இந்த பேப்பர்ல உள்ளமாதிரி சட்டிபிகேட்டு வேணுமுங்க என நீட்டினாள் தோழி.

அதக்குடுமா கணக்குப்பிள்ள ஆர்.ஐ.யெல்லாம் கையெழுத்துப் போட்டிருக்காங்களா? சரி நீங்க எந்த ஊருமா? என்றான் மதியழகன்.

நாங்க அம்பேத்கார் நகர் சேரிங்க.

நானும் அந்தப் பக்கமாதா எங்க வீட்டுக்கு போகணும் தாசில்தாருகிட்டக் கையெழுத்து வாங்கியிட்டு சாயங்காலமா கொண்டு வர்ரேன். நீங்க போங்கம்மா என்றான் மதியழகன்

ஒரு நல்ல மனிதரைச் சந்தித்த மனநிறைவு மனோன்மணியின் முகத்தில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணியது ஒரு பேரிழப்பிலும் மன ஆறுதல் கிடைத்தது. சொன்ன மாதியே மாலையில் அவளது வீடுதேடி சான்றிதழைக் கொடுக்கச் சென்றான்.

இந்தாங்கம்மா நீங்க கேட்ட சட்டிபிகேட் என்று நீட்டினான் மதியழகன்

நீங்க பொண்டு புள்ளங்களோடு மகராசனா நல்லாயிருக்கோனு சாமீ என கையெடுத்து கும்பிட்டு அதை வாங்கிக்கொண்டாள் மனோன்மணி.

நீங்க யாரு எவுருன்னு தெரியாதுங்க. இல்லேனா, காப்பித் தண்ணியாவுது வெச்சுக் குடுத்துரு வோமுங்க எனக் கூறிக்கொண்டே தன் இளைய மகளைப் பார்த்து ஏ மங்கா... இங்க வா... சாருக்குப் போயி கலரு வாங்கியாடி என்றாள் மனோன்மணி.

அதெல்லா வேண்டாம்மா கொஞ்சம் தண்ணி மட்டுங்கொடுங்க என்றான் மதியழகன்.

வேண்டாமுங்க, நாங்க தாழ்ந்த ஜாதிக்காரங்க, எங்க வீட்டுல நீங்கெல்லா தண்ணி குடிக்கக்கூடாதுங்க என மறுத்தாள் மனோன்மணி.

அப்பிடீன்னா நீங்க காப்பி வைங்க நா குடிச்சிட்டுதான் போவேன்னு பிடிவாதமாகக் காபி வாங்கி குடித்துவிட்டு, சரிம்மா நான் கெளம்புறேன், எல்லாத்தயும் முடுச்சுட்டு ஒரு நாளக்கி ஆபீசுக்கு வாம்மா ஆதரவற்ற விதவைன்னு ஒரு சட்டிபிகேட்டு வாங்கித் தாறேன். அத வைச்சு உங்க படிப்புக்குத் தகுந்த வேலய கவர்மெண்டுல வாங்கியிடலாம் என சொல்லி விட்டு விடைபெற்றுச் சென்றான் மதியழகன்.

மதியழகனின் முயற்சியால் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே அலுவலக உதவியாளராக மனோன்மணிக்கு வேலை கிடைத்தது. தன் இரண்டு மகள்களையும் நன்றாகப் படிக்க வைத்து நல்ல வேலையும் வாங்கி அவர்கள் விருப்பத்திற்கு திருமணமும் செய்து வைத்து விட்டாள் மனோன்மணி.

அதற்கு உதவியாகவும் உறுதுணையாகவும் மனோன்மணிக்கு மதியழகன் இருந்ததினால், இவர்களைப்பற்றி அக்கம்பக்கம் மட்டுமில்லாது அலுவலகத்திலும் இருவருக்குள் தொடர்பு இருக்குமோ என்று அரசல்புரசலாக பேசத் தொடங்கினார்கள். மனோன்மணிக்கு மற்றவர்களின் காமப்பார்வையிலிருந்து, டே இது மதியோட ஆளுடா வம்பு வந்துரும்டா என ஒதுங்கி ஒரு பாதுகாப்பையும் தந்தது, இந்தசூழ்நிலையில் தான் அவளது உறவினர்கள் மனோன்மணியின் வீட்டுக்கு வந்திருந்தனர்.

வா மதினி எப்புட்டு நேரமா ஒனக்காகக் காத்து கிட்டிருக்குறது இவ்வளா நேரமாவா ஆபீசு இருக்கு என்றான் மயில்சாமி.

இல்ல மயிலு, தாசில்தாரு மீட்டிங்கில இருந்ததுனால அவருக்கிட்டச் சொல்லியிட்டு வர்றதுக்கு நேரமாயிடுச்சு, நீ எப்ப வந்த? பசங்க தங்கச்சியெல்லா நல்லாருக்காங்களா? என தன்னைவிட வயதில் இளையவரான அன்பழகனின் தம்பியிடம் கேட்டாள் மனோன்மணி.

எல்லா நல்லாருக்காங்க. மதினி நான் நாலு மணிக்கே வந்துட்டேன். இங்க என் நண்பனோட பெரியப்பாருக்கு ரெண்டாங்கண்ணாலம் அதுக்கு வந்தேன். அதான் ஒரெட்டு வுங்களையும் பாத்துட்டுப் போலாமுன்னு இருந்துகிட்டேன் என்றான் மயில்சாமி.

சரி ரெம்பா நா கழுச்சு வந்திருக்க இரு இட்லி சுடுரேன் சாப்பிட்டு போ என்றாள் மனோன்மணி

ஏன் நாங்கெல்லா சோறு போடமாட்டமாக்கும். மொத நீ எதுக்கு வந்தயோ அதச் சட்டுபுட்டுன்னு கேளுண்ணா வெளியில் தல காட்ட முடியல என்றாள் ஆராயி

ஏன் நீயே கேக்குறது. அன்னாடு ஒருத்தனக் கூட்டியாந்து வூட்டுல படுக்குறனா? லீவ போட்டுட்டு நித்த ஒருத்தனோட ஊரு சுத்துறனா? இல்லாட்டி எவனயாச்சு கூட்டியிட்டு ஓடிட்டினா? எனத்த கேக்கச் சொல்றா என வெடித்தாள் மனோன்மணி.

இல்ல மதினி, ஒனக்கு வேல வாங்கிக் கொடுத்த ஆளோட ரெம்ப நெருங்கிப் பழகுறியாம். ஊர்ல ஒரு மாதிரியா பேசுறாங்கலா அதெல்லா வேணா மதினி என்றான் மயில்சாமி.

ஒங்கண்ணன் கருமாதிய முடுச்சுட்டு போனவன் நீ. இப்ப வந்திருக்க இங்க வந்தா நான் ஒன்ன வெச்சுக்குவேன்னு ஒம் பொண்டாட்டி சொன்னான்னு சொல்லி இந்தப் பக்கமே தல வச்சுப்படுக்காத நீ, இப்ப பேச வந்துட்ட.

ஒன்ன நா பெத்த மகனாட்டம் தானே பாத்துக்கிட்டேன். ஒன்ன நா வச்சுக்குவேனா, ஒனக்கு புத்தியில்ல ஏ நீயுந்தானே கவர்மெண்டுல வேல பாக்குற, ஒருநாளாவது ஒங்க அண்ண புள்ளங்கன்னு எம்புள்ளங்களுக்கு ஒரு எண்ணெ சீயக்கா வாங்கி குடுத்திருப்பியா? இல்ல நோம்பு நொடின்னு ஒரு நல்லது கெட்டது வாங்கியாந்திருப்பியா?

ஏதோ அந்த புண்ணியவான் வந்து ஒரு வேல வாங்கிக் கொடுத்து என்னையும் எம்புள்ளகளையும் கரை சேத்துனாரு, இல்லாட்டி நானும் எப்புள்ளங்களும் தெருவுல பிச்ச எடுத்துட்டுத்தான் இருந்திருப்போம், அவரப்போயி... டே அவரப்பத்தி ஒனக்கு என்னாடா தெரியும்? ஒங்க அண்ணனாட்ட பெரிய குடும்பத்துல மூத்தவரா பொறந்ததால எல்லாத்தையும் கர சேத்தியிட்டு, வயசாயிடுச்சுன்னு கண்ணாலங்கூட பண்ணிக்காம, என்னமாதிரி பாவப் பட்டவங்களுக்கு ஒதவி செஞ்சுகுட்டு, வாங்குற சம்பளத்துல நாலு அனாத புள்ளங்களப் படிக்க வச்சுகிட்டிருக்காரு. அவரப்போயி நாக்குல நரம்பில்லாம பேசுறேயே என்று தன் ஆத்திரத்தை கொட்டித் தீர்த்தாள் மனோன்மணி.

– தொடர்ச்சி 27 பக்கம்

# தலை முடியினால என்ன யூஸ்?

விஜய்பாஸ்கர்

பதினைந்து நாட்களுக்கு முன்னர் என் மகளுக்கு முடிவெட்டச் சென்றோம். வெயிலுக்கு முடியைக் குறைத்து விடுங்கள் என்று சொன்னேன். இதற்கு மனைவியும் மகளும் எதிர்ப்பு. மீடியமாக வெட்டலாம் என்று ஆலோசனை சொன்னார்கள்.

சலூன்காரர் குழம்பி சின்னதாகவே வெட்டி வைத்துவிட்டார். மறுநாள் பள்ளிக்குச் சென்று திரும்பிய என் மகள் சிணுங்கிக் கொண்டே இருந்தாள். விஷயம் கேட்டேன்.

அவள் முடிவெட்டிக்கொண்டதை நான்கு பெண்கள் கிண்டல் செய்திருக்கிறார்கள். பள்ளி ஆசிரியைகளில் இருந்து, சக தோழிகளின் அம்மாக்களில் இருந்து, பாட்டுச் டீச்சர் வரை.

பாட்டுச் டீச்சர் ஒருபடி மேலப் போய் "உன்ன அடுத்த வாரம் ஸ்டேஜ்ல பாடவைக்கணும்ன்னு இருந்தேன். நீ என்ன இப்படி வெட்டிட்ட" என்றிருக்கிறார். இது அவள் மனதை அதிகம் பாதித்திருக்கிறது. நெடுநேரம் பேசிய பிறகே அவளை சமாதானப்படுத்த முடிந்தது. ஆதிகால ஆண் பெண் மானுடவியல் பற்றியெல்லாம் பேசவேண்டியதாய்ப் போயிற்று.



"முடியினால என்ன யூஸ் அதச் சொல்லு. ஒண்ணுமே இல்ல. நீளமா முடி வளத்திருக்கும் போது எவ்வளவு எரிச்சலா இருந்திச்சி. இப்ப எப்படி இருக்கு பாரு? லைஃப்ல எப்பவுமே முடி வளக்காத. ஃப்ரீயா இரு. முடிவெட்டுன பிறகு தலை அசைச்சிப் பாரு எவ்வளவு ஃப்பிரியா இருக்கு. இதுதான் சந்தோஷம். தலை பின்ன வேண்டாம். ரிப்பன் கட்ட வேண்டாம்."

அப்ப அம்மா மட்டும் முடி வளத்துருக்காங்க?

அம்மா கிட்ட நா முதல்லேயே சொன்னேன். சின்னதா வெட்டிக்கன்னு. அவுங்க கேக்கல. நான் ஒரு டெக்னிக் சொல்றேன் கேளு

'ம்ம்ம்'

"முடிய நீளமா வெச்சிருக்கிறவங்க எல்லாரும் முட்டாள்ன்னு நினைச்சிக்க. அம்மா, ஆச்சி, அத்தை, டீச்சர் எல்லாரும் முட்டாள்தான். ஆனா அத வெளிய சொல்லாத. சொன்னா உன்ன எல்லாரும் திட்டுவாங்க. அதனால மூஞ்சிய இப்படி வெச்சிக்கிட்டு ஒரு சிரிப்பு சிரிக்கணும் சரியா"

சிரித்துக் காட்டினேன். தொடர்ந்து கண்ணாடி முன் நிறுத்தி.

"இதே மாதிரி சின்ன முடியோட வாழ்க்கை முழுசும் இருந்தா உனக்கு நிறைய டைம் கிடைக்கும். இல்லாட்டி முடி வாருறதுக்கே டைம் எல்லாம் வேஸ்டாகும். அத எடுத்துட்டு லொங்கு லொங்கு நடக்கணும். ஆனாலும் நீ பெரிய பிள்ளை ஆகும் போது உன்னச்சுத்தி உள்ளவங்க எல்லாம் சேர்ந்து மாத்திருவாங்க அதான் அப்பாவுக்கு கவலையா இருக்கு"

என்று உண்மையிலேயே கவலைப்பட்டு, எப்படியோ சுத்தி வளைத்துச் சமாதானப் படுத்தினேன்.

அவள் விகடனில் முடி உதிர்வதைப் பற்றி மூன்று பக்கக் கட்டுரை போட்டிருக்கிறார்கள். கட்டுரையைக் கூட நான் குறை கூறவில்லை. நீளமாக முடி வளர்க்க ஆசைப்படும் பெண்களுக்கு அது உபயோகமாகும். ஆனால் அக்கட்டுரையில் சிறிய பத்தியில் பெண் கட்டாயம் முடி வளர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் எழுதியிருக்கலாம். அதுபற்றிப் பெரியார் போன்றவர்கள் சொன்னதை கொடுத்திருக்கலாம். ஒரே வட்டத்துக்குள் திரும்ப திரும்ப பெண்களை இழுத்து விடுவதை அறிந்தோ அறியாமலோ பெண்களே செய்து வருகின்றனர்.

பெண்களுக்காக வரும் இதழ்கள் அதை மிக அழகாகச் செய்கின்றன. அவள் விகடனில் ராசி பலன்கள் போடுகிறார்கள். ஜோசியத்தினால் இன்னும் எத்தனைப் பெண்கள் வாழ்க்கை துன்பமாகிக் கிடக்கின்றன என்று அவள் விகடனுக்கு தெரியுமா?

பெரியார் பெண்கள் உரிமை பற்றி சொன்ன கருத்துக்களை ஹைலட் செய்து அவள் விகடனோ, குங்குமம் தோழியோ, குமுதம் சிநேகதியோ என்றாவது ஒரு ஸ்பெஷல் எடிஷன் கொண்டு வந்திருக்கிறதா? செய்ய மாட்டார்கள்.

இதுமாதிரியாகப் பெண்களுக்கு என்று வரும் இதழ்களுக்குக் கடைசிவரை பெண்கள் 'இந்திய நளினத்தைத்' கொண்டாடிக்கொண்டே இருக்க வேண்டும். அதற்கு மேல் பெண்கள் யோசித்து விடக்கூடாது என்பதில் குறியாய் இருக்கின்றனர்.

ஒரு வட்டத்தைத் தாண்டிச் சிந்திக்க முடியாமல் அப்பத்திரிக்கை ஆசிரியர்களின் மூளை துருப்பிடித்துக் கிடக்கின்றன. நான் ஒரு பெண்கள் பத்திரிக்கையை நடத்தினால் முடியைச் சிறியதாக வெட்டிக் கொள்வதை தொடர்ந்து பிரச்சாரம் செய்வேன்.

இன்று அடிக்கடி மாரத்தான் ஓடி கொள்கைகளை வலியுறுத்துகிறார்களே அது மாதிரியான ஒரு மாரத்தானுக்கு ஏற்பாடு செய்வேன். ஓட்டம் முடியும் போது உரிமைக் கருத்தில் விருப்பமுள்ள பெண்கள் அவர்கள் முடியை ஒட்ட வெட்டிக் கொள்ளலாம். வேண்டாத நீளமுடியை ரோட்டில் தூக்கி வீசலாம். ரோட்டில் வரும் போகும் சமூகத்தின் முகத்தில் அது படட்டுமே. என்ன இப்ப வந்துச்சி...

# இந்து மத தேசியவாதத்தின் பொய்யான கூற்றுகள்

- மேக்நாத்தேசாய்
தமிழில் : **விடுதலைமொழி**

**இந்துமத தேசியவாதக் கோட்பாட்டின் முதன்மை கூற்றுகள்:-**

பாரதவர்ஷா அல்லது ஆர்யாபூமி போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த இந்தியா வரலாற்றுக் காலத்துக்கு முன்பிலிருந்தே ஒரே நாடாகத்தான் உள்ளது.

இசுலாமியர்கள்தான் வெளிநாட்டினர்:- எட்டாம் நூற்றாண்டில், வட-மேற்கில் இருந்து வந்த இசுலாமியப் படையெடுப்புகள்தான் இந்தியாவை அடிமைப் படுத்தின - முகமதுபின்காசிம், முகமதுகஜினி, தில்லி சுல்தான்கள், முகலாயப் பேரரசு என அப்பட்டியல் தொடர்ந்தது. ஆரியர்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து இந்தியாவிற்குள் புகுந்த வெளிநாட்டினர் என்ற உண்மையை மறுப்பதற்காகவே "இசுலாமியர்கள்தான் வெளிநாட்டினர்" என்ற பொய்யைத் தொடர்ந்து சொல்லிவருகின்றனர். இன்றும், ஆரியர்கள் வெளிநாட்டவர்கள் என்ற நேரடியான உண்மையை மறுக்கின்றனர் அத்தேசியவாதிகள்.

ஆங்கிலேயர்கள் (பிரிட்டிஷ்) இந்தியாவை ஒரே நாடாக அறிவிக்கவில்லை. அதற்கு முன்பிலிருந்தே இந்தியா ஒரேநாடுதான்! என்கின்றனர்

மெக்காலே அறிமுகப்படுத்திய கல்விமுறைதான் மேல்தட்டு மக்களை உருவாக்கியது. அவர்கள் மெக்காலேவின் புத்திரர்கள்; எப்போதும் வெளி நாட்டினர் போல் சிந்தித்து நடப்பர்.

1947-இல், 1,200 ஆண்டுகால அடிமைமுறை ஒரு முடிவுக்கு வந்தது. இந்தியா ஒரு இந்து நாடாக ,அதன் உண்மையான அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் சுதந்திரம் கிடைத்தது.

(தேர்தலுக்குப்பின், நரேந்திரமோடி நாடாளுமன்றத்தின் மத்திய அரங்கில் ஆற்றிய தனது முதல் உரையின் போது கூறியது)

இசுலாமியர்களின் விசுவாசம் சந்தேகத்திற்குரியது; ஏனெனில்அவர்களின் நாடு பாகிஸ்தான். அப்படிப்பட்ட இசுலாமியர்களுக்குத்தான் காங்கிரசு - மதச்சார் பின்மையினர் தனிச்சலுகைகளை வழங்கினர்.

இவை அனைத்தும் இந்துமத தேசியவாதக் கோட்பாட்டில் நிலவும் பொய்யான கூற்றுகளாகும்.

**போலி வரலாற்றின் அடிப்படைக்கூறுகள்: -**

இந்துமத தேசியவாதத்தின் பலகூற்றுகள் கருத்தியல் மற்றும் வரலாற்றுப் பிரச்சினைகளை எழுப் புகிறது. அவற்றை நாம் முதலில் ஆராயலாம்.

முதலில், "பூர்வீகக்குடியினர் வெளி நாட்டினர்" என்ற அடிப்படையில் ஒரு சிக்கல் உள்ளது. தெளிவாகப் பார்த்தால் ஆங்கிலேயர்கள் (பிரிட்டிஷ்) வெளிநாட்டவர்கள்தான். ஏனெனில், அவர்கள் செய்வதற்கேற்ப வேலை இருந்த போது மட்டுமே இந்தியாவிற்கு வந்தனர்; இந்தியாவில் நிரந்தரமாகத் தங்கவுமில்லை; ரோடிஷியா அல்லது ஆஸ்திரேலியாவைச் செய்தது போல் இந்தியாவை 'காலனியாதிக்கத்திற்கு' உட்படுத்தவுமில்லை. இது இந்துமத அடிப்படைவாதிகளுக்கு ஒரு பிரச்சனை யாகவே உள்ளது. அவர்களைப் பொறுத்தவரை, 1200 ஆண்டுகளாக இந்தியாவிலிருந்த வெளிநாட்டினர் இந்நாட்டின் பூர்வீகக்குடிகளல்ல; அவர்கள் என்றென்றும் அந்நியர்கள்தான். இது விசித்திரமான கோட்பாடாகவே உள்ளது.

ஏனென்றால், இந்தியாவில் சாகாஸ் (Shakas), ஹன்ஸ் (Huns), ஸ்கைதியர்கள் (Scythians) மற்றும் பல இனங்களைச் சேர்ந்த வெளிநாட்டுப் பழங்குடி மக்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்கள் அனைவரும் இந்துமதத்திற்கு மாற்றப்பட்டனர். அப்படியெனில் இந்துமதத்திற்கு மாற்றப்பட்ட அவர்களும் வெளிநாட்டினர் தானே! அப்படியெனில் ஆரியர்கள்? ஆரியர்கள் திலகரின் வாதப்படி, மத்திய ஐரோப்பா அல்லது ஆர்க்டிக்கிலிருந்து வந்தவர்கள் தானே?

சில தலித் அறிஞர்கள் வாதிடுவது போல அபோரிஜின்கள் (aborigines)– பழங்குடியினர் மட்டுமே இந்தியாவின்உண்மையான பூர்வீகக்குடிகளாக இருக்கக்கூடும் .ஆரியர்கள் வெளிநாட்டவர்கள் என்று கூறுவது இந்துமதத்தை அந்நியமதமாக்கிவிடும். அதனால்தான், இந்துமத தேசியவாதிகள் ஆரியர்கள் வெளிநாட்டினர் என்பதைத் தொடர்ந்து மறுக்கின்றனர்.

ஏனெனில், ஆரியர்களே இந்தியாவின் பூர்வீகக்குடிகள் என்ற கட்டுக்கதைதானே இந்துமத தேசியவாதத்திற்குப் பொருத்தமாக இருக்கும்! ஏதோ இந்துமதம் இந்தியா முழுவதும் உடனடியாக நிறுவப்பட்டதுபோலக் கற்பனைசெய்ய உதவி புரிந்தன வேதங்களும், பார்ப்பனர்களும்! அதன் காரணமாகத்தான் 'இந்து-இந்தியாவின்' பொது மொழி சமஸ்கிருதம் என்று அம்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

மேற்கூறிய அனைத்தும் போலி வரலாற்றின் மிக அடிப்படையான கூறுகள். இன்று பின்பற்றப்படும் இந்துமதத்திற்கும் வேதங்களுக்கும் நெருங்கியஉறவு இல்லை. வேதகாலக் கடவுளர்களை இன்று யாரும் வணங்குவதில்லை. வேதகாலத்திலிருந்து குறைந்தது 1,000 ஆண்டுகளுக்குப் பிறகுதான், பல தெய்வ கோயில்களில் விஷ்ணு, சிவன் மற்றும் காளி ஆகியவை

காணப்பட்டன. பார்ப்பனியம் (இந்து மதத்தை முறைப்படி இப்படித்தான் அழைக்க வேண்டும்) பஞ்சாப் மையப்பகுதியில் இருந்து தில்லி உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் வரை மெதுவாகப் பரவத்தொடங்கியது.

ஆறாம் நூற்றாண்டில், அஜ்விகாஸ் (Ajivikas), ஜைனம் (Jainism) மற்றும் பவுத்தத்தின் (Buddhism) பிரச்சாரம் வாயிலாகப் பாலி (Pali) மற்றும் அர்தமகதி (Ardhamagadhi) மொழிகளின் முக்கியத்துவம் புலப்படுகிறது. பவுத்தத்திற்கும் இந்து மதத்திற்கும் இடையே ஆயிரம் வருடப் போராட்டம் நடந்தது. இறுதியில் இந்துமதம் பவுத்தத்தை வென்றது.

ஆதிசங்கராச்சாரியாரால் விவாதிக்கப்பட்டு பவுத்தம் தோற்கடிக்கப்பட்ட போது இந்தியா ஒரு இந்து நாடாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பவுத்தத்திற்கும் இந்துமதத்திற்கும் இடையே நடந்த மோதலை மறைத்து, மறுத்து புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகக்காட்டுவதுதான் இந்துமத தேசிய வாதிகளின் உத்தி. பவுத்தம் காணாமல் போன ஏழாம் நூற்றாண்டுவரை இக்கருத்து எந்தவேதங்களிலும் இடம்பெறவில்லை. வரலாறு முழுவதிலும், இந்தியாவை ஒரு இந்துநாடாக வரையறுக்க இந்துமதம் போதுமானதல்ல என்றே தோன்றுகிறது.

சாவர்க்கர் இந்துத்துவா பற்றிய தனது கட்டுரையில் இந்த வட்டத்தைச் சதுரமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் ஒருநவீனத்துவ வாதி; மதபக்தர் அல்ல. தேசத்தைப் பற்றிய அவரது கருத்து அய்ரோப்பாவின் நாகரீகமான சிந்தனைகளைத் தழுவியதாக இருந்தது. அய்ரோப்பாவில் 1918 ஆம் ஆண்டில் உடைந்த ஹப்ஸ்பர்க்கின் பேரரசின் இன்னும் பலபாகங்கள்- ஹங்கேரி, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா ஆகியவையின் தேசியம் பற்றிய சிந்தனையாதெனில், அந்தப் பிரதேசத்தில் பிறந்த அனைவரும் அந்தநாட்டின் உறுப்பினர்கள் ஆவர் என்பதாகும்.

சாவர்க்கரின் இந்துத்துவா இந்துமதத்தோடு கட்டப்பட்டதல்ல.

“சிந்து சமவெளியில் பிறந்த அனைவரும் இந்துக்கள்; அவர்கள் இந்துத்துவாவின் ஓர் அங்கம்! இது இசுலாமியர்களைவிட இந்துக்களுக்குத்தான் பொருந்துவது போன்ற உட்கருத்து உள்ளதெனினும், இசுலாமியர்கள் பிறந்த நிலத்திற்கு விசுவாசத்தோடு இருந்தால் அவர்களும் இந்துத்துவாவின் அங்கமாவர்”.

இதுவே சாவர்க்கரின் தேசியம் பற்றிய சிந்தனை .அவரைத் தொடர்ந்து வந்த பல இந்துமத தேசியவாதிகள் இந்துத்துவாவின் கருத்தை அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் சாவர்க்கரின் கொள்கையை அல்ல.

**போலிஅடிமைத்தன சிந்தனை :-**

இந்திய வரலாற்றைப் பொறுத்தவரை, நேருவின் பார்வை உருவாக்கிய கதையைப் போலவே இந்துமத தேசியவாதிகள் உருவாக்கிய கதையும் பாரபட்சமானதுதான். அவை இரண்டுமே வடஇந்தியாவை மய்யமாகக் கொண்டவை. தில்லி மற்றும் அதன் ஆட்சியாளர்களைத்தான் இந்தியா என எடுத்துக்கொண்டனர்.

இசுலாமியப் படையெடுப்புகள் சிந்து மற்றும் சவுராஷ்டிராவிற்கு எட்டாவது நூற்றாண்டில் வந்திருக்கலாம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் தில்லி சுல்தான்களாக உருவெடுத்திருக்கலாம். ஆனால், அவர்கள் ஒருபோதும் விந்தியமலையின் தெற்கே ஊடுருவியதில்லை. எனவே, தெற்கு இந்தியாவில் இசுலாமியக் குடியேறிகள் பற்றி மிகவித்தியாசமான வரலாறு உண்டு. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அவுரங்கசீப் தெற்கே செல்லும் வரை இசுலாமியர்களின் ஆட்சியால் தெற்கு இந்தியர்கள் பாதிக்கப்படவில்லை

தெற்கில் இந்து மற்றும் இசுலாமிய அரசவைகள் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் காணப்பட்டன. மேலும், அசாம் மாநிலத்தை எந்தவொரு இசுலாமிய அரசரும் கைப்பற்றவில்லை. எனவே 1200 ஆண்டுகால அடிமைத்தனம் இந்தியாவில் நிலவியது என்று இந்துமத தேசியவாதிகள் கூறுவது முற்றிலும் பொய்யான கூற்றாகும்.

ஆனால், இந்தியாவைப் பற்றிய உண்மையான வரலாற்றை அவர்கள் கூறப்போவதில்லை. பெரும்பாலான தேசங்களில் உண்மையான வரலாறு இல்லை. விவாதங்களும் மறுவிளக்கங்களும் எப்போதும் நீண்டுகொண்டே போகும். கல்வித் துறையில் நிதி உதவிகள் போன்ற ஆதரவளித்து உண்மையான வரலாற்றைக் கண்டறிய வேண்டும். பொதுநிதியைப் பயன்படுத்தி நடக்கும் ஆய்வுகள் அனைத்தும் பாரபட்சமில்லாதவைதானா? என்பதை உறுதிப்படுத்தமுடியாது. இந்தியாவில் ஆராய்ச்சிக்கு உதவும் வண்ணம் தனியார் தொண்டு நிறுவனங்கள் இல்லை. அரசாங்கம் உயர்கல்வியின் அனைத்துக் கதவுகளுக்கும் காவலர்களாக நிற்கிறது.

முதல் முப்பது ஆண்டுகளாகத் தடையின்றி ஆட்சி செய்த காங்கிரசு அரசின் ஒருதலைச்சார்பு தான் அதற்குக் காரணம். இந்த ஒருதலைச்சார்பு பா.ஜ.க - வையும் ஊடுருவி இன்றும் நிலைத்து வருகிறது. இந்துமத தேசியவாதச் சிந்தனை எனக்கு வருத்த மளிக்க வில்லை. ஆனால், இப்போது அரசாங்கமே இந்தக் கண்ணோட்டத்தைப் பரப்புவதுதான் வருத்த மளிக்கிறது.

– மேக்நாத் தேசாய் எழுதி 'ஹார்ப்பர்காலின்ஸ், இந்தியா' வெளியிட்ட 'மேக்கிங்சென்ஸ் ஆஃப் மோடிஸ் இந்தியா' (Making Sense of Modi's India) என்ற நூலிலிருந்து.

( மேக்நாத்தேசாய், லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் – இல் பொருளாதாரத் துறையில் பணிபுரியும் ஓய்வுபெற்ற கவுரவப்பேராசிரியர். 'The Rediscovery of India', 'Development and Nationhood' ஆகிய நூல்களை எழுதியுள்ளார்)

சான்று-http://scroll.in/article/805376/meghnad-desai-explains-the-fallacies-in-the-idea-of-hindu-nationalism - 20.03.16

சேவூர் கு.செந்தில்குமார்,
இரா.ரவி,
அவிநாசி க.பழனிசாமி



எழவுச்செய்தி சொல்ல மாட்டோம்!
துப்புரவுப்பணி செய்ய மாட்டோம்!!
கோவிலில் முரசு அடிக்க மாட்டோம்!!!

# சக்கிலியர்களின் விடுதலை முழக்கம்



கோகுல்ராஜ் கொலை, டி.எஸ்.பி விஷ்ணுப்பிரியா மர்மத் தற்கொலை, உடுமலையில் சங்கர் கொலை என மேற்கு மாவட்டங்களில் பெரும்பான்மையாக வாழும் இடைநிலை ஜாதியினரின் கோர முகங்களைப் பார்த்து வருகிறோம். உடுமலைப்பேட்டை சங்கர் படுகொலையில் ஊடகங்களின் கவனம் முற்றிலுமாகத் திரும்பியிருந்த நிலையில், ஈரோடு மாவட்டத்தில் நடந்த ஒரு ஜாதியத் தாக்குதல் மக்களின் கவனத்திற்கு வராமலேயே போய்விட்டது.

ஈரோட்டிலிருந்து திங்களூர் செல்லும் சாலையில் உள்ள ரைஸ்மில், புதூர்காலனியில் நடந்த ஜாதியத் தாக்குதல், காவல்துறையின் அலட்சியப்போக்கு, அதனால் தொடர்ந்து நடந்த ஜாதியப் படுகொலை பற்றி- இந்த வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களோடு மக்களாக இயங்கி வரும் நமது காட்டாறு குழு தோழர்கள் தரும் செய்தித் தொகுப்பு:

*ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், நல்லாம்பட்டி ரைஸ்மில், புதூர்காலனியில் கடந்த (10.03.2016) அன்று அண்ணமம்மார் (பொன்னர்சங்கர்) கோவில் திருவிழாவிற்கு வந்திருந்த திங்களூர் செல்லப்பம்பாளையம் கிழக்குப்புதூர் இளைஞர் களான, சக்கிலியர் சமூகத்தைச்சேர்ந்த கிருஷ்ணன், வினோத்குமார், நித்தியானந்தன் ஆகியோர் இரவு 11.00 மணிக்கு திங்களூர் வழியாக ஈரோடு செல்லும் மெயின்ரோட்டில் உள்ள LBP வாய்க்கால் பாலத்தில் மேற்கு புறமாக பைக்கில் ஓரமாக நின்றிருந்தார்கள். அப்பொழுது அந்தப் பகுதியைச் சார்ந்த மாரப்பக் கவுண்டர் மாருதி காரில் அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். வண்டியை ஓரமாக நிறுத்துடா... என்று மரியாதையில்லாமல் கூறியுள்ளார். அதற்கு கிருஷ்ணன் வண்டி ஓரமாகத்தான் நிற்கிறது அண்ணா என்று கூறியுள்ளார்.*

*அதற்கு மாரப்பக்கவுண்டர் கோபத்துடன் எங்களை அண்ணா என்று சொல்லும் அளவிற்கு வந்திட்டீங்களாடா????.. என்று திட்டி, காரின் கதவைத் திறந்து அவர்களை இடித்துத் தள்ளியுள்ளார் பின்பு, நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டுள்ளார் அதற்கு அண்ணா நாங்கள் கிழக்குப் புதூர் (செல்லப்பம்பாளையம்) என்று சொல்லி உள்ளனர். அதற்கு ஏண்டா அண்ணா என்று கூப்பிடுகிறீர்கள் என்று அவர்களைக் கடுமையாக ஜாதியைச் சொல்லி இழிவுபடுத்தித் தாக்கியுள்ளார்.*

## ஜாதியத் தாக்குதலை வேடிக்கை பார்த்த காவல்துறை

அப்பொழுது ரைஸ்மில்புதூர் ஊர்ப்பொது மக்கள் தடுத்து நிறுத்தியுள்ளார்கள். பின்பு அண்ணம்மார் கோவிலுக்குச் சென்று விடுகிறார்கள். மீண்டும் ஆதிக்கச் சாதியினை சேர்ந்த நான்கு பேரை அழைத்து வந்து கோவிலில் மேற்கண்ட மூன்று பேரையும் மட்டும் இல்லாமல் பலரையும் பெல்ட்டால் அடித்துள்ளார். இந்த ஜாதிய வன்கொடுமைத் தாக்குதல் நடக்கும்போது திருவிழாவின் பாது காப்புக்கு வந்திருந்த திங்களூர் காவல் நிலைய SP CID செந்தில்குமார் தாக்குதலைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தது மட்டுமில்லாமல் தாக்குதல் நடத்திய ஆதிக்க ஜாதியினரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லாமல், கடமையைச் செய்யாமல், தப்பிக்கவிட்டு ஆதிக்க ஜாதியினருக்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளார்.

பின்பு, ரைஸ்மில்புதூர் ஊர்ப்பொதுமக்கள் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களைப் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்பு தலித் விடுதலைக் கட்சியைச்சேர்ந்த பொறுப்பாளர்கள் விடுதலைச் செல்வன், சகுந்தலா தங்கராஜ், அப்துல்லா ஆகியோர் துணையோடு புதிய வன்கொடுமைத் தடுப்புத் திருத்தச் சட்டம் 2015-ல் வழக்கு 11.03.2016 அன்று பதிவு செய்யப்பட்டது. உரிய SC/ST சட்டப்பிரிவுகளைச் சேர்க்காததாலும், குற்றவாளிகளைக் கைது செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காததாலும் ரைஸ்மில் புதூர்காலனி, செல்லப்பம்பாளையம், கிழக்குப்புதூர் ஊர்ப்பொதுமக்களும், தலித் விடுதலைக்கட்சி நிர்வாகிகளும் என சுமார் 150-க்கும் மேற்பட்டோர் ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் 14.03.2016 அன்று ஜாதிவெறித் தாக்குதல் நடத்தியவர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்குமாறு நேரில் புகார் கொடுத்துள்ளார்கள்.

## எதிர் எதிர்ப் போராட்டங்கள்

புகாரை பெற்றுக்கொண்ட எஸ்.பி இரண்டு நாட்களுக்குள் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். தொடர்ந்து 16.03.2016 அன்று கொங்கு வேளாளக் கவுண்டர்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடாது என்று எதிர்க் கோரிக்கை வைத்து, தாழ்த்தப்பட மக்களுக்கு எதிராக நல்லாம்பட்டியில் ஒரு நாள் கடையடைப்புப் போராட்டம் நடத்தியுள்ளார்கள்.

அதைத் தொடர்ந்து ரைஸ்மில் புதூர் ஊர் பொதுமக்கள் நடவடிக்கை எடுக்காத காவல் துறையைக் கண்டித்து ரைஸ்மில்புதூர் அண்ணம்மார் கோவில் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். ஈரோடு ஆர்.டி.ஓ நர்மதாதேவி நேரில் வந்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்பொழுது ஜாதி வெறித் தாக்குதல் நடத்தியவர்களுக்கு முன்ஜாமீன் வழங்கக்கூடாது என்று மக்கள் கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கையைப் பரிசீலனை செய்வதாகக் கூறி, ஆர்.டி.ஓ. தரப்பில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்கள்.

## விடுதலை முழக்கம்

18.03.2016 அன்று ஈரோடு ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் ஆர்.டி.ஓ. நர்மதா தேவி, கோபி டி..எஸ்.பி. மற்றும் பல அதிகாரிகள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் 15 பேர் கொங்கு வேளாளர்கள் 15 பேரும் இருந்தனர், அவர்களுக்குள் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். தாழ்த்தப்பட்ட சக்கிலியர் ஜாதியினர் சார்பாக வைத்த கோரிக்கைகள்:

தாழ்த்தப்பட்ட சக்கிலிய இளைஞர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியவரைக் கைது செய்ய வேண்டும்.

கொங்கு வேளாளக் கவுண்டர்களுக்கு இழவுச்செய்தி சொல்லும் அடிமை வேலையை இனி செய்ய மாட்டோம்.

துப்புரவுத் தொழில் செய்யமாட்டோம்.

கவுண்டர்களின் கோவிலுக்கு முரசு அடிக்க மாட்டோம்.

என்றும், ஆர்.டி.ஓ. மற்றும் எதிர்த்தரப்புக் கவுண்டர் ஜாதியினரிடமும் தீர்மானமாகக் கூறிவிட்டார்கள்.

## மேற்கில் ஒரு 1957

1957இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பள்ளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில், பசும்பொன் முத்துராம லிங்கத்துக்கு இணையாக அமர்ந்து, சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதற்காக, அந்தச் சமரசப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ஆறு தோழர்களில் முக்கியமானவரான தோழர் இமானுவேல் சேகரன் படுகொலை செய்யப்பட்டார். அந்தக் கொடூரத்தை நினைவுபடுத்தும் ஒரு ஜாதியப்படுகொலை தற்போது மேற்கு மாவட்டங்களில் ஒன்றான ஈரோட்டில் நடந்துள்ளது.

சமரசப் பேச்சுவார்த்தை எந்தவொரு உடன்பாடுமின்றி முடிந்துவிட்டது. அடுத்தநாள் 19.03.2016 மாலை 6.30 மணிக்கு சமரசப் பேச்சுவார்த்தைக்குச் சென்று வந்த 15 நபர்களில் ஒருவரான சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த சின்னச்சாமி மர்மமான முறையில் ஊர் மத்தியில் தாசாம்புதூர் மில்காரர் தோட்டத்தில் உள்ள கிணற்றில் இறந்து கிடந்தார். சின்னச்சாமி என்பவர் கடந்த 8 ஆண்டுகளாக விவசாயக் கூலியாக வேலை செய்து வருகிறார். அவர் வழக்கம் போல் வேலைக்குச் சென்றுள்ளார் அன்று இரவு 10 மணிக்கு ஈரோடு S.P. சிபிச்சக்கரவர்த்தி மேற்பார்வையில் சின்னச்சாமியின் சடலத்தைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்கு கோயம்புத்தூர் (CMCH) மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சின்னச்சாமியின் மனைவி சுப்புலட்சுமி ஈரோடு எஸ்.பி. யிடம் ஒரு புகார் கொடுத்தார். அதில் என் கணவர் சின்னச்சாமி ஆர்.டி.ஓ. முன்னிலையில் நடந்த பேச்சுவார்த்தையில், "நான் கவுண்டர்களை எதிர்த்துப் பேசிவிட்டேன், அதனால் வேலைக்குப் போவதற்குப் பயமாகவும், உயிருக்குப் பாதுகாப்பு இல்லை யென்றும்" தன்னிடம் கூறியதாகக் கூறினார். ஆகையால் மாரப்பக்கவுண்டர் மற்றும் அவரது கூட்டாளிகள் மீது சந்தேகம் உள்ளதாகத் தெரிவித்தார்.

சின்னச்சாமி முன்விரோதம் காரணமாகத் திட்டமிட்டு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிந்தும் காவல் துறை சந்தேக மரணமென்று திங்களூர் PS FIR (C.r . P.C 174) பதிவு செய்தது. பின்பு பிரேதப் பரிசோதனையில் சின்னச்சாமி அவர்கள் தண்ணீரில் மூழ்கி இறந்ததாக கூறப்பட்டுள்ளது. அதனால் அவருடைய மனைவி மற்றும் ஊர்மக்கள் சடலத்தை வாங்க மறுத்தனர். ஏனெனில், 30 அடி ஆழமுள்ள கிணற்றில் 4 அடி தண்ணீர் தான் உள்ளது. அதிலும் சின்னச்சாமிக்கு நன்கு நீச்சல் தெரியும் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் சடலத்தை வாங்க மறுத்துள்ளனர்.

### காவல்துறை நடத்திய ஜாதிய வன்கொடுமை

சின்னச்சாமியின் உடலை ஈரோடு எஸ்.பி. அவர்கள் வாங்கிக் கொள்ளுமாறு கட்டாயப் படுத்தினார். சின்னச்சாமியின் மரணத்திற்குக் காரணமான நல்லாம்பட்டி பகுதியைச் சேர்ந்த ஜாதிக்கட்சி நிர்வாகியும், அரசியல் பின்பலத்துடன் வலம்வரும் (AMD) அநோனா பால்பண்ணை உரிமையாளர் மாரப்பனைக் கைது செய்ய வேண்டும் என்று எஸ்.பி. யிடம் கோரிக்கை வைத்துச் சடலத்தை வாங்க மறுத்தனர்.

20.03.2016 அன்று அதிகாலை 2.30 மணிக்கு காவல்துறை அணிவகுப்புடன் கிராமத்துக்குள் வந்து 24மணி நேரத்தில் சின்னச்சாமியின் உடலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மிரட்டல் தொனியில் கூறியுள்ளார். இல்லையெனில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கவுந்தப்பாடி காவல் ஆய்வாளர் எழுத்துப்பூர்வமாக அறிவிப்பு கொடுத்துவிட்டு மிரட்டிச் சென்றுள்ளார்.

சின்னச்சாமியின் மரணத்திற்கு நீதிகேட்டு ஊர்ப்பொதுமக்கள் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இம்மக்களின் போராட்டத்தை காவல்துறையும், வருவாய்த் துறையும் கண்டு கொள்ளவில்லை. 23.03.16 அன்று சின்னச்சாமியின் மரணத்திற்கு நீதிகேட்டு மறுபடியும் ஊர்ப்பொது மக்கள் அண்ணமார் கோவில் முன்பு உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் வழக்கை CB CID விசாரணைக்கு மாற்றக் கோரி உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதம் இருந்த ஊர்பொதுமக்கள் சுமார் 150 பேரை காவல்துறையினர் ADSP மோகன் நிவாஷ் தலைமையில் கைது செய்து ஸ்ரீவள்ளிதிருமண மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட 5 பெண்கள் மயக்க மடைந்து கீழே விழுந்தனர். அதில் ஒரு பெண்ணுக்கு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் பெருந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட அனைவரும் அன்று மாலை 7.00 மணிக்கு விடுதலை செய்யப் பட்டனர்.

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர்கள் வன்னியரசு, கனியமுதன் ஆகியோர் பொது மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளித்து விட்டுச் சென்றனர். தாழ்த்தப்பட்ட மக்களை அடைத்து வைத்திருந்த ஸ்ரீவள்ளி மண்டபம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாடகைக்குத் தரப்படாத மண்டபம் என்பது குறிப்பிடத்தக்கது.

சின்னச்சாமியின் உடலை மறுபிரேதப் பரிசோதனை செய்யக்கோரியும், வழக்கை CB CID க்கு மாற்றக்கோரி சின்னச்சாமியின் மகன் பாலசுப்பிரமணியன் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ரஜினிகாந்த் அவர்கள் வழக்குத் தொடர்ந்தார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி திரு.மதிவாணன் சின்னச்சாமியின் உடலை ஈரோடு எஸ்.பி. கட்டுப்பாட்டில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்குமாறு உத்தரவிட்டார்.

அதைத்தொடர்ந்து ரைஸ்மில் புதூர் ஊர்பொதுமக்கள் சின்னச்சாமியின் மரணத்திற்கும் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தாக்கப்பட்டதற்கும் தங்கள் வீடுகளில் கருப்பு கொடி கட்டி எதிரிப்புத் தெரிவித்தனர்.

### பொதுச்சுடுகாட்டில் புதைப்போம்

01.04.2016 அன்று சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி கோவை அரசு மருத்துவமனையில் மறுபரிசோதனை செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து சின்னச்சாமியின் உடலைப் பொதுச் சுடுகாட்டில் நல்லடக்கம் செய்ய காவல்துறையிடம் பாதுகாப்புக் கேட்கப்பட்டது. பாதுகாப்புக் கொடுக்கமுடியாது என்றும் நீங்கள் தாழ்த்தப் பட்டோருக்கான தனிச் சுடுகாட்டில் தான் ??.. புதைக்க வேண்டும் என்று ஒருதலைபட்சமாகக் கூறிப் பொதுச்சுடுகாட்டில் புதைப்பதைத் தடுப்பதற்காக 1000-க் கும் மேற்பட்ட போலீசாரை குவித்துத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தினர்.

பின்பு ஈரோடு எஸ்.பி. சிபிச்சக்கரவர்த்தி, கோவை CMCH மருத்துவமனையிலிருந்து நேராகச் சுடுகாட்டில் புதைப்பதற்கு நல்லாம்பட்டி பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முயற்சியை ஊர்ப்பொதுமக்களின் ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் தடுத்து நிறுத்தி, நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, சின்னச்சாமியின் சடலம் ரைஸ்மில்புதூர் ஊரில் இருந்து ஊர்வலமாக

எடுத்து செல்லப்பட்டது. தனிச்சுடுகாட்டில் புதைக்கப்பட்டது. அன்று இரவு ரைஸ்மில்புதூர் காலனியில் சின்னச்சாமிக்கு இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பகுஜன் சமாஜ் கட்சி, ஆதித்தமிழர் கட்சி, தமிழ்ப் புலிகள், சமூக நீதிக் கட்சி, திராவிடர் விடுதலைக்கழகம், தந்தைபெரியார் திராவிடர் கழகம், தலித்விடுதலைக்கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தீண்டாமை ஒழிப்பு முன்னணி, விடுதலை வேங்கைகள் கட்சி, சாக்கிய அருந்ததியர் சங்கம், காட்டாறு குழு ஆகிய இயக்கங்கள், கட்சிகள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு இரங்கல் உரை ஆற்றினார்கள்.

அடுத்தபடியாக சின்னச்சாமியின் மரணத்திற்கு நீதிகேட்டு தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் இரண்டு முறை ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கேட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நல்லாம்பட்டி ரைஸ்மில்புதூர் சின்னச்சாமி மரணம் தொடர்பாக 05.04.2016 அன்று சென்னையிலிருந்து தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்திலிருந்து அதன் உறுப்பினர்களான திரு.சந்திரபிரபா, திரு.இனியன், திரு.லிஸ்டார் ஆகிய மூன்று பேர் கொண்ட குழு நேராக நல்லாம்பட்டி ரைஸ்மில்புதூர் காலனி பொதுமக்களிடம் விசாரணை செய்து கோரிக்கைகளை கேட்டுப் பெற்றுக்கொண்டு சென்றுள்ளார்கள்.

சின்னச்சாமியின் மறுபிரேதப் பரிசோதனை அறிக்கையில் சின்னச்சாமியின் கழுத்து பலமாக நெறிக்கப்பட்டு, முதுகெலும்பும், பலமாகத் தலையிலும் தாக்கப்பட்டு உடலில் பல இடங்களில் உள்காயங்கள் ஆகும் அளவிற்கு தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சக்கிலியர்களுக்குப் பொருளாதாரத் தடை

ரைஸ்மில்புதூர் ஊர்ப்பொதுமக்களின் தொடர்ந்து 20 நாட்களாக உள்ளிருப்பு போராட்டத்தாலும், சமூகப் புறக்கணிப்பாலும் எந்தவித வேலைக்கும் போகமுடியாததால் இம்மக்களின் அத்தியாவசிய உணவு உள்ளிட்ட தேவைகளை வைகறை வெளிச்சம், சத்தியமங்கலம் கருப்புசாமி, தமிழ் கார்மென்ட்ஸ் சேவூர், அவிநாசி பழனிசாமி மற்றும் பலர் பொருளாதார ரீதியாக பல உதவிகளை புரிந்துள்ளார்கள்.

அப்பகுதிக் கவுண்டர்கள் தங்களது விவசாய நிலங்களில் இனி இந்த ஊர் சக்கிலியர்களை வேலைக்கு அழைப்பதில்லை என்ற முடிவில் இருக்கிறார்கள். எனவே இவர்களின் வேலைவாய்ப்பு, எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. அனைவருமே மாற்று வேலைவாய்ப்புகளைத் தேடும் நிலையில் இருக்கிறார்கள். ஊரிலுள்ள சக்கிலிய மக்களுக்குக் கடைகளில் பலசரக்கு, அரிசி, பருப்பு, காய்கறிகளை விற்பனை செய்வதில்லை. ஒவ்வொரு வேளை உணவுக்கும், அடுத்த நாள் வேலைக்கும், எதிர்கால வாழ்க்கைக்கும் எதற்குமே வழியில்லாத நிலையை எந்த வெகு மக்கள் ஊடகமும் கண்டு கொள்ளவில்லை.

### மதமாற்றமே விடுதலைக்கு வழி

இந்தத் தொடர் போராட்டங்களை ரைஸ்மில் புதூர் செந்தமிழன் ஒருங்கிணைத்து வருகிறார். நல்லாம்பட்டி ரைஸ்மில்புதூரில் மக்களோடு மக்களாக, கூதாம்பி அர்ஜூனன், கோபிஅனந்தராஜ், BSP பொறுப்பாளர்கள், ஆதித்தமிழர் கட்சியினர் தமிழ்ப்புலிகள் அமைப்பினர், தொடர்ந்து உதவி புரிந்தும், செயல்பட்டும் வருகிறார்கள்.

வேளாளக்கவுண்டர்களின் குலதெய்வமாகச் சொல்லப்பட்டு, பரப்பப்பட்டுள்ள பொன்னர் சங்கர் கதையில், அண்ணன்மார்களுக்கும், வேட்டுவக் கவுண்டர்களுக்கும் நடந்த ஜாதிசண்டையில் பொன்னர் சங்கருக்கு உதவியாக சாம்புகன் என்ற தோட்டி உதவினார் என்று தாழ்த்தப்பட்ட சக்கிலிய மக்களிடம் குன்றுடையார் கதைகளைப் பரப்பி அண்ணம்மார் கோவில்களைச் சேரிகளில் கட்ட முயற்சி நடைபெறுகிறது.

கோவில் கட்ட உதவி செய்து, வேளாளக் கவுண்டர் ஜாதியினர் தமது ஜாதி ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும் - தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை நிர்மூலமாக்கவும் - எப்பொழுதுமே?.. இவர்களைச் சார்ந்தும் - அண்ணம்மார் கோவில் களைச் சார்ந்தும் வாழ சக்கிலியர் சமூகம் தொடர்ந்து பல்லாயிரம் ஆண்டுகளாக நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள்.

சக்கிலியர் சமூக முன்னேற்றத்தின் மீது கவனம் செலுத்துவதாகச் சொல்பவர்களும், செயல் படுவோரும் அண்ணம்மார் திருவிழாக்களிலிருந்தும் - இவற்றுக்கு அடிப்படையான இந்து மதத்திலிருந்தும் மக்களை மீட்டு மாற்றுப் பண்பாட்டையும், மாற்று மதங்களையும் நோக்கி நகர்த்த வேண்டும்! மதமாற்றமே விடுதலைக்கு வழி! இந்துவாகப் பிறந்த நாம், இந்துவாகச் சாகக்கூடாது!

தொகுப்பு: சேவூர் கு.செந்தில்குமார், இரா.ரவி,
அவிநாசி க.பழனிசாமி



அதி அசுரன்








# குற்றப்பரம்பரையாக மாற்றும் பாரதிராஜா, பாலா

குற்றப்பரம்பரை என்ற பெயரில் ஒரு திரைப்படத்தை யார் எடுப்பது என்பது குறித்து இயக்குநர் பாரதிராஜா அவர்களுக்கும், இயக்குநர் பாலா அவர்களுக்கும் பெரும் அறிக்கைப் போர் ஒன்று நடைபெற்று வருகிறது. பாரதிராஜா ஒருபடி மேலேபோய், உசிலம்பட்டியில் இந்தத் திரைப்படத்திற்குப் பூஜைபோட்டுப் படப்பிடிப்பைத் தொடங்கியுள்ளார். இது ஜாதிவெறியைத் தூண்டும் செயலாகும்.

அண்மைக்காலமாகத்தான் அந்தப்பகுதியில் வாழும் கள்ளர் இனமக்கள் பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று படிப்பது, இராணுவம், காவல்துறை என அரசுப்பணிகளுக்குச் செல்வது என முன்னேறி வருகின்றனர். நீதிக்கட்சி ஆட்சி கள்ளர் சீரமைப்புத்துறையை உருவாக்கி, அதன்மூலம் இப்பகுதி மக்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டது. முன்னேறி வரும் ஒரு சமூகத்தை மீண்டும் அடிதடி, வெட்டுக்குத்து என அவர்களது வாழ்க்கையை நிலையற்றதாக மாற்றவே பாரதிராஜாவின் திரைப்படம் பயன்படும்.

பாரதிராஜாவுக்குக் குற்றப்பரம்பரைச் சட்டத்தைப் பற்றி எதுவும் தெரியாது அல்லது தனது பண வெறிக்குத் தமிழ்நாட்டின் ஒரு பகுதி மக்களை குற்றப்பரம்பரையாக மாற்ற முயற்சி செய்கிறார் என்பதற்குச் சான்றுதான் அவர் உசிலம்பட்டியில் படப்பிடிப்பைத் தொடங்கிய செயல்.

தமிழ்நாட்டில் குற்றப்பரம்பரையினர் என ஆங்கிலேய அரசால் 89 ஜாதிகள் அறிவிக்கப்பட்டு, அந்த 89 ஜாதியினரும் கையெழுத்துப் போட்டுக்கொண்டு வந்துள்ளனர். அந்த 89 ஜாதிகளில் கள்ளர், மறவர், அகமுடையார் ஜாதியினரும் அடங்குவர். முதலில் குற்றப்பரம்பரைச் சட்டம் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

### குற்றப் பழங்குடியினர் சட்டம் ( Criminal Tribes Act )

கி.பி. 1871 இல் ஆங்கிலேய இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளிலும் பஞ்சாப் மாகாணங்களிலும் நாடோடிக்கூட்டமாக இடம் விட்டு இடம் மாறி மாறி திருட்டு, கொள்ளை போன்ற செயல்களைப் பரம்பரையாக செய்துகொண்டிருந்த மக்களை அடக்குவதற்காக ஆங்கிலேயர்களால் இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தியா முழுவதிலும் சுமார் 213 சாதிகளை குற்றப் பழங்குடியினர் பட்டியலில் பிரிட்டிஷ் அரசு இணைத்திருந்தது.

அதில் குறவர், உப்புக்குறவர், ஆத்தூர் மேல்நாட்டுக் குறவர், சி.கே. குறவர், ஒட்டர், போயர், வன்னியர், படையாச்சி, வலையர், அம்பலக்காரர், புன்னன் வேட்டுவக் கவுண்டர், வேட்டைக்காரர், பறையர், ஊராளிக்கவுண்டர், டொம்பர், கேப்மாரி, தொட்டிய நாயக்கர், தெலுங்கம்பட்டி செட்டியார், தலையாரி, இஞ்சிக்குறவர் போன்ற ஜாதிகளும் அடங்காத, அடங்க மறுக்கும் ஜாதிகளும் குற்றப்பரம்பரைப் பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தன.

குற்றப்பரம்பரைப் பட்டியலில் உள்ள சாதிகளில் பிறந்த அனைத்து மக்களும் கைரேகை வைக்கப்படச் சொல்லி கட்டாயப்படுத்தப்படவில்லை. அப்படிச் சொல்லப் பட்டிருந்தால் தமிழ்நாட்டில் அப்போதிருந்த மக்கள் தொகை முழுதும் சுமார் 2 கோடிப்பேர் தினமும் கையெழுத்துப் போட்டிருக்க வேண்டும். அப்படியெல்லாம் எதுவும் நடக்கவில்லை.

மேற்கண்ட சாதிகளில் குறிப்பாக கள்ளர், மறவர், அகமுடையார்களிலும் விவசாய நிலம் வைத்திருந்த விவசாயிகள், நிலவரி கட்டுபவர்கள், நிரந்தரத் தொழில் செய்வோர், அலுவலர், நிரந்தரமாக ஒரே இடத்தில் வசிப்போர் ஆகிய பெரும்பான்மையோர் கைரேகைச் சட்டத்தில் இணைக்கப்படவில்லை.

அதேபோல கைரேகை வைக்கும் இடம் காவல்நிலையம் அல்ல. உள்ளூரிலேயே அதே சாதியைச் சேர்ந்த கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் இடம் பெற்றிருந்த ஒரு குழுவிடம் ஒரு பதிவேடு இருக்கும் அதிலேயே கைரேகை வைக்கலாம். வெளியூர் செல்ல வேண்டுமென்றால் அந்தக் குழுவிடம் அடையாளச்சீட்டு வாங்கிச் செல்ல வேண்டும். தாம் செல்லும் ஊரில் இருக்கும் ஊர்ப்பெரியவர் குழுவில் இந்த அடையாளச்சீட்டைக் காண்பிக்க வேண்டும். அடையாளச்சீட்டு இல்லாதவர்கள் கைது செய்யப்படுவார்கள். அடையாளச்சீட்டு இல்லாமல் அடிக்கடி கைதாகும் நபர்கள் தனியாகப் பட்டியலிடப் பட்டு அவர்கள் நேரடியாக காவல்நிலையத்தில் கைரேகை வைக்க நிர்பந்திக்கப்பட்டனர்.

## குற்றப்பரம்பரையாக்கிய பார்ப்பனர்கள்

சில மாகாணங்களில் மட்டும் இருந்த இந்த சட்டம் 1911 இல் இந்தியா முழுமைக்கும் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்தக் கொடூரச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய குழுவின் பொறுப்பாளர் தமிழ்நாட்டுப் பார்ப்பானான இராமானுஜ அய்யங்கார் ஆவார்.

1921 ஆம் ஆண்டில் கள்ளர்கள் தலைமையிலேயே கள்ளர்களைக் கண்காணிக்கும் கண்காணிப்பு கிராமங்களான ‘கள்ளர் பஞ்சாயத்துக்கள்’ உருவாக்கப்பட்டன. இப்படி கள்ளர்களை வைத்தே கள்ளர்களை அடக்கிய நுட்பத்தை ஆங்கிலேயருக்கு அறிவுறுத்திச் செயல்படுத்தியவன் அப்போது மதுரை மாவட்ட துணைக்கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஏ.கே. இராஜா என்ற பார்ப்பான்.

ஆகவே இச்சட்டம் தேவர்களுக்கு மட்டும் இருந்த சட்டமல்ல. தேவர்களிலும் அனைத்து மக்களுக்கும் பொருந்திய சட்டமல்ல. அனைத்து ஜாதிகளிலும் இருந்த உண்மையாகவே திருட்டு, வழிப்பறி, கொலை, கொள்ளையில் ஈடுபட்ட மக்களைக் கட்டுப்படுத்தக் கொண்டுவரப்பட்ட சட்டம். 1932 ஆம் ஆண்டு இராமநாதபுரத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பசும்பொன் தேவர் இப்படிப்பட்ட உண்மைக் குற்றவாளிகளை ஒடுக்குவது தவறில்லை என்றே பேசியிருக்கிறார்.

## வலியாக அல்ல வலிமையாக

குற்றப்பரம்பரையாகத் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மை ஜாதிகள் அனைத்துமே அறிவிக்கப்பட்டு இருந்தன என்பதையோ - பார்ப்பனர்கள்தான் குற்றப்பரம்பரைச் சட்டத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்தினார்கள் என்பதையோ அந்தச் சட்டத்தை ஒழிக்கப்பாடுபட்டது நீதிக்கட்சியும் தோழர் பெரியாரும்தான் என்பதையோ இந்தத் திரைப்படம் கூறப்போவதில்லை என்பதை பாரதிராஜாவின் நேர்காணல் அறிவிக்கிறது.

கமலஹாசன் நடித்த தேவர்மகன், விருமாண்டி, விஜயகாந்தின் சின்னக்கவுண்டர், மம்முட்டி நடித்த மறுமலர்ச்சி போன்ற பல படங்கள் தேவர், கவுண்டர், வன்னிய ஜாதி மக்களின் ஜாதிவெறியைத் தூண்டிவிட்டன. ஆணவக் கொலைகள் பெருகிவரும் இந்தச்சூழலில் மீண்டும் மக்களைக் கற்காலத்திற்குக் கொண்டு செல்லும் முயற்சியாக பாரதிராஜா படம் எடுக்கிறார். அதை அவரே கிடப்பில் போட வேண்டும்.

குற்றப்பரம்பரைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வலியைச் சொல்லப்போவதாக பாரதிராஜா சொல்கிறார். ஆனால் தென்மாவட்டங்களில் வாழும் மக்கள் அந்தச் சட்டத்தில் பாதிக்கப்பட்டதைப் பற்றி மிகவும் பெருமை யாகத்தான் பேசிக்கொள்கிறார்கள். மதுரையில் ஜெயில் கட்டியதே எங்களுக்காகத்தான் என பெருமைப்படாத கள்ளர் கிராமத்து மக்களைப் பார்க்கவே இயலாது. இந்தச்சட்டத்தை தங்களுடைய வலியாக யாரும் கருதவில்லை. வலிமை யாகத்தான் கருதுகிறார்கள்.

“உங்களோடு குறவர்களும் குற்றப்பரம்பரையாக்கப் பட்டவர்கள் தானே” என, தென்மாவட்டக் கள்ளர்களிடம் யார் வேண்டுமானாலும் கூறிப் பார்க்கட்டும். அப்போது உண்மை தெரியும். இப்படம் பாதிக்கப்பட்ட மக்ககளின் வலியைச் சொல்லப் போவதில்லை. ஜாதிப்பெருமை பேசவே பயன்படும் என்று புரியும்.

நான் திருடன், திருட்டுப்பரம்பரை என்பதை விட நான் தேவடியாள் பரம்பரை என்பதைத்தான் கேவலமாகக் கருதுவேன். கள்ளர், மறவர், உட்பட தமிழ்நாட்டின் அனைத்து ஜாதியினரையும் சூத்திரப்பரம்பரை, தேவடியாள் மக்கள் என இன்றும் இந்துச் சட்டங்கள் எழுதி வைத்திருக்கின்றன. அவை அரசியல் சட்டத்தின் பாதுகாப்பில் இந்து லாவாக உள்ளன. அதை இன்னும் அனுமதித்துக் கொண்டு மானங்கெட்ட வாழ்வு வாழ்கிறோம். அதற்காகப் படம் எடுக்க எந்த ராசாவும் தயாராக இல்லை

மக்களைக் குற்றவாளிகளாக, ஜாதிவெறியர்களாக, ஆணவக்கொலைகாரர்களாக, குற்றப்பரம்பரையாக மாற்றத் துடிக்கும் இயக்குநர் பாரதிராஜா, பாலா ஆகியோரை தேசப்பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும். தீண்டாமை வன்கொடுமைகள் தடுப்புச்சட்டங்களில் கைது செய்ய வேண்டும்.

ஒரு படைப்பு வருவதற்கு முன்பே அது எப்படி வரப்போகிறது என்பதைப் பார்க்காமலேயே அப்படைப்புக்கு எதிராகப் பேசுவது கருத்துரிமைக்கு எதிரானது. உண்மைதான். ஆனால் இப்படைப்பு எப்படி வரப்போகிறது? அதனால் சமுதாயத்தில் என்ன பாதிப்பு வரப்போகிறது என்பவை நாம் நன்கு அறிந்தவைதான். பாரதிராஜாவின் நேர்காணலே அதற்குச் சான்று. எனவே குற்றப்பரம்பரைப் படத்தைத் தடைசெய்ய வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய வேண்டும். எவரது கருத்துரிமையும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வுரிமைக்கு எதிராக இருக்க அனுமதிக்கக் கூடாது.




# Ki&Ka

**பொது இடங்களில் முத்தம் கொடுப்பதை எதிர்க்கும் பெருசுகளும், திரைப்பட ரொமான்ஸ் காட்சிகளை எதிர்த்துப் போராடிக்கொண்டு, தனியாக பிட்டுப்படம் பார்ப்பவர்களும் போக வேண்டாம்.**

இந்தியத் திரையுலக வரலாற்றில் முத்திரை பதிக்கும் திரைப்படங்களின் வரிசையில் கி அன் கா வும் இடம் பிடித்துள்ளது. 2014 ராஜ்குமார் ஹிரானி, அமீர்கான், அனுஷ்கா கூட்டணியில் வெளியான "பிகே" வட இந்தியாவின் இரத்தக்கண்ணீர் ஆகப் பரபரப்புகளை ஏற்படுத்தியது. அதற்கு அடுத்து 2015 இல் நவ்தீப் சிங். அனுஷ்கா கூட்டணியில் ஆணவக்கொலைகளை எதிர்த்து "NH10" வெளியானது.

அதே 2015 இல் சுஜய் கோஷ் இயக்கத்தில் ராதிகா ஆப்தே நடிப்பில் 'அகல்யா' என்ற குறும்படம் வடஇந்திய மதவாதிகளுக்குப் பெரும் கலக்கத்தை உருவாக்கியது. இராமாயண அகலிகை பாத்திரத்தை அறிவியலோடு அணுகி, இராமாயணத்தைக் கடுமையாக விமர்சித்து வந்தது அக்குறும்படம். யூட்யூபிலேயே பல இலட்சக்கணக்கில் ஹிட் அடித்தது. அதைத் தொடர்ந்து பாலின சமத்துவம் என்ற தளத்தில் கி அன் கா வெளியாகி உள்ளது.

சீனிகம்., பா, ஷமிதாப் போன்ற படங்களின் இயக்குநர் பால்கி, இசைஞானி இளையராஜா, தமிழ்நாட்டு பி.சி.சிரீராம், கரீனா, அர்ஜூன் கூட்டணியில் வந்துள்ள கி அன் கா படத்தை அவசியம் நாம் அனைவரும் ஒரு முறையாவது பார்க்க வேண்டும்.

அண்மையில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறை சார்பில் பாலின சமத்துவம் தொடர்பாக 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடம் ஒரு கள ஆய்வு நடத்தப்பட்டது. அதில் 5 ஆம் வகுப்புப் படிக்கும் ஒரு மாணவன், திருமணம் ஆனால் தன் மனைவியை வேலைக்கு அனுப்ப மாட்டேன் என்கிறான். ஆய்வாளர் மீண்டும் அவனிடம் "மீறி அவள் வேலைக்குப் போனால்?" எனக் கேட்கிறார். அவனது பதில் "அங்க போயி எவனடி பாத்துட்டு வந்த? என்பேன்" என்கிறான். இவ்வளவு சிறு வயதில் அந்தச் சிறுவனுக்கு அந்த ஆதிக்கக் கருத்தை இச்சமுதாயம் திணித்துள்ளது. இந்த சூழலை மனதில் வைத்து இப்படத்தைப் பார்க்க வேண்டும்.

இன்றைய சமுதாயச் சூழலில் ஒரு பெண்ணின் பாத்திரத்தை ஒரு ஆண் ஏற்றால் எப்படி இருக்கும் என்பதே படம். பெரும் தொழிலதிபர் பன்சாலின் மகன் கபீர் (அர்ஜூன் கபூர்) தனது தந்தையின் தொழிலைப் பொறுப்பேற்றுக் கொள்ளாமல், ஒரு ஆணாக, புருஷ இலட்சணமாக - பொருளீட்டச் செல்லாமல், தன் அம்மாவைப் போல ஒரு இல்லத்தரசியாக வாழ விரும்புகிறான். இல்லாத சொற்களான இல்லத்தரசனாக, House Husband ஆக வாழ விரும்புகிறான்.

விமானப் பயணத்தில் தன்னை விட வயதில் மூத்த க்யா வைச் (கரீனா) சந்திக்கிறான். கரீனாவோ, தன் இலக்கைத் தானே நிர்ணயித்து, திட்டமிட்டு வாழும் விடுதலைப்பெண். க்ளப்புல, மப்புல கொண்டாட்டமாக வாழும் பெண். சரக்கும் சரக்கு சார்ந்த இடங்களிலும் இவர்களின் நட்பு வளர்கிறது.

காதல், திருமணம் என மாறுகிறது. பதிவாளர் அலுவலகத்தில், பெண்ணுக்குப் பதிலாக, பெண்ணின் கையால் ஆணாகிய கபீர் மங்கள்சூத்ராவை (தாலி போன்றது) அணிந்து கொள்கிறான்.

ஒரு சராசரி ஆண் திருமணம் ஆனவுடன், தனது மனைவி காலையில் தனக்கு முன் எழுந்து வாசல் தெளித்து, கோலம் போட்டு, வீட்டைச் சுத்தம் செய்து, காபி போட்டு, அரைத் தூக்கத்தில் இருக்கும் தன்னை எழுப்பிக் கொடுத்து, வெந்நீர் போட்டு, குளிக்கவைத்து, சாப்பிட வைத்து, வேலைக்கு அனுப்புவாள் என்பது போல கனவுகளைக் காணுவான். சராசரி ஆண் மட்டுமல்ல; பல புரட்சிகர ஆண்களுமே இப்படித்தான் எண்ணிக் கொண்டிருப்பார்கள். எண்ணியது போல வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். பெண் சம்பாதிக்கச் செல்வதை மனதளவில் இன்னும் ஏற்றுக் கொள்ளாத இந்தச் சமுதாயத்தின் சிந்தனை இப்படித்தான் இருக்கிறது. அந்தச் சிந்தனைக்கு ஒரு பலத்த அடி கொடுத்துள்ளது கி அன் கா.

மனைவி என்ற பாத்திரத்திற்கு இந்து மதமும், இந்துப் பொதுப்புத்தியும் கொடுத்துள்ள அனைத்துப் பணிவிடைகளையும் இப்படத்தில் ஆண் செய்கிறான். அந்தப் பணிகளைச் செய்வதில் எவ்விதத் தயக்கமும் இன்றி விரும்பிச் செய்கிறான். தனது தேவைக்குச் சுடுதண்ணீர்கூடப் போட்டுக்கொள்ளத் தெரியாத இன்றைய ஆண் உலகில் இது அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடியது.

சமையல் எண்ணெய் விற்பனைக்காக, சஃபோலா எண்ணெயை வாங்கும் ஆண்களுக்கு 50 சதம் தள்ளுபடி என்ற அறிவிப்பைப் பரிந்துரைக்கிறார். மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ் கரீனா. சமையல் என்பது குடும்பப் பணிகள் என்பவையும் ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது என்று வாதிடுகிறார். அதற்குப் பரிசாக நிறுவனத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

சஃபோலா விளம்பரத்தில் பெண்ணை நடிக்க வைப்பதற்குப் பதிலாக கபீர் நடிக்கவைக்கப் படுகிறான். அந்த 'ஆண் சமையல்' விளம்பரம் பிரபலமாகி, மீடியாக்கள் அவனைத் துரத்தும் நிலைக்கு மாறுகிறான். அவனது முகநூல் பக்கங்கள் தினமும் சமையல் குறிப்புகளைப் பரிந்துரைக்கின்றன. வயது வேறுபாடுகள் இன்றி இன்றைய சமுதாயப் பெண்கள் அனைவரும் விரும்பும் ஆணாக உயருகிறான்.

முக்கியமாக, சமுதாயத்தில் வழக்கமாக, திருமணம் ஆகிவிட்டால், உடனே ஏதாவது விசேசம் உண்டா? என அடுத்த துரத்தல் இருக்கும். அதுபோலவே சினிமாக்களில், மனைவி கருவுற்று விட்டாள் என்றாலே ஒரே கொண்டாட்டமாகக் காண்பிப்பார்கள். எம்.ஜி.ஆர் காலத்தில், " எனக்கொரு மகன் பிறப்பான்... அவன் என்னைப் போலவே இருப்பான்..."என்ற பாடல் என்றால், ரஜினிகாலத்தில் "வானவராயருக்கும், ராணிக்கும் வாரிசு வந்தாச்சு...", இளைய தளபதி விஜய் காலத்தில், "ஜூன், ஜூலை மாதத்தில், ரோஜாப்பூவின் வாசத்தில், ஜூனியர் ஜூரியன்.." என்று ஆட்டம் பாட்டமாகக் காண்பிப்பார்கள்.

கி அன் காவில் கருவுற்றுவிட்டதாகத் தவறாகப் புரிந்து கொண்டு, அதற்கே பெரும் கோபமும், கொந்தளிப்புமாக அர்ஜூனிடம் பொங்கித் தீர்ப்பார் கரீனா. தனது இலட்சியம், கனவு எல்லாம் அழிந்து விட்டது என உண்மையான நிலையை அப்படியே வெளிப்படுத்தியுள்ளார். 'குழந்தை பிறப்பு' என்பதை, 'குழந்தைப் பேறு' என்று உயர்த்திக் காட்டும் தமிழ்ச் சொற்களிலேயே இந்த ஆணாதிக்க அரசியல் உள்ளது. கணவன் - மனைவியிடையே குழந்தை பிறப்பு என்பதை சோகக் காட்சியாகக் காட்டும் திரைப்படம் இதுவாகத்தான் இருக்கும்.

இப்படி நமது பார்வையில் பாராட்டத்தக்கவை நிறைய இருந்தாலும், முக்கியமாகக் கண்டிக்க வேண்டிய ஒன்றும் இருக்கிறது. படத்தில் பல காட்சிகள், அதாவது, ஒரு கருத்தரங்கத்திற்காக துபாய் செல்லும் மனைவியிடம் கணவன் possessive ஆக நடந்து கொள்வது, வேண்டும் என்றால் அவர்கள் கூடவே போய் படுத்துக்கொள் என்று கூறுவது - மீடியாவில் கபீர் பிரபலமானதை க்யாவின் மனம் ஏற்றுக்கொள்ள மறுப்பது, தன்னைவிட உயர்ந்து விடுவானோ என பொறாமை கொள்வது - கணவன், மனைவி சண்டையில் கடுமையாகத் திட்டி வீட்டை விட்டு வெளியே போ என்று கரீனா விரட்டுவது, அர்ஜூன் அமைதியாகச் சண்டிகருக்குச் செல்வது என்பது போன்ற பல காட்சிகள் இந்தப் படத்தின் இயக்குநருக்கு பாலின சமத்துவத்தில் நம்பிக்கை இல்லை. அதற்காகப் படம் எடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதமாக உள்ளன.

'மனைவி' என்ற ரோலில் ஆண் அல்லது பெண் அல்லது திருநங்கை என யார் இருந்தாலும் 'கணவன்' என்ற ரோலுக்கு அடிமையாக, கணவனுக்கு மனம் கோணாமல், கணவனை அனுசரித்தே வாழ வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. பாலின சமத்துவம் என்பது இது அல்ல. என்றாலும் பல காட்சிகளில் இந்தியத் திரைப்படங்களுக்குப் பெரிதும் மாறாக பாலின சமத்துவத்தின் சில கூறுகளை வலியுறுத்துகின்றன. குறிப்பாக, ஆண் சமையலைப் பிரபலப் படுத்துகின்றன. பெண்களுக்குப் பல நூற்றாண்டுகளாக விதிக்கப்பட்டுள்ள சமையலறைத் தண்டனைக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள காட்சிகளுக்காகவே நாம் அவசியம் ஒரு முறையாவது பார்க்க வேண்டும். ஆண்களும் சமையல் செய்யலாம் - செய்ய வேண்டும் என்ற மனநிலைக்கு முதலில் வரவேண்டும்.

**குறிப்பு: பொது இடங்களில் முத்தம் கொடுப்பதை எதிர்க்கும் பெருசுகளும், திரைப்பட ரொமான்ஸ் காட்சிகளை எதிர்த்துப் போராடிக்கொண்டு, தனியாக பிட்டுப் படம் பார்ப்பவர்களும் போக வேண்டாம்.**

இராவணன்

# இந்தியா எதை நோக்கி?


## நூல் அறிமுகம்

**ஆர்.எஸ்.எஸ்-
பி.ஜே.பி.-
இந்துத்துவா**

**ஒரு இந்து பயங்கரவாதியின்
ஒப்புதல் வாக்குமூலம்.**

கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலிருந்து செயல்படும் ‘எதிர் வெளியீடு’ பதிப்பகத்தார் ‘இந்தியா எதை நோக்கி?’ என்ற தலைப்பில் இந்தப் புத்தகத்தை வெளியிட்டுள்ளனர். தி கேரவன் ஆங்கில இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரும் இடதுசாரி மொழி பெயர்ப்பாளரான தோழர் செ.நடேசன் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

மொழி பெயர்ப்பாளர் தனது முன்னுரையில் மிகவும் பொருத்தமாக “போராளிகளின் களத்தில் ஒரு கருவியாகும்” என குறிப்பிட்டுள்ளார். பார்ப்பன இந்துப் பாசிசத்தை எதிர்க்க நினைக்கும் முற்போக்காளர்கள் அனைவருக்கும் பயன் படக்கூடிய வகையில் தொகுக்கப் பட்டுள்ளது. திகேரவன் இதழில் வந்த மூன்று கட்டுரைகளும், ஃப்ரண்ட்லைன் இதழில் வந்த ஒரு கட்டுரையும் என நான்கு கட்டுரைகளும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் புத்தகமாக வெளி வந்துள்ளது. அனைவருக்கும் புரியும் எளிய நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. இந்தப் புத்தகத்திற்கு மேலும் ஒரு முன்னுரையாக ஆய்வாளர் தோழர் எஸ்.வி.இராஜதுரை அவர்களின் ‘வாசற்படியில் பாசிசம்’ இந்தியா எதிர் நோக்கியுள்ள ஆபத்துகளை தெளிவுபடுத்துகிறது. பல்வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் தொடர்புடைய இந்து பயங்கரவாதி அசீமானந்தாவின் நேர்காணல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இன்னொரு முகத்தை அடையாளம் காட்டுகிறது.



**வாசற்படியில் பாசிசம்:- எஸ்.வி.ராஜதுரை**

"பாசிஸ்டுகள் முன்கூட்டியே ஆயிரம் ஆண்டுகளுக்குத் திட்டம் தீட்டுகின்றனர்" மார்க்சிய அறிஞர் வால்டர் பெஞ்சமின் அவர்களின் மேற்கோளைச் சரியாக வெளிப்படுத்தியுள்ளார். இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ் 1925இல் இருந்து மெல்ல மெல்ல ஆனால் வலுவாக ஒவ்வொரு துறையிலும் தனது தொண்டர்களை மிகமுக்கியமான துறைகள் அனைத்திலும் அய்.ஏ.எஸ், அய்.பி.எஸ் அதிகாரிகளாக ஊடுருவச் செய்துள்ளது.

குறிப்பாக இராணுவம், மனிதவள மேம்பாட்டுத்துறை, பண்பாட்டுத்துறை ஆகியவற்றில் மதச்சார்பற்ற ஆட்சி வந்தாலும் அது மதம் சார்ந்ததாக இருக்கும் அளவிற்கு உள்ளது. 'இந்துத்துவா' என்பது மதம் சார்ந்த கருத்தல்ல என்று சில ஆண்டுகளுக்கு முன்பு உச்ச நீதிமன்ற நீதிபதி கூறியதைப் பதிவு செய்யும் கட்டுரையாளர் நீதித்துறை சங்பரிவார்மயம் ஆகியுள்ளதை எடுத்துக் காட்டுகிறார். அப்சல்குரு மீதான மரணதண்டனைக்கு நீதிபதி - நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுகூட விசாரணை செய்யாததை வேதனையுடன் பதிவுசெய்யும் அதே நேரத்தில் இடதுசாரிகள்கூட கோரிக்கை வைக்காததையும் சுட்டிக்காட்டுகிறார்.

பொருளாதார அடித்தளம் சட்டம், பண்பாடு என அனைத்திலும் திட்டமிட்ட முறையில் ஊடுருவி சங்பரிவாரம் பார்ப்பனிய இந்து பாசிசக் கருத்துக்களைக் கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள், மதநிறுவனங்கள், வழிபாட்டுத்தலங்கள் மூலம் மிக ஆழமாக விதைக்கப்பட்டு அவை நச்சு மரங்களாக வளர்ந்துள்ளதை விரிவாக விளக்குகிறது.

2007ல் ஐ.பி.என் - சி.என்.என், ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஆகியவற்றின் சார்பில் டெல்லியிலுள்ள வளரும்சமுதாயங்கள் பற்றிய ஆய்வுமய்யம் (centre for the study of developing societies) நடத்திய கருத்துக் கணிப்புகளை மீராநந்தா 'கடவுள் சந்தை: உலகமயமாக்கல் எவ்வாறு இந்தியாவை இந்துத் தன்மையாக்குகிறது' (The god Market: How the Globalization Makes India more Hindu) என்ற நூலில் கூறுகிறார்.

"ஏழை, பணக்காரர் வேறுபாடின்றி எல்லோருமே கடவுளை நாடுகின்றனர். குருக்களும் புரோகிதர்களும், பூசாரிகளும், சோதிடர்களும், வாஸ்து நிபுணர்களும் ஆன்மீக ஆலோசகர்களுக்கும் நல்ல யோகம் அடித்துக் கொண்டிருக்கிறது. இந்த ஜனரஞ்சக இந்துயிசத்தின் புத்தெழுச்சி இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுவதாகச் சொல்லப்படும் மதச்சார்பின்மைக்கு எதிரானது அல்ல என்றும் இந்த மதச்சார்பின்மையின் காரணமாகத்தான் இந்த புத்தெழுச்சி ஏற்பட்டுள்ளதாக" கூறகிறார்.

தோழர் பெரியார் அவர்களின் கடவுள் மறுப்பு பிரச்சாரத்தின் அவசியத்தையும் பண்பாட்டுத் தளத்தில் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தையும் மீராநந்தா அவர்களின் கட்டுரை உணர்த்துகிறது. பெரும்பான்மை மதத்தை ஆதரிக்கும் மதச்சார்பின்மை அரசு, கார்ப்ரேட், பார்ப்பன இந்து நிறுவனங்களின் முக்கோணக் கூட்டணியை தெளிவாக விளக்குகிறார். கார்ப்ரேட் நிறுவனங்கள் ஆர்.எஸ்.எஸ் சுடன் கைகோர்த்துகொண்டு குஜராத்தை இஸ்லாமியர்களை கொன்று குவிக்கும் கொலைக்களமாக மாற்றிக்காட்டிய மோடியை மாற்றத்தின் நாயகனாக முன்னிறுத்திய கார்ப்ரேட்கள் பற்றியும் ஊடகங்கள் ஆதரவு பற்றியும் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

2014 பாராளுமன்ற தேர்தலை ஒட்டி எழுதப்பட்ட இக்கட்டுரை இன்று பொருந்தி வருகிறது. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்ந்தவுடன் பாசிசம், நம் வீட்டிற்குள் வந்துவிட்டது. மாட்டுக்கறிப் பிரச்சனை, பெண்களின் உடை, பல்கலைக் கழக மாணவர் பிரச்சனை என பாசிசம் தனது கோரமுகத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் வேலையில் பெரியாரின் பார்ப்பன எதிர்ப்புடன் கூடிய கடவுள், இந்துமத புராண எதிர்ப்புப் பிரச்சாரத்தைக் கையில் எடுக்காமல் நாம் வெற்றி பெறமுடியாது. இனி நூலிலிருந்து....

**ஆர்.எஸ்.எஸ்.மதவெறியன் அசீமானந்தாவின் பயங்கரவாதச் செயல்கள்**

2006க்கும் 2008க்கும் இடையே இந்தியா முழுவதும் மக்கள்மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும், 82பேர்களைக் கொன்ற 3 குண்டு வெடிப்புகள் தொடர்பான கொலை, கொலை முயற்சி, சதித்திட்டம் தீட்டியது, கடத்தல் உள்ளிட்ட கிரிமினல் வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள தேசபக்தர்? ஆர்.எஸ்.எஸ் கொலைகாரன் அசீமானந்தாவிடம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நான்கு நேர்காணல் நடத்தி அவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் அடிப்படையில் மிக ஆதாரத்துடன் தி கேரவன் இதழின் ஆசிரியர் - மேலாளர் லீனாகீதா ரெகுநாத் அவர்கள் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்.

60 வயதான அசீமானந்தா ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் ஆதிவாசிகள் பிரிவான வன்வாசி கல்யான் ஆஷ்ரம் (வி.கே.ஏ) என்ற அமைப்பைச் சேர்ந்தவர். 2007 பிப் 18 இரவு டெல்லியிலிருந்து பாகிஸ்தான் செல்லும் சம்ஜுதா எக்ஸ்பிரஸ் ரணிலில் நடந்த தாக்குதலில் 68 பேர் கொல்லப்பட்டனர் அசீமானந்தா சம்பந்தப்பட்ட ஐந்து தாக்குதல்களில் இது இரண்டாவது ஆகும். மே 2007ல் 11 பேரைக்

கொன்ற ஹைதராபாத் மெக்கா மசூதி குண்டுவெடிப்பு அக்டோபர் 2007இல் 3 பேரைக் கொன்ற அஜ்மீர் தர்க்கா குண்டுவெடிப்பு மேலும் செப்டம்பர் 2006ல் மற்றும் செப்டம்பர் 2008ல் 37பேர் உயிர்களைப் பறித்த மாலேகான் தாக்குதல் ஆகியவற்றில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார். மாலேகான் வழக்கில் அவர்பெயர் இடம் பெற்றுள்ளது. குற்றச்சாட்டு அளிக்கப்படவில்லை.

### ஆர்.எஸ்.எஸ் தலைமையே நடத்திய பயங்கரவாதச் செயல்கள்

இந்த வழக்குகள் மும்பை தீவிரவாத எதிர்ப்பு குழு (ஏ.டி.எஸ்) ராஜஸ்தான் தீவிரவாத எதிர்ப்புக்குழு, மத்திய புலனாய்வுக்குழு (சி.பி.ஐ.) மற்றும் தேசிய புலனாய்வுக்குழு (என்.ஐ.ஏ) மற்றும் பல்வேறு குழுக்களால் புலனாய்வு செய்யப்பட்டது. முறையாகக் குற்றம் சாட்டப் பட்ட 31 பேர்களில் அசீமானந்தாவுடன் ஏ.பி.வி.பியின் தேசிய செயற்குழு உறுப்பினர் பிரயக்சிங் தாகூர், இந்தூர் மாவட்ட முன்னாள் ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுனில்ஜோஷி ஆவார்கள். அசீமானந்தா இந்த சதித்திட்டங்கள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ். சின் அன்றைய பொதுச்செயலாளர் இன்றைய தலைவர் மோகன் பகவத் அவர்களின் அனுமதியோடு நடைபெற்றதாக நேர்காணலில் பதிவு செய்கிறார்.

> **“ குண்டு வெடிப்புக்குக் காரணம் ஆர்.எஸ்.எஸ். ஆயிற்றே! அதனால் நடுநிலைவாதம் பேசும் பாசிச ஆதரவாளர்கள் அமைதி காக்கிறார்கள். தி கேரவனில் வந்த இந்தக் கட்டுரை பற்றி தமிழ் ஊடகங்கள் வாய்மூடிக் கள்ள மவுனம் சாதித்தன.**

ஜூலை 2005இல் சூரத் நகரில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உயர்மட்டக் கலந்தாய்வுக்குப் பின் குஜராத்தின் டேங்ஸ் பகுதியில் ஒரு கோவிலில் தங்கியிருந்த அசீமானந்தாவையும் அவரது கூட்டாளியுமான சுனில் ஜோஷியையும் மோகன் பகவத், இந்திரேஸ்குமார் (ஏழுபேர் கொண்ட ஆர்.எஸ்.எஸ்ஸின் தேசிய செயற்குழு உறுப்பினர்களில் ஒருவர்) ஆகியோர் சந்தித்து உரையாடியதை ஆதாரப்பூர்வமாகப் பதிவு செய்துள்ளார். புலனாய்வுக் குழுக்களின் குறிப்புகளில் இந்திரேஸ்குமார் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் மோகன்பகவத் பற்றி எதுவும் இல்லை. இந்திரேஸ்குமார் குற்றம் சாட்டப்பட்டவுடன் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. ஆகிய அமைப்புகள் வீதிக்கு வந்தன.

நேரடியாக ஆர்.எஸ்.எஸ். ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. ஒரு சர்சங்சாலக் முன் எப்போதும் மேற்கொள்ளாத நடவடிக்கையாக மோகன்பகவத் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார். சி.பி.அய். யால் ஒருமுறை இந்திரேஸ்குமார் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்பு, இந்த வழக்கு தேசியப் புலனாய்வுக் கழகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டது அது அசீமானந்தா மற்றும் பிரக்யாசிங் ஆகியோரைத் தாண்டி செல்லவில்லை.

குண்டுவெடிப்புக் குற்றவாளிகளை இணைக்கும் புள்ளியாக இருந்த சுனில்ஜோஷி 2007 டிசம்பரில் மர்மமான முறையில் கொல்லப் பட்டார். இந்த வழக்குகளை விசாரணை செய்த புலனாய்வுக் குழுக்களின் அறிக்கை ஆர்.எஸ்.எஸ். ஸைத்தடை செய்யக் கோரியது. ஆனால் உள்துறை அமைச்சகம் கண்டுகொள்ள வில்லை.

### கள்ளமவுனம் சாதித்த தமிழ் ஊடகங்கள்

கட்டுரையாளர் அசீமானந்தா மற்றும் சங்குடும்பத்தினரால் நிகழ்த்தப்பட்ட குற்றங்களை அவர் வாயாலே வாக்குமூலம் வாங்கியும் சம்பவங்களைப் புள்ளி விபரத்தோடு பதிவும் செய்துள்ளார். அசீமானந்தாவுக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் உள்ள நெருக்கத்தை ஆதாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளார். ஆனால் அசீமானந்தாவின் அமைப்பையோ அல்லது மோகன்பகவத் போன்றோரையோ இங்கு யாரும் கேள்வி கேட்பதில்லை. மேலும் தி கேரவன் இதழின் அலுவலகம் தாக்கப்பட்டது.

இந்தியாவில் வேறு எந்த அமைப்போ, இயக்கமோ இப்படி ஒரு நெருக்கடிக்கு ஆளாகியிருந்தால் பார்ப்பன பயங்கரவாதிகள் தடைசெய்து அழித்திருப்பார்கள். ஊடகங்களில் ஊதிப் பெருக்கி இருப்பார்கள். ஆனால் குண்டு வெடிப்புக்குக் காரணம் ஆர்.எஸ்.எஸ். ஆயிற்றே! அதனால் நடுநிலைவாதம் பேசும் பாசிச ஆதரவாளர்கள் அமைதி காக்கிறார்கள். தி கேரவனில் வந்த இந்தக் கட்டுரை பற்றி தமிழ் ஊடகங்கள் வாய்மூடிக் கள்ள மவுனம் சாதித்தன.

### அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - லீனாகீதா ரெகுநாத்

அசீமானந்தா ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் அந்தமான் நிக்கோபர் தீவுப் பகுதியில் வேலை செய்ய அனுப்பப்பட்டார். அங்கு கிறித்துவத்திற்கு மதம் மாறியவர்களை மீண்டும் தாய் மதம் திருப்புதல் வேலையை செய்தார். அந்தமானில் சுனாமி பாதிப்பின்போது நிவாரணங்கள் வழங்க வந்தார். யார் யாரெல்லாம் தங்களை இந்துக்கள் என்று அறிவித்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படவேண்டும்

என வலியுறுத்தப்பட்டது. 2004 சுனாமி பற்றி அசீமானந்தா சொல்கிறார்

"ஒரு கிருஸ்த்துவப் பெண் தனது குழந்தைக்கு பால் வேண்டும் என்று வந்தாள். எனது ஆட்கள் இல்லை என்று கூறிவிட்டனர். அந்தக் குழந்தைக்கு மூன்று நாட்களாக எந்த உணவும் கிடைக்க வில்லை. கொஞ்சம் பாலாவது தராவிட்டால் குழந்தை இறந்துவிடும் என்று அந்தப்பெண் கெஞ்சினாள். எங்கள் ஆட்கள் சுவாமி ஜீயிடம் கேள் என்றனர். நான் அந்தப் பெண்ணிடம் அவர்கள் என்ன செய்கிறார்களோ அதுதான் சரி, உனக்கு இங்கே பால் கிடையாது என்று கூறினேன்"

என்கிறார். இதைத் திரும்பத் திரும்பக் கூறுவதை அசீமானந்தா பெரிதும் விரும்பினார். ஆர்.எஸ்.எஸ். எவ்வளவு கொடூரமான மனிதாபிமானமற்ற கொலைகார அமைப்பு என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. இவர்கள் மக்களுக்குச் சேவை செய்வதெல்லாம் இந்த அடிப்படையில்தான்.

அசீமானந்தா கட்டுரையாளரிடம், " 1998 டிசம்பர் முதல் 1999 ஜனவரி வரை 40,000 கிருஸ்துவர்கள் இந்து மதத்திற்கு மாற்றப்பட்டனர். 30 சர்ச்களை இடித்து கோவில் கட்டினோம்" என பெருமையாகக் கூறினார். "இந்துக்களை இந்து வெறியர் ஆக்குங்கள் மீதி வேலைகளை அவர்கள் பார்த்துக் கொள்ளவார்கள்" என்றும் கூறினார்.

இப்படி இக்கட்டுரை முழுக்க ஆர்.எஸ்.எஸ். நேரடி மேற்பார்வையில் அசீமானந்தா நடத்திய கொலைகள், சர்ச்சுகள் இடிப்பு, கட்டாய மதமாற்றம், சுனாமி நிவாரணத்தில் கூட மதவெறி என அவர்செய்த அனைத்தையும் ஆதாரங்களோடு பதிவு செய்கிறார். இந்தியாவிலேயே மிகப்பெரிய தொண்டு நிறுவனமாகக் காட்டிக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். ஸின் உண்மைமுகம் தெளிவாகத் தெரிகிறது.

**ஆர்.எஸ்.எஸ் – பி.ஜே.பி தொடர்புகள்**

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவராக மோகன் பகவத் வந்த பின்பு அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள், நடைமுறை யுக்திகள், துணைஅமைப்புகளை ஒழுங்குபடுத்துதல் என அனைத்தையும் விரிவாக விளக்குகிறது. ஆர்.எஸ்.எஸ். என்பது சேவை அமைப்பு, அதற்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லை என்பது தவறு என்பதை மிகத் துல்லியமாக ஆதாரத்துடன் விளக்குகிறார் கட்டுரையாளர்.

மோகன் பகவத் பதவியேற்று அய்ந்து ஆண்டுகளில் அதிகார மய்யத்தையும் மத நம்பிக்கையையும் இணைத்து நிர்வகிப்பதில் வெற்றி பெற்றுள்ளார். இந்தியாவின் மிகப் பெரிய தொழிற்சங்கம், மாணவர் அமைப்பு, ஒரு பெரிய அரசியல் கட்சி என அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆர்.எஸ்.எஸ். எவ்வாறு தனக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை என கூறமுடியும்?

119 பேரைக்கொன்ற அசீமானந்தா போன்ற கொலைகாரனின் ஒப்புதல் வாக்குமூலம் ஆர்.எஸ்.எஸ். தலைமையின் நேரடி தொடர்பு ஆகியவற்றால் நிலை குலைந்து போயிருந்தது இந்துத்துவக் கும்பல். மோகன் பகவத் திட்டமிட்டு மோடியை மாற்றத்தின் நாயகனாக முன்னிறுத்தி பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டார். ஒருவேளை ஐ.மு.கூட்டணி வெற்றி பெற்றால் ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்படும் அளவுக்கு ஆதாரங்கள் இருந்தன. மோகன் பகவத் திட்டமிட்டு பி.ஜே.பி.க்குள் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களை அனுப்பி வேலைசெய்ய வைத்து மோடியைப் பிரதமராக்கினார்.

இந்தியாவை இந்து தேசம் ஆக்க வேண்டுமென்றால் மோடி பிரதமராகவேண்டும் என ஆர்.எஸ்.எஸ். கட்டளையிட்டது. அதன்படி ஊடகங்கள், கார்ப்ரேட்கள் வேலை செய்தார்கள். மோடி குஜராத் முதல்வராக செயல்பட்ட விதத்தை வைத்து அவரை இந்தியாவின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்க ஆர்.எஸ்.எஸ். முடிவெடுத்தது. அப்போது மோடிக்குக் கடுமையான எதிர்ப்பு கட்சியில் இருந்தது. அதை ஆர்.எஸ்.எஸ். சரிசெய்து அவரை பிரச்சாரச் செயலாளராக்கி பிரதம வேட்பாளராக அறிவித்தது.

இந்தக் கட்டுரை முழுவதும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் பி.ஜே.பி. க்குமான உறவு, மோகன் பகவத்தின் திட்டமிட்ட உழைப்பு, மோடியை முன்னிறுத்தல் என அவர்களின் செயல்பாட்டை விளக்குகிறது. 1925இல் துவக்கி 2025இல் இந்தியாவை ஆள்வோம் என்ற சங்பரிவாரத்தின் திட்டம் 2015 லேயே நடைமுறைக்கு வந்துவிட்டது. முற்போக்காளர்களாகிய நாம் என்ன செய்யப் போகிறோம்?

தோழர்களே, இந்தியா எதை நோக்கி? தலைப்பே அச்சம் ஊட்டும் விதமாக உள்ளது.ஆம் கற்காலத்தை நோக்கி இந்தியாவைத் திருப்ப நினைக்கும் பழமைவாதிகளுக்கும் முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கும் இடையே நடைபெறும் இந்தப் போராட்டம் இறுதியில் அறிவியல் மாற்றத்தில் நம்பிக்கை உள்ள நாம்தான் வெல்வோம். அதற்கான ஒரு போர்கருவியாக, ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி ஆகியவற்றின் செயல்பாடு, எதிர்காலத் திட்டம் என விரிவாக விளக்குகிறது இந்நூல். மாற்றத்தை விரும்பும் அனைவரும் இந்தப் புத்தகத்தை நண்பர் களுக்கும்,தோழர்களுக்கும் பரிந்துரை செய்யுங்கள்.

கிடைக்குமிடம்: எதிர்வெளியீடு, 96, நியு ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642002, பேசி:- 04259-226012, விலை - ரூ150

கிருபா நந்தினி

# காலநிலை மாற்றம் மற்றும் உலக வெப்பமயமாதல் விழிப்புணர்வு மாநாடு

கால நிலை மாற்றம், உலக வெப்பமயமாதல், சுற்றுச்சூழல் பாதிப்பு என்கிற சொற்கள் தற்போது அதிகம் பேசப்படுகின்றன அதுவும் குறிப்பாக ஏதேனும் இயற்கை மிகப் பெரிய மாற்றத்தினால் உயிர் மற்றும் பொருள் இழப்புகள் ஏற்படும் பொழுது மட்டும்.

தனிமனிதச் செயல்பாடுகளில் இருந்து சமூக அரசியல் நடவடிக்கைகள் வரை இயற்கையின் பாதுகாப்புக் குறித்த அக்கறை சிறிதும் இல்லாமல் சுயநலமே மேலோங்கி நிற்கிறது. இதனால் இயற்கையின் தன்மையிலும் போக்கிலும் பல மாறுபாடுகள் ஏற்பட்டு வருகின்றன.

குறிப்பாக வரலாறு காணாத கடும் மழை ஒரு மணி நேரத்தில் 50 மில்லி மீட்டர், கடும் வறட்சி ஏப்ரல் மாதத்தில் 38 டிகிரி செல்சியஸ் ஆகிய மாற்றங்களை நேரடியாக அனுபவித்துக் கொண்டிருக் கிறோம். இவற்றிற்கான தீர்வுகள் குறித்து அச்சமும், கவலையும் தோய அறிக்கைகள் தருகின்றனர் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள். ஆனால் அவற்றைப் பரிசீலிக்கத் தான் மக்கள் தயாரில்லை. மக்களின் இந்த அலட்சியம் ஆளும்வர்க்கத்திற்கு வசதியாகப் போனது. வளர்ச்சியின் பேரால், அரசுகளும் போட்டிபோட்டுக் கொண்டு தங்களால் முடிந்த அளவு இயற்கையின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கிடும் செயல்களைச் செய்கிறது.

அதிலும் இந்தியாவில் மதம், சடங்கு, சம்பிரதாயம் என்கிற மிகப்பிற்போக்கான பழக்க வழக்கங்களால் இயற்கை அடையும் இன்னல் களுக்கும், சூழல் கேடுகளுக்கும் வரையறையே கிடையாது. மேலும் இதைப் பயன்படுத்தி மற்ற நாடுகளும் நம்மைக் குப்பைத்தொட்டியாக்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றை இந்தியப் பண்பாடு என்று பெருமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

இத்தவறான நிலை மாற, மக்களைச் சிந்திக்க வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த *PIPAL TREE – NON – Governmental Organization* தமிழ் நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களில் உள்ள எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் போராளிகளை ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்துகிறது. இதில் காலநிலை மாற்றத்திற்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள்.

அதில் உள்ளூர் மற்றும் அருகில் இருக்கும் இடங்களில் காலநிலை மாற்றத்திற்கான மூலத்தை அறிந்து அதனால் ஏற்படும் விளைவுகள், அதற்கான மாற்றுச் சிந்தனை, தீர்வுகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து வெளியிட வேண்டும். குறும்படம், புகைப்படங்கள், கட்டுரைகள் ( மாத, வார இதழ்கள், தினசெய்திகள் ) ஆகிய வடிவங்களில் மக்களுக்கு ஆய்வு முடிவுகளை அவர்களுக்குப் புரிந்த மொழியில் கொண்டு சேர்க்க வேண்டும்.

2015-2016 க்கான நிகழ்வில் நான் கலந்து கொண்டேன். 'காட்டாறு' அறிவியல் பண்பாட்டு மாத இதழில் 2016 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில், 'காலநிலை மாற்றம் மன்னார்வளைகுடா முதல் கூடங்குளம் வரை' என்ற தலைப்பில் எனது ஆய்வுக்கட்டுரை வெளிவந்தது.

பிப்ரவரி 25 மற்றும் 28 தேதிகளில் பெங்களூரில் நடைபெற்ற 'காலநிலை மாற்றம் மற்றும் உலக வெப்பமயமாதல் விழிப்புணர்வு மாநாட்டில்' காட்டாறில் வெளிவந்த எனது ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்துப் பேசினேன். என்னுடன் தோழர்கள் கா.சு.நாகராசன் மற்றும் தினேசுகுமார் இருவரும் கலந்துகொண்டனர்.

மூன்று நாட்கள் நடந்த மாநாட்டில் சுற்றுச் சூழல் மற்றும் அதன் பின்னணியில் செயல்படும் அரசியல் பற்றியும் நிறையத் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அதை உங்களுடன் பகிர்ந்து விரும்புகிறேன்.

**முதல் நாள்**

திரு.கோபால கிருஷ்ணவாரியர், இந்தியாவில் பேனொஸ் தெற்கு ஆசியா மண்டல சூழல் மேலாளர் மற்றும் சுற்றுச்சூழல் ஊடகவியலாளர்களின் கருத்துக்களத்தின் செயலாளர் (Regional Environment Manager with Panos South Asia, and Secretary of Forum of Environmental Journalists in India) பாரிஸ் உலக அரசியல் எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்றும் வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளை அடிமைப் படுத்தும் முறையையும், சுற்றுச்சூழல் சம்மந்தப்பட்ட செயல்களில் கூட அவர்களின் திணிப்பை எடுத்துக் கூறினார்.

**இரண்டாம் நாள்**

பி.பாலன் (Award Winning Documenntary Film Maker) அவர்களின் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் வனவிலங்குகளின் பாதிப்பு Climate Change Impact on Wildlife என்ற தலைப்பில் ஆவணப்படம் திரையிடப் பட்டது.

காட்டு யானைகள் எவ்வாறு கடத்தப்பட்டு கோவில் யானைகளாகப் பழக்கப்படுத்தப்படுகின்றன என்பதையும், அவற்றின் தந்தங்களை எடுத்து, கடத்தி, கடவுள் சிலைகள் செய்வதையும் - அந்த நாட்களில் ஒவ்வொரு நொடியும் யானைகள் அடிப்படை

தேவைகளான குடி நீர், உணவு, இருப்பிடம் மற்றும் இணை சேர்த்தல் ஆகியவற்றைக் கூட செய்து கொடுக்காமல் எப்படி மனிதன் கொடுமைகளுக்கு ஆட்படுத்து கின்றான் என்பதைப் பற்றியும் எடுத்துக் காட்டினார்.

இதன் விளைவாக, காடுகள் அழிந்து காலநிலை மாற்றம் ஏற்படுகின்றன. இவ்வனத்தை மனிதன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக மதம், கலாச்சாரம், பண்பாடு என்ற பெயரில் இயற்கையை அழித்து வருகிறான். இயற்கையை அழித்து விட்டு மனிதன் மட்டும் நிலைக்கப் போவதில்லை அவனும் அழிவதற்காகவே.??? என்று முடித்தார்.

அரை மணி நேரம் குறும்படம் முடியும் வரை அமைதியாக அழுதுகொண்டிருந்தது அரங்கு. படம் முடிந்த பிறகும் கூட சில நிமிடங்கள் யாராலும் பேச முடியவில்லை. காரணம், அது படமல்ல நாங்கள் ஆராய்ந்த உண்மை நிகழ்வு. கேரளாவில் கோவில்களிலும் அவற்றால் நடத்தப்படுகிற விழாக்களிலும், யானை வளர்ப்பு இடங்கள், பயிற்சி அளிக்கும் இடங்கள் என யானைகளின் சித்ரவதைகளை நேரடியாகப் பதிவு செய்ததின் தாக்கம் தான் எங்களின் அழுகைக்கான காரணம்.

மற்றொன்று யானையே தனது வாழ்க்கை இப்படி முற்றிலுமாக மனிதனுக்கு அடிமையானதை நம்மிடம் வருத்தத்துடன் கேள்வி எழுப்பும் விதமாக குறும்படம் எடுத்திருக்கிறார். திரு. பாலன் அவர்களிடம் பேசும் போது மாணவர்களுக்கு முக்கியத்துவம் தருவதாக சொன்னார்.

தோழர்.கா.சு.நாகராசன் அவர்கள் 'Natural History Trust' ன் மூலம் மாணவர்களுக்காக பொள்ளாச்சி கா.க.புதூர் மற்றும் அம்பராம்பாளையம் பகுதியில் திரையிடுமாறு வேண்டுகோள் விடுத்தார். திரு.பாலன் மறுக்காமல் திரையிட வருவதாக உடனே உறுதியளித்தார்.

### அறிவியலாளர்களின் மாநாட்டில் காட்டாறு

காலநிலை மாற்றம் மற்றும் பொதுவான இயற்கை குறித்த சிக்கல்கள், தீர்வுகள் ஆகிய கருத்துக்களை அனைவரும் தனித்தனியாக முன்வந்து பகிர்ந்து கொண்டோம். அரை மணி நேரத்தில் இயற்கை நிகழ்வுகள் குறித்த Skit – Mime – Drama தயார் செய்து நடித்துக் காட்டினோம்.

இறுதியாக முனைவர் மூத்த விஞ்ஞானி வி. டி. பத்மநாபன் அவர்கள் அணு உலை மற்றும் நியுட்ரினோ பற்றியும் தெரியாத பல அறிவியல் செயல்பாடுகள் மற்றும் அரசியல்வாதிகளின் சூழ்ச்சியையும் தெளிவாக விளக்கினார். அதிர்ச்சியாகவும் போராளிகளின் அடுத்தகட்ட நகர்வுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

இதே போல் அடுத்த ஆண்டு (2016 -2017) க்கான விழிப்புணர்வுக் கலந்தாய்வு மாநாடு நடக்க உள்ளது. விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம். என்னுடைய பங்கீட்டைத் தரத் தயாராக உள்ளேன். உங்கள் பகுதிகளில் மாணவர்களுக்கு Climate Change Impact on Wildlife என்ற குறும்படத்தைத் திரையிட விரும்பினால் தொடர்பு கொள்ளவும்.

என்னுடைய ஆராய்ச்சி முடிவுகளை எந்த மாற்றமும் இல்லாமல் உரிய நேரத்தில் வெளியிட்டு, என்னுடைய கட்டுரைகளின் மீதான மக்களின் கருத்துகளையும், விமர்சனங்களையும் பகிர்ந்து கொண்ட 'காட்டாறு' குழுவிற்கு நன்றிகள்.

காட்டாறு இதழை மாநாட்டில் விநியோகித்தேன். இந்தக்குறிப்பிட்ட கட்டுரையை மட்டுமல்லாது காட்டாறில் வெளிவந்த மற்ற கட்டுரைகள் பற்றியும் என்னிடம் சிலர் கருத்துகளைப் பகிர்ந்தனர். இந்த வாய்ப்பை அளித்த PIPAL TREE – FIRE FLIES குழுவினருக்கும் நன்றி.

சமூக மாற்றத்திற்கான பணிகளில் சுற்றுச்சூழல் சார்ந்த பணிகளான இயற்கையை அழித்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தத் தலைமுறையை - இயற்கையைச் சார்ந்து வாழ வேண்டி விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியே மிகவும் முக்கிய தேவையாக இருக்கிறது என்பதை உணர வேண்டிய உரிய நேரம் இது.

**சாதிதான்**
**சமூகம் என்றால்,**
**வீசும் காற்றில்**
**விசம் பரவட்டும்**



சேஷூர்.கு.செந்தில்குமார்

# அடித்தட்டு மக்களை அழிக்கும் அண்ணன்மார் விழாக்கள்

தமிழ்நாட்டின் உள்ள இடைநிலை ஜாதிகளான வேளாளக் கவுண்டர்களும் - வேட்டுவக் கவுண்டர்களும் தங்களது குலப்பெருமையைக் காட்ட தங்களுக்குள் ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு அழிந்த ஒரு கதைதான் பொன்னர் - சங்கர் வரலாறு எனப்படுகிறது. கல்வெட்டு ஆதாரங்களோ, செப்புப்பட்டய ஆதாரங்களோ, குறிப்பிடத்தக்க வரலாற்று அறிஞர்களின் குறிப்புகளோ இல்லாமல் பரப்பப்படும் இந்தக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களில் அண்ணன்மார் கோவில்களும், அண்ணன்மார் திருவிழாக்களும், வீரப்பூர் சுற்றுப்பயணங்களும் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதில் வேதனையான உண்மை என்னவென்றால் இந்த விழாக்களை முன்னின்று நடத்துபவர்கள் அனைவரும் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தினர்தான். தலித்துகள் முன்னின்று இரு கவுண்டர் ஜாதிகளின் வரலாற்றைப் பரப்புவது ஏன்? அதற்கு அடிப்படையான பொன்னர் - சங்கர் கதையைப் பார்ப்போம்.

### வேளாளக் கவுண்டர்கள் பரப்பும் கதை

கொங்குவேளாளர் சமூகத்தைச் சேர்ந்த குன்றுடையாக் கவுண்டன் தனது பங்காளிகளால் ஏற்பட்ட சண்டையில் பொன்னி வளநாட்டுக்குக் குடிபெயர்கிறார். குன்றுடையாருக்கும் அவரது மனைவி தாமரைக்கும் பொன்னர்- சங்கர் என்று இரு ஆண்குழந்தைகளும், அருக்காணித்தங்காள் என்கிற பெண் குழந்தையும் பிறக்கிறார்கள். பங்காளிகள் மறுபடி சூழ்ச்சி செய்து குழந்தைகளைக் கொல்லப் பார்க்கின்றனர். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரான சாம்புகர் குழந்தைகளைக் காப்பாற்றி வளர்த்து ஆளாக்குகிறார். அண்ணன்மார் பெரியவர்களானதும் அவர்களுடைய குலவரலாற்றைச் சொல்லி தாய் தந்தையிடம் சேர்ப்பிக்கிறார் சாம்புகன்.

தலையூர்க்காளி என்கிற வேட்டுவ சிற்றரசன் அண்ணன்மாரின் அருக்காணித்தங்கத்தை பெண்டாள முயற்சிக்கிறான். தொடர்ந்து கொடுமைகள் செய்து கொண்டேயிருக்கிறான். அவனது காட்டுப்பன்றிக்கூட்டம் அண்ணன் மாரின் வெள்ளாமைக் காட்டை அடிக்கடி அழிக்கிறது.

பெரியண்ணன் சின்னண்ணனிடம் அருக்காணித் தங்கம் முறையிட்டுத் தீமைகளைச் சொல்லியழ, அண்ணன்மார் போருக்குப் புறப்படுகிறார்கள். அழிக்க முடியாத காட்டுப் பன்றியைக் கூட்டத்தை தலித்தான சாம்புகனின் நாய்ப்படைக் கொண்டு அழித்தொழிக்கிறார்கள். இதனால் வெகுண்டெழுந்த தலையூர்க்காளி போருக்கு ஆயத்தமாக, போர் நடக்கிறது. வேட்டுவர் படையை அழித்தொழிக்கிறார்கள் அண்ணன்மார். ஆனால், தலையூர்க் காளியின் சூழ்ச்சியால் பொன்னர் சங்கருக்கு மரணம் நேர்கிறது.

அருக்காணித் தங்கம் தங்களது குலதெய்வமான பெரியகாண்டியம்மனை வேண்டி அண்ணன் மாரை உயிர்ப்பிக்கிறாள். அவர்களும் உயிர் பெற்றெழுந்து வந்து தங்காளுக்கு ஆறுதல் கூறகின்றனர். பிறகு ‘மாண்டவர் மீண்டால் நாடு தாங்காது’ என்று சொல்லிவிட்டு உயிர் துறக்கிறார்கள்.

### வேட்டுவக் கவுண்டர்கள் பரப்பும் கதை

காட்டை வசிப்பிடமாகக் கொண்ட வேட்டுவர்களின் நிலத்தை மண்ணாசை பொங்க ஆக்கிரமிப்புச் செய்தவர்கள்தான் அண்ணன்மார். வேட்டுவர்களின் குடியிருப்பான காட்டை அழித்து நிர்மூலமாக்கி வெள்ளாமை செய்ய ஆரம்பித்ததால், காட்டில் சுதந்தரமாகத் திரிந்த அவர்களது பன்றிகளும், விலங்குகளும் வெள்ளாமைக்காட்டில் புகுந்ததில் வியப்பென்ன? தலையூர்க்காளிக்கும் அண்ணன்மாருக்கும் இப்படி வந்த பகைதானே தவிர பெண் இச்சையால் வந்த பகை அல்ல.

அண்ணன்மார் வேட்டுவர்களை முற்றாக நீர்மூலமாக்கிய நிலை கண்டு, காளியிடம் போய்க்கதறி வேண்டுகிறான். உடனே காளி பிரசன்னமாகி, ‘உன்குலம் இனி அழியாது வெட்ட வெட்டத் தழையும் உன் குலம்’ என்று வரம் கொடுக்கிறாள். ஒரு வஞ்சகனை, பெண்பித்தனை கடவுள் எப்படி ஏற்றுக் கொண்டு வரம் கொடுக்கும்? அண்ணன்மார் காட்டை அழித்ததால்தான் காட்டின் தெய்வம் வெகுண்டெழுந்து அவர்களை அடித்துப்போட்டு விட்டது.

அருக்காணித்தங்காள் அழுது புலம்பி, “காட்டைச் சீர்திருத்தி வெள்ளாமை செய்து பிழைக்கும் வெள்ளாளர்கள் தானே நாங்கள்... இதில் என்ன தவறு?” என்று நியாயம் கேட்டாள். காட்டுத் தெய்வமும் மனமிரங்கி “காட்டை உண்டதால் நீங்கள் காஉண்டர் ( கவுண்டர்) என்ற அவச் சொல்லுக்கு ஆளானீர்கள். காட்டை அழிக்காமல் விலங்குகளுக்கும், காட்டில் வசிக்கும் வேடர் களுக்கும் தொல்லை தராமல் வாழ்வீர்களாக...’ என்று அண்ணன்மாரை உயிர்ப்பித்து விட்டது.

ஆதாரம்: மே 2010 உன்னதம் இலக்கிய இதழ், கீற்று.காம்

### அடிமைத்தனத்தில் பெருமை என்ன?

ஆக, நடந்தது இரண்டு இடைநிலைஜாதிகள் தனது முதன்மை எதிரியான பார்ப்பனர்களுடன் போராடாமல் தங்களுக்குள் வெட்டிக்கொண்டு

செத்துப்போனார்கள். அந்த இடைநிலை ஜாதிகளின் ஒரு ஜாதிக்கு தாழ்த்தப்பட்டவர் தளபதியாக இருந்து போரிடுகிறார். கொங்கு வேளாளர்கள் வீரத்தில் சிறந்தவர்கள் என்று நிரூபிக்க நடந்ததாகச் சொல்லப்படும் கதையில் அவர்களுக்குச் சிறந்த அடிமையாக சாம்புகன் திகழ்ந்துள்ளார் என்பதைத்தான் இக்கதை உறுதிப்படுத்துகிறது.

பொன்னர் - சங்கரின் நாய்ப் படைக்கு தாழ்த்தப்பட்டவர் தளபதியாக இருந்துள்ளார். நாய்கள் பஞ்சமர்களுடைய (தாழ்த்தப்பட்டவர்கள்) விலங்கு என மனுசாஸ்திரம் சொல்கிறது.

"சண்டாளர்களும், ஸ்வபாக்களும் கிராமத்துக்கு வெளியே தான் வசிக்க வேண்டும் அவர்கள் உலோகப் பாத்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது. அவர்கள் தீண்டிய பாத்திரத்தைச் சுத்தம் செய்ய இயலாது. நாய்களும், குரங்குகளும் தான் அவர்களுடைய செல்வங்கள்."

-மனுசாஸ்திரம், அத்தியாயம் 10, ஸ்லோகம் 51

முதலில் இது கதை. உண்மை வரலாறு அல்ல. அந்தக் கற்பனைக் கதையிலும் தாழ்த்தப் பட்டவர்கள் சிறந்த அடிமையாகத்தான் காட்டப்பட்டுள்ளார்கள். இந்தக் கதையை உண்மை வரலாறு என்று யாராவது உறுதிப்படுத்த முனைந்தால் அவர்களுக்கு ஒரு கேள்வி. தாழ்த்தப்பட்டவர்கள் தளபதியாகவே உயர்ந்தாலும் அவர்களுக்கு மனு விதித்த கட்டளையை மீறமுடியாமல்தான் வாழ்ந்தார்கள் என்றால், சாம்புகனில் படைத்திறத்தால் அந்தக் காலத்தில் வாழ்ந்த தாழ்த்தப்பட்டவர் களுக்கு என்ன நன்மை இருந்திருக்கும்? அந்தச் சாம்புவனுக்குக் கொடுக்கப்பட்ட பெருமையைத் திருவிழாவாகக் கொண்டாடுவதால் இன்றிருக்கும் தாழ்த்தப்பட்ட வருக்குத்தான் என்ன முன்னேற்றம் வந்துவிட முடியும்?

சாம்புகன் எனப்படும் தோட்டி, பொன்னர்-சங்கருக்கு முரசடித்துச் செய்தி சொல்வது, கொம்பூவது போன்ற வேலைகளைச் செய்துள்ளார். இதுபோன்ற செயல்களை இன்றைக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் (சக்கிலியர்) செய்து கொண்டுள்ளார்கள். இந்த இழிதொழிலைச் செய்யக் கட்டாயப்படுத்துகிறார்கள்.

இதற்கு ஆதாரமாக அண்ணன்மார் கோவில்களின் வெளியே சாம்புகன் மண்டியிட்டு முரசடிப்பது போன்ற சிலைகள் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இரு ஜாதிகளுக்கு இடையே நடந்த மோதலில் கடவுள்தன்மையைத் திணித்து, தாழ்த்தப்பட்ட மக்களிடையே பரப்பி, அவர்களையே விழாக்களைக் கொண்டாடச் செய்து, இன்றவும் தமது சமுதாய ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வைத்துள்ளனர் கொங்குவேளாளர்கள்.

நல்ல அடிமையைப் பெற்றது ஆதிக்கக் காரனுக்குப் பெருமையாக இருக்கலாம். ஆதிக்கக் காரனிடம் நல்ல அடிமையாகப் பெயர் பெறுவது எந்த இனத்துக்கும் பெருமை இல்லை. எந்த இனத்துக்கு விடிவும் இல்லை.

பஞ்சமர் பிரிவைச் சேர்ந்த வேறுசில ஜாதியினரும் அண்ணன்மார் விழாக்களைக் கொண்டாடு கின்றனர். கோபி அருகே அயலூர் கிராமத்தில் கவுண்டர்கள் பன்றியைக் குத்தி பலியிடுகிறார்கள். ஆனால் இரத்தக்காவு குடிப்பது, பன்றிக் கறியைச் சமைத்துச் சாப்பிடுவதைத் தவிர்த்து விடுகிறார்கள். கோபி அருகே நாதிபாளையம், அவினாசி சேவூர்(கிளாகுளம்) மூப்பன் தோட்டம், திங்களூர் ஆகிய பகுதிகளில் வண்ணார்களும், நாவிதர்களும் கொண்டாடுகிறார்கள். குள்ளம்பாளையத்தில் நாடார்கள் கொண்டாடு கிறார்கள். ஆனால், மிகப்பெரும்பான்மையாக சக்கிலியர் சமூகத்தினரே இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர்.

### கல்வி – பொருளாதாரச் சீரழிவு

தமது அடிமைத்தனத்தைத் தாமே விழாவாகக் கொண்டாடும் சமுதாயம் எவ்வாறு விடுதலை பெறமுடியும்? இன்றைய நிலையிலும், சக்கிலியர்களுக்கு இந்த அண்ணன்மார் விழாக்கள் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகப்பெரும் சுமையாகவும், தடையாகவுமே விளங்குகின்றன.

பெரும்பாலும் மார்ச், ஏப்ரல், மே(மாசி, பங்குனி, சித்திரை) மாதங்களிலேயே விழாக்கள் நடைபெறுகின்றன. திருவிழா தொடங்கும்முன், இந்த ஊர் கோயிலின் பொறுப்பாளர்களான வேளாள ஜாதியினர் அல்லது வேறு இடைநிலை ஜாதியினரிடம் தாழ்த்தப்பட்ட மக்கள் (சக்கிலியர்) சென்று அனுமதி கேட்க வேண்டும். அவர்கள் அனுமதித்த ஏதாவது ஒரு நாளில் வேளாள ஜாதியினர் தலைமையில், சக்கிலியர் மக்கள் ஒன்றுகூடுவார்கள்.

திருவிழாவுக்கு நாள் குறிக்கப்படும். கோயில்வரி நிர்ணயிக்கப்படும். தற்போது நடப்பில் உள்ள வரி ரூ.4,000 முதல் ரூ.6,000 வரை இருக்கும். வரி 5,000 ரூபாய் என அறிவித்துவிட்டால் திருவிழா முடியும் முன் 15 நாளில் வரியை செலுத்திவிட வேண்டும். என்ற எழுதப்படாத சட்டம் அமலில் உள்ளது.

திருவிழாச் செலவை ஈடுகட்டப் பெற்றோர், பள்ளி, கல்லூரி மாணவர்களை பனியன் கம்பெனி மற்றும் இதர வேலைகளுக்கு அனுப்புகின்றனர். மார்ச், ஏப்ரல் மாதங்களில் 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புத் தேர்வுகள் நடைபெறுகின்றன. திருவிழாக்களால், தாழ்த்தப்பட்ட மாணவர்களின் மனம் திசை திரும்புகிறது. இதனால் படிப்பு கேள்விக்குறியாகிறது. திருவிழாவின் பெயரால் வீணாகும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரம் குறைந்தபட்சச் செலவுப்பட்டியல்:

கோவில் வரி 5000 ரூபாய், வீட்டில் உறவினருக்கு விருந்து வைக்க, மதுச் செலவு உட்பட 20,000 ரூபாய், 15 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் 10 நாள் ஏற்படும் வேலை இழப்பு நஷ்டம் 5000 ரூபாய், புத்தாடைச் செலவு- ரூ.10,000. ஒரு வீட்டுக்கு மொத்தம் சுமார் 40,000 ரூபாய் செலவாகிறது. ஒரு கிராமத்தில் 100

குடும்பங்கள் எனில், 40,00,000 சுமார் நாற்பது இலட்ச ரூபாய் இந்த விழாக்களின் மூலம் வீணாகிறது.

### தன்மான இழப்பு

வரி கட்டாதவரை பலபேர் முன்னிலையில் அவமானப்படுத்தி பணம் வசூலிக்கப்படுகிறது. அதையும் மீறி வரி செலுத்த முடியாதவர்களை ஊரைவிட்டுத் தள்ளி வைக்கப்படுகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் இன்றும் நடந்து கொண்டு உள்ளன. இந்த நடவடிக்கைகளுக்குப் பயந்து கொண்டு, அதிக வட்டிக்கு அவர்களிடமே பணம் பெற்று வரியைச் செலுத்தி விடுகிறார்கள். கோவில் வரி செலுத்தவில்லையெனில், சேரியில் (ஊர்) வாழ் வதற்கே அர்த்தமில்லை என சேரி வாழ் பெரியவர்கள் சொல்வதை இன்றும் கேட்கலாம்..

ஊரைவிட்டு வேறு ஊருக்குச் சென்றவர்கள் கூட பூர்வீகம் வேண்டுமென்று, கோவில் வரியைக் கொடுத்துவிடுகிறார்கள். மதம் மாறிய கிறிஸ்தவர் களிடமும் கட்டாய வரி வசூலிக்கிறார்கள். வரி செலுத்த முடியாதவர்களை மைக்கில் அறிவித்தும் அவமானப்படுத்துகிறார்கள்.

எது எப்படியோ, இந்த நவீன யுகத்திலும் வரி கொடுக்க வேண்டும் என்ற பழக்கத்தைப் பழக்கி வைத்துள்ளனர். சேரி மக்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காக கவுண்டர்கள் அந்தக் கோவில்களுக்கு ஆடு, கோழி, பன்றி மற்றும் இதரப் பொருட்களை இலவசமாகத் தருவதை வழக்கமாக வைத்துள்ளனர். அண்ணன்மார் கோவில் பூசாரிகளாகச் சேரிவாழ் மக்களே இருக்கிறார்கள். பூசாரிகளாக இருப்பதைச் சிறந்த கௌரவமாக நினைக்கிறார்கள். இதுபோன்ற பதவிகளின் மூலம் மரியாதை கொடுக்கப்பட்டுத் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

கோபி பகுதியில் மட்டும் பொலவ காளிபாளையம், தொட்டிபாளையம், முத்து காளிமடை,நாதிபாளையம், கோட்டுப்புள்ளாம் பாளையம், காசிபாளையம், அரசூர், அய்யம் பாளையம், ஆயிபாளையம், கலிங்கியம் ஆகிய 10 கிராமங்களில் தொடர்ச்சியாக ஒன்றன் பின் ஒன்றாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் இந்தக் கிராமத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஒரு கிராமத்திற்கு 40 இலட்சம் ரூபாய் எனில் 10 கிராமங்களுக்கு நான்கு கோடி ரூபாய் செலவாகிறது.

ஒரு ஆண்டுக்கு இவர்களது மூடநம்பிக்கைக்காக - அடிமைத்தனத்திற்காகச் செய்யும் செலவை வைத்து இப்பகுதி மக்களுக்கான கல்விக்கோ, சுயமரியாதை யான வேலை வாய்ப்பிற்கோ உரிய மாற்று ஏற்பாடுகளைச் செய்து விடலாம். சக்கிலியர் இனம் தான் துப்புரவுப் பணியிலும், மலமள்ளும் பணியிலும் உயிரைப் பணயம் வைத்து வேலைசெய்கிறது. மாற்று ஏற்பாடுகளுக்கு அரசுகளையும், அரசியல் கட்சிகளையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் தம்மிடமே உள்ள பொருளா தாரத்தை - செல்வத்தை தமது அடிமைத்தன்மையை நிலைநிறுத்திக்கொள்ளவே பயன்படுத்துகிறது.

### திருவிழா அரசியல்

உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தாங்கள் வெற்றிபெற வேண்டி அண்ணன்மார் கோவில் உள் மற்றும் வெளிக் கட்டுமான வேலைகளைச் செய்து தருவது, சிலைகளை வாங்கி (அ) கட்டித்தருவது, ஆடு, மாடு, கோழி, பன்றி போன்ற விலங்குகளைப் பலியிட இலவசமாகத் தருவது போன்றவற்றால் மக்களை ஏமாற்றுகிறார்கள். கோவில்களில் நடைபெறும் சண்டை, சச்சரவுகளைக் காவல்துறைக்குத் தெரியப்படுத்தாமல், இடைநிலை ஜாதியினர் தாமாகவே முன்வந்து அரசியல் சுயலாபத்திற்காக கட்டப்பஞ்சாயத்து செய்கின்றனர்.

தாழ்த்தப்பட்ட சக்கிலிய இன மக்கள் தீண்டாமை வன்கொடுமையால் பாதிக்கப்பட்டுக் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப் பட்டாலும் கூட, அண்ணன்மார் திருவிழாவைக் காரணம் காட்டியும், இலவசங்கள் மற்றும் அன்பளிப்புகள் கிடைக்காதென்று மிரட்டியும் வாபஸ் பெற வைக்கின்றனர். முயற்சியும் செய்துள்ளனர்.

### சமுதாயச் சட்டங்களிடம் தோற்கும் அரசியல் சட்டங்கள்

வழக்கு1: கூதாம்பி அர்ஜூன், மூர்த்தி ஆகியோர் தொடுத்த வன்கொடுமைத் தடுப்புச்சட்ட வழக்கு. மதுரைவீரன் கோயில் வேளாளக் கவுண்டர் இடத்தில் இருந்ததால், அதைத் தாழ்த்தப்பட்ட மக்களின் இடத்திற்கு எடுத்துச் செல்லுங்கள் இல்லையெனில் வழக்கை வாபஸ் பெறுங்கள் என நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

வழக்கு2: கோபி காவல் நிலையத்தில் ஆனந்தராஜ் கொடுத்த வன்கொடுமைத் தடுப்புச்சட்ட வழக்கு. வழக்கை வாபஸ் பெறவேண்டும். இல்லையெனில் ஊரைவிட்டு (சேரி) விரட்டிடுவோம் என மிரட்டப்பட்டார்.

வழக்கு 3 : திருப்பூர் மாவட்டம் சேவூர் காவல் நிலையத்தில் பஞ்சலிங்கம்பாளையம் குமரேசன், பொன்னுசாமி கொடுத்த வழக்கு. சேரி மக்களே காவல்நிலையம் வந்து இருவரையும் கெஞ்சி இடைநிலை ஜாதியினர் திருவிழாவிற்கு அனுமதி தரமாட்டார்கள் எனக்கூறி வழக்கை வாபஸ் பெற வைத்துவிட்டனர்.

இதுபோன்று தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக அரசியல், பொருளாதார ரீதியாகச் சுரண்டப்பட்டும், அடக்கப்பட்டும் வருகிறார்கள். இதில் வேதனையான, வெட்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், அம்பேத்கர் பெயரைச்சொல்லிக் கொண்டு செயல்படும் அமைப்புகளின் சில பொறுப்பாளர்கள், கோயில் பூசாரிகளாகவும், வரிவசூல் குழு தலைவர்களாகவும் இருந்து வருகிறார்கள். பண்பாட்டு ரீதியான ஒடுக்குமுறை, அவற்றிலிருந்து விடுதலை இவைகளை நடைமுறைப்படுத்த தோழர் அம்பேத்கர் காட்டும் வழியை பார்ப்போம்.

"ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும் சாஸ்திரங்களின் தளைகளில் இருந்து விடுவியுங்கள். மக்களின் மனங்களில் சாஸ்திரங்கள் உருவாக்கி வைத்திருக்கிற நாசகரமான கருத்தமைவுகளை நீக்கி தூய்மைப்படுத்துங்கள். இதை நீங்கள் செய்து முடித்துவிட்டால், மக்கள் தாமாகவே முன்வைத்து நீங்கள் சொல்லாமலேயே கலப்பு மணம் செய்வார்கள். சமபந்தி விருந்து நடந்துவார்கள்.

சாஸ்திரங்கள் சொல்வதாக மக்கள் நம்புகிற கருத்துக்களை உண்மையில் சாஸ்திரங்கள் சொல்லவே இல்லை என்று நீங்கள் ஆயிரம் விளக்கங்கள் தந்தாலும், ஆயிரம் வியாக்கியானாம் செய்தாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை. சாஸ்திரங்களை மக்கள் எப்படி புரிந்துகொண்டு இருக்கிறார்கள். என்பதுதான் முக்கியம், புத்தரும், குருநானக்கும் எடுத்த நிலைப்பாடை நீங்களும் மேற்கொள்ள வேண்டும். சாஸ்திரங்களை நிராகரித்தால் மட்டும் போதாது. சாஸ்திரங்களின் அதிகாரத்தை மறுக்க வேண்டும். சாதி புனிதமானது என்ற கருத்தை, இந்துமதம், இந்துகளிடம் உருவாக்கியிருக்கிறது. இந்து மதமே அவர்களிடம் உள்ள குறை என இந்துக்களிடம் சொல்வதற்கான துணிச்சல் உங்களுக்கு வேண்டும். அந்த துணிச்சல் உங்களுக்கு உண்டா?" - ஜாதியை ஒழிக்கும் வழி நூல் பக்கம்-91

*இன்றளவிலும் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனிய இடைநிலைஜாதிகள் ஆகியோரிட மிருந்து மிகக் கொடுமையான தாக்குதல்களுக்கு ஆளாகும் தலித் மக்கள் இந்து மதத்திலிருந்தும்-இந்து அடையாளங் களிலிருந்தும் வெளியேறுவதே சமூக விடுதலைக்கு அடிப்படையாகும். நமது சமுதாய விடுதலைக்கு எதிரான இந்து மதத்தை நாமே பின்பற்றிக் கொண்டு- இந்தச் சட்டங்களும், அரசுகளும் நம்மைக் காப்பாற்றும் என எண்ணிக் கொண்டு வாழும் அடித்தட்டு மக்களுக்களைப் பற்றி பெரியார் கூறுவது,*

"...ஒரு மனிதன் தன்மேலெல்லாம் மலத்தை எடுத்துப் பூசிக் கொண்டு வந்து எதிரில் நின்று "என்னைப் பார்த்து யாரும் அசிங்கப்படக்கூடாது. என்னை எட்டிப்போ என்று யாரும் சொல்லக் கூடாது" என்று சொன்னால் யாராவது கேட்பார்களா? அல்லது அது நியாயமாகவாவது இருக்குமா? அல்லது "மலம் பூசிக்கொண்டு வருபவர்களைப் பார்த்து யாரும் அசிங்கப் படக்கூடாது எட்டி நில் என்று சொல்லக் கூடாது" என்று இந்தியன் பினல் கோடில் அதாவது கிரிமினல் சட்ட புதகத்தில் ஒரு செக்ஷன் போட்டு அதற்கு ஒரு வருஷ தண்டனை என்றும் போட்டு விட்டதினாலேயே அந்தப்படி அசிங்கப்பட்டு எட்டி நில் என்று சொன்னவர்களில் இரண்டொருவரை தண்டித்துவிட்டதினாலேயே அசிங்கப்படும் குணத்தை மக்களிடமிருந்து மாற்றிவிட முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகவே நம்மவர்கள் தங்களுக்கு சூத்திரப்பட்டமும், தீண்டாதார், பஞ்சமர் என்கிற பட்டமும் வேறு யாராலோ கொடுக்கப்பட்டதாய் கருதி மற்றவர் பேரில் கோபப்படுவது வடிகட்டின அறிவீனமேயாகும். ஏனெனில் எவன் ஒருவன் தன்னை இந்து என்று சொல்லிக் கொள்ளு கின்றானோ அவனெல்லாம் சூத்திரப்பட்டமும், பஞ்சமப்பட்டமும் தானே எடுத்து தன் தலையில் சூட்டிக்கொண்டு திரிகின்றவனாவானே தவிர வேறில்லை" குடி அரசு 25.10.1931

*இந்து மதப் பண்பாட்டின் ஒரு அங்கமாக, அடையாளமாக உள்ள அண்ணன்மார்சாமிகளையும், மதுரைவீரன் விழாக்களையும் தூக்கிச் சுமந்தது போதும். காளியம்மன், மாரியம்மன், பகவதி அம்மன்களுக்கு விழா எடுத்தது போதும். குலதெய்வம் என்ற பெயரில் ஜாதித் தன்மையையும், இந்துப் பண்பாட்டையும் தவறாமல் பின்பற்றியது போதும். அம்பேத்கரின் மதமாற்றத்தைக் கையிலெடுப்போம். பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியைக் கடைப்பிடிப்போம். விடுதலை பெறுவோம்.*

**நன்றி: சேவூர் முதலிபாளையம் ஆ.ரமணி, இரா.இரவி, கோபி ஆனந்தராஜ், கூதாம்பி அர்ஜூனன்.**

# பலி ஆடுகள்

- 6 பக்க தொடர்ச்சி

அதெல்லா சரி மதினி. அதுக்காக அவுருக்குச் சோறு தண்ணியெல்லாம் கொண்டுபோவியாக்கும்? பொம்பளயாட்டம் அடக்க ஒடுக்கமா இருந்துபழகு என்றான் மயில்சாமி

பொம்பளயாட்டமுன்னா என்னடா அர்த்தம்? புருஷன் செத்துட்டா பாக்குறவனுக்கெல்லாம் படுக்கய போட்டுக்குட்டு திருட்டுத்தனமா ஒழுஞ்சு மறஞ்சு படுத்தெந்துருசுக்குட்டு அதுக்கும் வழியில்லீன்னா பச்ச தண்ணிய மேலுல ஊத்தி உணர்ச்சிகள தனுச்சுக்குட்டு வாழணுமா? ஏன் எங்களுக்கு மனசில்லையா, அதுல எங்களுக்கு ஆசாபாசங்க இருக்காதா, நாங்களு நாலுபேரு மாதிரி ஒருத்தரக் கட்டிகிட்டு வாழக்கூடாதா, புருஷன எழந்த பொம்பளங்கன்னா என்னா கோயிலுக்கு நேந்துவிட்ட பலியாடுகளாடா ஆளாளுக்கு வெட்டி கூறுபோட்டு திங்கிறதுக்கு?

ஒங்க அண்ணனுக்கு என்னக் கட்டி வக்கும்போது எனக்கு வயசுன்னா தெரியுமாடா? பதினாலு முடிஞ்சு பதினைஞ்சு, அந்த வயசுல புருஷன்னா என்ன புள்ளகுட்டின்னா என்னன்னு தெரியுமடா எனக்கு, வாழ்க்கன்னா என்னான்னே தெரியாத வயசுல கண்ணால கட்டி வச்சாங்களே அது ஏந்தப்பா? மேல படிக்கணுமுன்னு எவ்வள கெஞ்சினேன்னு தெரியுமடா, ஏதோ சந்தயில ஆட்ட மாட்ட விக்கிற மாதிரி என்ன ஒங்க வூட்டுக்கு வித்தாங்க என்ன வாங்கியாந்த ஒங்க அண்ணனும் வாழ்க்கை என்னான்னு நாந்தெரிஞ்சு அறிஞ்சு வாழனுன்னு நெனக்கிம்போது போயிட்டாரு. அது ஏந்தப்பா? இப்போ எம்புள்ள குட்டியெல்லாம் கரை சேத்தியிட்டு தன்னந்தனியாளா தனுச்சு நிக்கிறேனே எனக்குன்னு ஒரு தொணவேணுமுன்னு யாராச்சும் நெனச்சீங்களாடா? நானும் மனுஷிதான்டா ஒங்க எல்லாதுக்கும் இப்ப சொல்றேன் கேட்டுக்கங்க. மத்தவங்க மாதிரி ஒழுஞ்சு மறஞ்செல்லா எனக்கு வாழத் தெரியாது, எப்படியாச்சும் அவரு மனச மாத்தி மதியழகனக் கண்ணாலங்கட்டிகிதாபோறேன் ஒங்களால என்ன செய்ய முடியோ செய்யுங்க என மனோன்மணி வெடித்துச் சிதறியதில் ஒட்டுமொத்தக் குடும்பமும் ஆடிப்போயின.



பல்லடம் நாராயணமூர்த்தி,
வடிவேல்

# காதல்; இணைவைப் போல பிரிவும் இயல்பானது

## திராவிடர் பண்பாட்டு வாழ்வு 3

தோழர் அர்ச்சுனன்... தந்தை பெரியார் திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக்கழகம், காட்டாறு குழு என இயங்கும் தளத்தின் பெயர்கள் மாறி மாறி இருந்தாலும் அனைத்துத் தளங்களிலும் ‘செயல்’ என்ற இடத்தில் இருப்பவர். பிரச்சாரப் பயணங்களில் முக்கியப் பணியாற்றியவர். 2006 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கத்தில் பெரியார் சிலை உடைக்கப்பட்டதற்கு எதிர்வினையாக, ஈரோட்டில் உள்ள இராமன் கோவிலில் உள்ள இராமன் சிலையை உடைத்த வழக்கில் கைது செய்யப்பட்டவர். பார்ப்பனர்களின் பூணூலை அறுத்து தேசியப்பாதுகாப்புச் சட்டத்தில் சிறைப்பட்டு விடுதலையானவர். களச்செயல்பாடுகள் - சிறைவாழ்வு எனப் பரபரப்பாக இயங்கினாலும், தம் சொந்த வாழ்வில் பெரியாரின் பண்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் எண்ணம் உள்ளவர். அதன் அடிப்படையில் ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்தவர்.

இவரது அனைத்துப் பணிகளுக்கும் தோள்கொடுத்து நிற்பவர் தோழர் இரஞ்சிதா. தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் மாநிலச்செயலாளராகப் பணியாற்றியவர். அடுத்த தலைமுறை, அறிவியல் அணுகுமுறையோடு வளரவேண்டும் என்ற அக்கறையோடு அதற்கான பணிகளில் முழுமையாக உழைப்பைக் கொடுத்தவர். தற்போது Team Life Science என்ற அறிவியல் விழிப்புணர்வு அமைப்பில் பணியாற்றுகிறார். இவர்களது திருமணம் ஜாதி மறுப்புக் காதல் திருமணம்.

**கேள்வி : உங்களைப்பற்றி சொல்லுங்கள்?**

**இரஞ்சிதா:** நான் ஈரோடு மாவட்டம் அனுமன்பள்ளி கிராமத்தில் ஒரு பிற்படுத்தப்பட்ட விவசாயக் குடும்பத்தில் பிறந்தேன். அர்ச்சுனன் என் துணைவர். கபிலன் எங்கள் மகன், நான் இடைநிலை ஆசிரியராக பணி செய்கிறேன்.

**தோழர் அர்ச்சுனனை எங்கே சந்தித்தீர்கள்?**

நான் 2003இல் +2 முடித்தேன் எங்கள் அப்பா மழை சரியாக இல்லாத காரணத்தால் மேலே படிக்கவைக்க முடியாமல் என்னை பனியன் கம்பெனிக்கு வேலைக்கு அனுப்புகிறார்கள். அங்கேதான் தோழர் அர்ச்சுனனை சந்தித்தேன். அவர் அனைவரிடமும் பழகும் விதமும் நகைச்சுவையாக பேசுவதால் அவரை எனக்குப் பிடித்தது. நாங்கள் அனைவரும் வேலைசெய்யும் இடத்தில் நண்பர்களாகப் பழகினோம். அதன் பிறகு நான் தான் முதலில் என்னுடைய காதலை வெளிப்படுத்தினேன். அர்ச்சுனனும் ஏற்றுக்கொண்டார்.

**தோழர் அர்ச்சுனன் தாழ்த்தப்பட்டவர் என்று தெரிந்து காதலித்தீர்களா?**

காதலிக்க ஆரம்பிக்கும் போது தெரியாது. அதன் பிறகு நண்பர்கள் எல்லோரும் சொன்னார்கள். எனக்கே ஒரு குழப்பம் இருந்தது. நமது வீட்டில் ஏற்றுக்கொள்வார்களா? என்று யோசித்தேன். பிறகு நமக்கான சரியான நபர் என்று முடிவு செய்தேன். அதன் பிறகு நான் ஜாதியைப் பற்றிக் கவலைப் படவில்லை

**உங்கள் வீட்டில் எப்படி எடுத்துக்கொண்டார்கள்?**

நாங்க ஒரு வருடம் காதலித்தோம். பின்புதான் திருமணம் செய்து கொண்டோம். திருமணத்திற்கு ஒரு மூன்று மாதத்திற்கு முன்பு எங்கள் கம்பெனி மேனேஜர் மூலம் வீட்டிற்குத் தெரிய வந்தது. என்னை எங்கள் வீட்டில் அடிக்கவில்லை, திட்டவில்லை, வேறு ஒன்றும் கொடுமைப் படுத்த வில்லை. இந்த மாதிரி ஒரு ஜாதிக்காரனை காதலிக்கிறாயே, நாங்க உனக்குத் திருமணம் பண்ணி வைக்கமாட்டமா? என்று அம்மா அழுதார்கள். அம்மா அழுகும்போது எனக்குக் கூட மனசு மாறிவிடுமோன்னு நினைத்தேன். ஆனால் ஒருத்தரைக் காதலிக்கிறோம், அவரை விட்டுட்டு வேறு ஒருவருடன் வாழமுடியாது. காதலிக்கிறவரை நம்மால் புரிந்துகொள்ள முடியும். யாரென்று தெரியாத ஒருவரின் ஜாதகப் பொருத்தத்தை மட்டும் நம்பி எப்படி வாழுவது? எனவே எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் அர்ச்சுனனுடன் வாழ்வது என்று முடிவு செய்தேன். நான் எப்படியும் போய்விடுவேன் என்று கம்பெனியில் இருந்து நிறுத்தி விட்டார்கள். வீட்டில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார்கள். எனவே நான் விட்டைவிட்டு வந்துவிட்டேன்.

**உங்கள் திருமணம் எங்கே நடைபெற்றது?**

**இரஞ்சிதா:** எங்கள் திருமணம் 2004 இல் சேலம் மாவட்டம் மேட்டூரில் உள்ள பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர் கொளத்தூர் மணி (அன்று தபெதிக

தலைவர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நான் அங்கு சந்தித்த தோழர்கள் அவர்கள் பழகிய விதம் அனைத்துமே புதுமையாகவும் வியப்பாகவும் இருந்தது.

**அப்படி என்ன புதுமையைக் கண்டீர்கள்?**

நான் படிப்பகம் என்கிற வார்த்தையை அப்போதுதான் கேட்கிறேன். அதற்கு முன்பு நூலகம் தான் கேள்விப்பட்டுள்ளேன். அங்கு வந்தவர்கள் ஒருவரை ஒருவர் 'தோழர்' என்று அழைத்துக் கொண்டனர். அனைவரும் கருப்புச் சட்டை அணிந்து இருந்தார்கள். என்னிடம் மிகவும் மரியாதையாகவும் நாகரிகமாகவும் பழகினார்கள். பெண்கள் என்றாலே வா, போ என்று ஒருமையில் பேசுபவர்களுக்கு மத்தியில் என்னையும் 'தோழர்' என்றே அழைத்தனர். அப்பொழுதுதான் கருப்புச் சட்டை அணிவதற்கும், 'தோழர்' என்று அழைப்பதற்கும் என்ன காரணம் என்று கேட்டுத்தெரிந்து கொண்டேன். இவர்கள் கடவுள் மறுப்பாளர்கள், ஜாதி மறுப்பாளர்கள் எனச் சொன்னார்கள். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. கடவுள் மறுப்புக்குக்கூட ஒரு இயக்கம் இருக்கா? என, மேலும் தலைவர் தொண்டர் வேறுபாடு இல்லாமல் பழகினார்கள்.

**தாலி கட்டாமல் சடங்கு சம்பிரதாயம் இல்லாமல் நடைபெற்ற ரிஜிஸ்டர் திருமணத்தை எப்படி எடுத்துக்கொண்டீர்கள் ?**

எனக்கு முதலில் உடன்பாடு இல்லை. அங்கு போன பின்பு அங்குள்ளவர்கள் பழகிய விதம் பிடித்திருந்தது. மேலும் நாம் விரும்பிய வாழ்க்கை கிடைக்கப்போகிறது. அதற்குத் தாலி, சடங்கு இல்லாத திருமணமாக இருந்தாலும் பரவாயில்லை என நினைத்தேன். ஜாதி மறுப்புத் திருமணம் செய்பவர்களுக்கு ரிஜிஸ்டர் திருமணம் செய்வது நல்லது என உணர்ந்தேன். ஏனென்றால் சான்றிதழ் கிடைக்கிறது. அது ஒரு ஆதாரமாக இருக்கும். அதை வைத்து மட்டும் தான் பேச முடியும் என நினைத்தேன்.

**உங்கள் திருமணத்திற்கு உங்கள் வீட்டில் எப்படி எதிர்ப்பு இருந்தது?**

எங்க திருமணம் முடிந்த இரண்டாம் நாள் மணி அண்ணன் (தோழர் கொளத்தூர் மணி) உங்கள் வீட்டுக்கு தகவல் சொல்லி விடலாம். இல்லை யென்றால் நாம் கடத்தி வந்ததாகக் கூறப்படும். .எனவே உங்கள் வீட்டிற்குச் சொல்லிவிடலாம் என்றார். தகவல் தெரிந்தவுடன் எங்கள் வீட்டில் இருந்து அப்பா, அம்மா, மேலும் ஒரு இருபது பேர் வந்தார்கள். காவல் துறையினரும் வந்தார்கள். என்னிடம் பேசினார்கள். எனது சித்தப்பா, மீண்டும் படிக்க வைப்பதாகவும், இவனை விட்டுட்டு வந்திடு என்றும் கூறினார்கள்.

ஏற்கனவே மழை இல்லாமல்தான் படிப்பை எங்கள் அப்பா நிறுத்தினார். அப்போது யாரும் படிக்க வைப்பதாகக் கூறவில்லை. இப்ப மட்டும் ஏன் சொல்றீங்க? என்று கேட்டேன். அவர்கள் ஜாதியைச் சொல்லிப் பேசியவுடன், "நான் மனிதனைதான் காதலித்தேன். கொடிய மிருகம் எதையும் காதலிக்கவில்லை" என்றேன். அவர்கள் பிரச்சனை செய்து பிரித்து செல்லலாம் என்றுதான் வந்துள்ளார்கள். 'மணி அண்ணன்' பாதுகாப்பில் இருக்கிறாங்க என்று தெரிந்தவுடன் அந்த எண்ணத்தை விட்டுவிட்டார்கள்.

மேலும் அவர்கள் போட்ட நகையைக் கேட்டார்கள். 100 ரூபாய் பத்திரத்தில் குடும்பத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று எழுதித் தரச் சொன்னார்கள். எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.. ஜாதிக்காகப் பெற்ற மகளையே இல்லை என்று எழுதித் தரச் சொல்லுகிறார்களே என நினைக்கும் போது அழுகையே வந்தது. நகை அனைத்தையும் கழற்றிக் கொடுத்துவிட்டு எழுதிக் கொடுத்து விட்டேன்.

**திருமணம் பண்ணி வைத்த பிறகு பெரியார் இயக்கத்துடன் தொடர்பில் இருந்தீர்களா? உங்க வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொண்டீர்கள்?**

திருமணம் முடிந்தவுடன் ஒரு மாதம் காவலாண்டியூரில் தங்கி இருந்தோம். காதலுக்கு காவல் 'காவலாண்டியூர்' என்று சொல்லும் அளவிற்கு எங்களைக் கவனித்துக்கொண்டார்கள். நாங்களும் அடுத்து என்ன செய்வது என்று சிந்தித்த போது அவர்களே எங்களிடம் பேசினார்கள். உங்களுக்கு என்ன வேலை தெரியும்? நீங்க எங்க போனா வாழ முடியும்னு நினைக்கிறிங்களோ அங்க நாங்க அனுப்பி வைக்கிறோம் என்று சொன்னார்கள்.

அப்போது நாங்கள் சொன்னோம் எங்களுக்கு கார்மெண்ட்ஸ் வேலை தெரியும். எனவே திருப்பூருக்குப் போகிறோம் என்றோம். திருப்பூர் தோழர்களைத் தொடர்பு கொண்டு எங்களை அனுப்பி வைத்தார்கள். தோழர் அங்கக்குமார், ரமேஷ்பாபு மற்றும் திருப்பூர் தோழர்கள் சேர்ந்து வீடு வாடகைக்குப் பிடித்துக் கொடுத்து அடுப்பு, அரிசி மளிகை பொருட்கள் அனைத்தும் வாங்கி கொடுத்தார்கள். வேலைக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள்.

**நீங்கள் தனியாக வீடு பிடித்துத் தங்கி வேலைக்குப் போகும்போது தாலி, மெட்டி போன்ற திருமண அடையாளங்கள் இல்லாமல் இருந்ததால் எதாவது பிரச்சனைகளை எதிர்கொண்டீர்களா?**

நாங்க முதலில் குடியிருந்த பகுதிகளில் நீங்கள் என்ன ஜாதி என்று கேட்பார்கள். நான் கொங்கு வேளாளர், அவர் வேட்டுவக் கவுண்டர் என பொய் சொல்லிவிடுவோம். எங்கே தாழ்த்தப் பட்டவர் என்று தெரிந்தால் வாடகைக்கு வீடு தர மாட்டார்களோ என நினைத்து அப்படிச் சொல்லி விடுவோம்.

அருள்புரம் பகுதியில் இருக்கும் போது நானே மஞ்சள் கயிறை கட்டி இரண்டு நாட்களில் கழற்றி விட்டேன்.

அதன்பிறகு யாராவது கேட்டால் ஏன் தாலி ,மெட்டி போட வேண்டும்? என்று எதிர் விவாதம் செய்வேன். ஆண்களுக்கு என்ன அடையாளம் என கேட்பேன். இன்று வரை கேட்பவர்களும் உண்டு. நானும் பெரியார் கொள்கைப்படி விளக்கம் கொடுப்பேன்.

**ஆசிரியர் பணிக்கு எப்படி வந்தீர்கள்?**

கார்மெண்ட்ஸ் வேலைக்குப் போகும் போதே நாம் இவ்வளவு எதிர்ப்புக்கு மத்தியில் திருமணம் செய்துகொண்டோம். மற்றவர்கள் முன்பு நாம் ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பித்தேன். இடம் கிடைத்தது. ஆனால் பணம் பெரும் பிரச்சனையாக இருந்தது. அப்போது தோழர்கள் எனக்கு உதவி செய்தார்கள். இப்போது தந்தைபெரியார் திராவிடர் கழகத்தில் இருக்கும் தோழர் அங்கக்குமார், திராவிடர் விடுதலைக் கழகத்தில் இருக்கும் துரைசாமி அண்ணன், சிவகாமி டீச்சர் ஆகியோரும் பெரியார் இயக்கங்களின் தோழர்களும் இல்லையென்றால் நான் ஆசிரியராக ஆகியிருக்க முடியாது.

**நீங்கள் பிறந்து வளர்ந்தது பிற்படுத்தப்பட்டவர்களின் ஊரில், ஆனால் தற்போது வாழ்வது சேரியில் என்ன வேறுபாட்டை உணர்கிறீர்கள்?**

நாங்கள் காதலிக்கும் போது எங்களைப் பிரிக்கப் பேரம் பேசியவர் "நீ எப்படி போய் சேரியில் வாழ்வாய்? உன்னால் அங்கெல்லாம் வாழ முடியாது" என்று கூறினார். நான் அப்பொழுதே முடிவு செய்தேன் . நாம் அங்கே தான் வாழ வேண்டும் என்று, நான் இங்கே வந்தபின்பு மக்கள் என்னிடம் அதிகமாக அன்பு காட்டினார்கள். எனது உறவினர்களிடம் பார்க்காத ஒரு உண்மையான அன்பை இந்த மக்களிடம் கண்டேன்.

## தோழர் அர்ச்சுனனிடம் சில கேள்விகள்

**கேள்வி : இரஞ்சிதாவை விரும்பக் காரணம் என்ன?**

**அர்ச்சுனன்:** என்னோடு வேலை பார்த்தவர்களில் பிற்படுத்தப்பட்ட சமூக நண்பர்கள் அதிகம். அவர்களோடு நெருங்கிப் பழகியதால் மாற்றுச் சமூகத்தில் திருமணம் செய்ய விருப்பம் இருந்தது. ரஞ்சிதாவை எனக்கு குணநலன்கள் பிடித்துப் போனதாலும் தேர்வு செய்தேன்.

**உங்கள் காதலுக்கு எதிர்ப்பு எப்படி இருந்தது?**

நாங்கள் காதலிக்கும் போது கம்பெனி மேலதிகாரி என்னைக் கூப்பிட்டு மிரட்டினார்கள். என்னோடு நல்ல நண்பனாகப் பழகியவர்கூட, ஜாதி மாறிக் காதலிப்பது தெரிந்து என்னோடு பேச வில்லை. எங்கள் அதிகாரி தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த உனக்குக் கவுண்டர் பொண்ணு கேக்குதா? என்றார். என்னை வேலையை விட்டும் நிறுத்தி விட்டார். அவர்கள் வீட்டில் இருந்து காதலிக்கும் போது எதுவும் மிரட்டல் இல்லை. திருமணத்தின் போது நிறைய பேர் வந்து எங்கள் ஊரில் கேட்டு உள்ளனர். மேட்டூர் பெரியார் படிப்பகம் சென்ற செய்தி கேட்டவுடன் திரும்பி விட்டார்கள்.

**உங்கள் வீட்டில் எப்படி எடுத்துக்கொண்டார்கள்?**

**அர்ச்சுனன்:** எனக்கு அப்பா கிடையாது. அம்மாவும் அக்காவும் தான். அக்காவுக்கு திருமணம் ஆகிவிட்டது. நாங்கள் கிராமத்தில் வாழ்வதால் ஜாதிய ஒடுக்குமுறை அதிகம். மேலும் எங்கள் ஊரில் அம்மா உள்பட அனைவரும் அவர்கள் தோட்டத்திற்குதான் வேலைக்குப் போக வேண்டும். ஆதலால் மிகவும் பயந்தார்கள். எனது அம்மா மிகவும் பயந்து இந்தத் திருமணம் வேண்டாம் என்றார்கள்.

**காதலிக்கும் போது நீங்கள் இருந்த மன நிலைக்கும் இன்று பெரியாரியலை வாழ்வியலாக ஏற்றுக்கொண்ட பின்பு காதலை எப்படி பாக்குறிங்க?**

**அர்ச்சுனன்:** காதலிக்கும் போது இரஞ்சிதாவைப் பார்க்காமல் பேசாமல் இருக்க முடியாது. தினமும் பார்க்க வேண்டும் என்று இருக்கும். காதல் ஒரு போதை போல. ஆனால் பெரியாரியலை ஏற்றுக் கொண்ட பிறகு வாழ்க்கையில் காதல் ஒரு அங்கமாகும். காதல் மட்டுமல்லாமல் சமூகத்தில் நிறைய விசயங்கள் இருக்கிறது. காதல் வந்து போகிற ஒரு நிகழ்வு.

**இரஞ்சிதா:** காதல் புனிதமானதுன்னு முன்பு நினைப்பேன். மேலும் நல்ல நண்பராகப் பழகிவிட்டு எப்படி காதலிப்பது? நட்புக்கு செய்யும் துரோகம்னு நினைத்தேன். அதன்பின்பு நிறையப் பேசி நல்ல நண்பர்கள் தான் காதலர்களாக முடியும்னு முடிவெடுத்தேன். பெரியாரியலை ஏற்றுக் கொண்ட பின்பு காதல் என்பது இயற்கையானது. அது புனிதமானது என்பது பொய் எனப் புரிந்து கொண்டேன்.

**காதலில் இணைவது போல பிரிவும் இயல்பானது என்கிறார் பெரியார். இக்கருத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**அர்ச்சுனன்:** இதுவரை எங்களுக்குள் எந்த பிணக்கும் இல்லை. ஏற்றத்தாழ்வு, ஈகோ இல்லாமல் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்கிறோம். எங்களுக்குள் கருத்து வேறுபாடு வந்தால் - பிரிந்து இருந்தால் இருவருக்கும் நல்லது என்று என்றாவது உணர்ந்தால் அதை இயல்பாக ஏற்றுக்கொண்டு நல்ல நண்பர்களாகப் பிரிவோம்.

**இரஞ்சிதா:** பெரியார் வாழ்ந்த காலத்திலேயே எத்தனையோ இணையர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றாக வாழ விருப்பம் இல்லாவிட்டால் வேறு ஒரு துணையைத் தேடிக்கொள்ள வழிவிட்டு ஒதுங்கி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பல திருமணங்களைப் பெரியாரே நடத்தி வைத்திருக்கிறார் என்பதைக் குடி அரசில் படித்திருக்கிறோம்.

திருமணம் செய்யும்போது நாம் பிரியவே கூடாது என நினைத்து வாழ்ந்தோம் இப்பவும் எங்களுக்குள் பிரிய வேண்டிய அளவுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஒருவேளை எங்களுக்குள் கருத்து வேறுபாடு வந்தால் நல்ல நண்பர்களாகப் பிரிவோம்.

அரசூர் அ.ப.சிவா

# நாலு பேரு நாலு விதமாப் பேசியது 3

## தோழர் நீலவேந்தன் பிறந்தநாள்

சிலரை வெளியில் இருந்து பார்க்கும் போது பிரமிப்பாகவும் பிரமாண்டமாகவும் தெரியும். ஆனால் பழகிப் பார்க்கும் போது அதே அடர்த்தியுடனும் ஆனாலும் பழகுவதற்கு எளிமையானவர் களாகவும் இருப்பார்கள். 2007இல் திருப்பூரில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரமைப்பின் உலகப் பெருந்தமிழர் விருது பெற்ற பொள்ளாச்சி மகாலிங்கத்தை அதே மேடையில் தோலுரித்த போது நான் அவரை வெளியில் இருந்து பிரமிப்புடன் தான் பார்த்தேன்..

கோவை மத்திய சிறையில் 50 நாட்களில் அவரின் எளிமையை உணர்ந்தேன்.. எந்த ஒரு பெரிய கருத்தையும் எளிமையாக புரியும் படி நகைச்சுவையாய் சொல்லிவிடுவதில் அவருக்கு இணை அவரே

ஒவ்வொரு நல்ல திரைப்படங்களைப் பார்க்கும் போது நாமும் சேர்ந்து ஒரு திரைப்படம் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்துவார் அவர். அவரது கவிதையை அடிப்படையாக வைத்து ஒரு குறும்படம் மட்டுமே எடுக்க முடிந்தது.

சிறையில் இருக்கும்போது வெளியில் இருந்து எங்களைப் பார்க்க வருபவர்களிடம் வெளியே இன்னும் ஆம்லேட் வட்டமாத்தான் போடுறாங்களா? என நகைச்சுவையாய் பேசி அங்கிருக்கும் இறுக்கத்தை மறைப்பதில் ஆகட்டும். ஒவ்வொரு முறை பிரியாணி சாப்பிடும் போது உடன் தயிர் வெங்காயத்தை தவிர்த்துவிட்டு இதெல்லாம் பிரியாணி உள்ளே இறங்காதவர்கள் இறங்குவதற்கு என பேசுவதிலாகட்டும் .

நகைச்சுவை மட்டுமில்லாது அம்பேத்கர் தன்னுடைய ஜாதிக்காரர் என்பதற்காக மட்டுமே அவரை நேசிக்கிற தலித்துகளும், தன்னுடைய ஜாதிக்காரர் இல்லை என்பதற்காக அவரை வெறுக்கிற மற்ற ஜாதியினரும் பயன்பட மாட்டார்கள். அம்பேத்கர் காண விரும்பிய சமூக ஜனாயகத்தைப் படைக்க தலித்துகள் மட்டுமல்லாது, தலித்துகளை மனிதர்களாக எண்ணுகிற இடதுசாரி, முற்போக்கு, பகுத்தறிவு, சமூக நீதிச்சிந்தனையாளர்களும் இணைந்து பணியாற்றுவதே புரட்சியாளர் அம்பேத்கருக்கு நாம் செலுத்து உண்மையான மரியாதையாகும் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் கருப்பு - நீலம் - சிகப்பு என மூன்றுக்கும் பாலமாக இருந்து அதைத் தன் கடின உழைப்பின் மூலம் இறுதிவரை செயலாற்றிக் கொண்டிருந்தவர் தோழர்.நீலவேந்தன்..

நெருப்புக்குத் தன்னையே இரையாக்கி விட்டு நீலவேந்தன் சென்ற இடம் தமிழக சமூக அரசியலில் இன்னும் காலியாகவே இருக்கிறது. தான் வாழ்ந்தவரை தனக்கு நெருக்கமானவர்களுக்கு இரவு 12 மணிக்கே பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லும் நீலவேந்தனின் பிறந்த நாள் ஏப்ரல் 6ஆம் தேதி.

நெருப்புத் தமிழன் நீலத்தமிழன் எப்படி வேண்டுமானாலும் உங்களை மற்றவர்கள் அழைக்கட்டும் எனக்கு நீங்கள் என்றுமே காம்ரேட் தான் MY DEAR COMRADE.... WE MISS U.....

## காமெடி சேனல்கள் வேண்டாம்

POGO பார்த்துக் கொண்டிருந்த பாப்பாவிடம் கெஞ்சிக் கூத்தாடி ரிமோட்டை வாங்கி சேனலை மாற்றிய போது பொங்கிக் கொண்டிருந்தார் தமிழிசை அக்கா

“சூரியன் உதிக்கிறதோ இல்லையோ, இலை துளிர்க்கிறதோ இல்லையோ, கை உயர்கிறதோ இல்லையோ, மாம்பழம் பழுக்கிறதோ இல்லையோ, பம்பரம் சுழல்கிறதோ இல்லையோ, தாமரை மலர்ந்தே தீரும் மலர்ந்தே தீரும் மலர்ந்தே தீரும்”

பயந்து போய் சேனலை மாற்றினால் புரட்சிப்புயல் வீசிக்கொண்டிருந்தது. இயக்குநர் ஹரி தன் அடுத்த படத்துக்குக் குறிப்பெடுக்கலாம் போல. மறுபடியும் சேனல் மாற தங்களுடைய கூட்டணிக் கதவு சாத்தி விட்டதாகவும் திறக்க முடியாது எனவும் ஏச்.ராஜா சாவியைத் தேடிக் கொண்டிருக்க, கடைசியாய் எங்க அண்ணன் சீமான் ஊத்தங்கரையில் இரட்டை இலைக்கு ஓட்டு கேட்டுக் கொண்டிருக்கும் போதே ரிமோட்டை பிடுங்கினாள் பாப்பா. இப்போது டாமும் ஜெர்ரியும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தது. தமிழ்கூறும் நல்லுலகுக்கு என் எளிய கோரிக்கை 2 மாதங்களுக்கு ஆதித்யா, சிரிப்பொலி சேனல்களுக்கு பணம் கட்டி வீணாக்காதீர் என்பதே

## ஓட்டுக்குப் பணம்

தமிழகம் முழுதும் எத்தனை மத்திய, மாவட்ட, கிளைச் சிறைகள் இருக்கின்றன என இணையத்தில் தேடிப்பாருங்கள் என பொள்ளாச்சியில் இருந்து விஜயராகவன் அண்ணன் கைப்பேசியில் கேட்டார். எதுக்கு என கேட்டதற்கு, முதலில் பார்த்துட்டு கூப்பிடுங்க என படக்கென போனை வைத்து விட்டார்..

நானும் பல்வேறு யோசனைகளுடன் இணையத்தில் மூழ்கித் தேடிப்பார்த்து மீண்டும் அவரைத் திருப்பி கூப்பிட 10 நிமிடங்கள் ஆயிற்று. விபரங்களைச் சொன்ன போது," ஓ அப்படியா? அப்படின்னா ஊருக்கு 100 பேர் என்றால் கூட சிறையில் இடம் பத்தாது, அப்புறம் எப்படி ஒரு வருடத்துக்கு இவ்வளவு பேரை வைத்துச் சமாளிப்பது? என்றார்.

புதிர் போடாமல் உங்க கேள்விக்கான காரணத்தைச் சொல்லுங்கள், ஏதேனும் பெரிய போராட்டத்துக்கு தயாராகி வருகிறதா தமிழகம்? என்றேன். "அட, ஊருக்கு ஊர் காதல் ஜோடிகளை வெட்டி வீசுகிறார்கள், யார் எதிர்த்துப் போராடினார்கள்? அவ்வளவு பொதுநலமாகக் கூட வேண்டாம் 10 மணி நேரம் மின்சாரம் இல்லாத போதும் கூட வீதிக்கு வந்து போராட தயாராக இல்லாதவர்கள், இவர்கள் போராடி சிறை நிரப்பிட்டாலும்"...என்றார்

அப்புறம் எதுக்குங்க இந்த புதிர் என்றேன். "இல்லீங்க ஓட்டுக்குப் பணம் வாங்கினால் ஒரு வருடம் சிறையின்னு தேர்தல் ஆணையம் டவுன் பஸ்ஸில் நோட்டீஸ் ஒட்டியிருக்காங்க" என்றார். சிரிக்காமல் படையப்பா நீலாம்பரி ஸ்டைலில் சொன்னேன் வயசானாலும் உங்க ஸ்டைல் மாறவில்லை முடிக்கும் முன் பதில் தந்தார் "யாருக்கு வயசாச்சு நானெல்லாம் செல்வேந்திரன் செட்"

## சினிமா – கிரிக்கெட்

இந்தத் தடவை சென்னை இல்லை. அதனால் ஐ.பி.எல். பார்க்கவே பிடிக்க மாட்டேண்குது என்றான் தம்பி யுவராஜ். ஏன் சென்னை இல்லை என்றால் என்ன? அதான் எட்டோ, ஒன்பதோ அணிகள் விளையாடறாங்களே அப்புறம் என்ன? என்றேன். அதெப்படி நம்ம ஆளுக விளையாடலையின்னா ஆர்வமிருக்காது.

ஓ... அப்படியா? பெங்களூரு விளையாடுதே அவங்க உங்க ஆளுக இல்லையா? என்றேன். தமிழ்நாட்டு அணி தான் நம்ம அணி மத்ததெல்லாம் வேற.. சரி போன வாரம் மேற்கிந்திய தீவுகள் அணியிடம் உங்க இந்திய அணி தோத்துப் போச்சுன்னு ஒப்பாரி வச்சீங்களே அது என்ன? என்றேன்.

அப்ப நீ போன வாரம் பேசியது இந்திய தேசியம். இப்பப் பேசறது தமிழ்த் தேசியம் என்றேன். இதுதான் உன்னை மாதிரி ஆளுக கூடப் பேசறதே இல்லை என்றான் தம்பி. அட அது அப்படி இல்லை தம்பி விளையாட்டு என்பது மனுசன் பொழுது போக்க, உடல் வலிமை பெற கண்டுபிடிச்சது. ஆனால் அதை வணிகநிறுவனங்கள், உங்கள மாதிரி ஆட்களைப் பார்க்க வைத்து, அதன் மூலம் தங்களுடைய வியாபாரத்தை வளர்க்கிறார்கள்.

இந்தியா பூராவும் இருக்கிற கிரிக்கெட் மோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு சர்வதேச நிறுவனங்கள் உழைக்கும் மக்களின் பணத்தை உறிஞ்சும் இடமே கிரிக்கெட் மைதானம். வியாபாரம் தன் தேவைக்கு உங்களை இந்தியாவை இரசிக்க வைக்கும். அதே வியாபாரம் உங்களைச் சென்னையையும் இரசிக்க வைக்கும்.

இந்த விளம்பரத்தில் வீரர்கள் தான் நடிகர்கள். இதில் மகாராஷ்டிராவில் கடும் குடிநீர்ப் பற்றாக்குறையையும் மீறி அங்கு ஐ.பி.எல். போட்டிகள் நடை பெறுகிறது. அதுதான் கொடுமை.. நடிகர்கள் அப்படின்னு சொன்னதுதான் ஞாபகம் வருது. நடிகர் சங்க நட்சத்திர கிரிக்கெட் வேற நடக்குது. ஆமாம் வாங்குன காசுக்காக நல்ல பயிற்சி பெற்ற ஆட்டக்காரனே மைதானத்தில் நடிக்கிறான் இவனுக தொழிலே காசுக்காக நடிப்பதே சிறந்த பொருத்தம்.

இப்ப நான் என்ன பண்றது கிரிக்கெட் பார்க்கறதா வேண்டாமா? என்றான் தம்பி பாரு தம்பி. விளையாட்டை விளையாட்டாய் மட்டும் பாரு என்றபடி நகர்ந்தேன்.



"மதம் மாறுவதற்கு நீங்கள் ஏன் தயங்க வேண்டும்? இந்துக்களிலிருந்து முஸ்லீம்களும், கிறிஸ்துவர்களும் எந்த அளவுக்கு ஒதுங்கி இருக்கிறார்களோ, அதே போல்தான் நீங்களும் இருக்கின்றீர்கள். இது உண்மை எனில், மத மாற்றத்தைக் கண்டு நீங்கள் அச்சப்படுவதற்கான எந்தக் காரணமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை"

–டாக்டர் அம்பேத்கார்

TEAM LIFE SCIEÑCE

# குழந்தைகள் பயணம்

May 20-24 2016

சமுதாயத்திற்காக ஒரு ஆண்டின் அனைத்து நாட்களையும் செலவிடுகிறோம். நமக்காக - நமது மன வளத்தை உயர்த்திக்கொள்வதற்காக - நமது அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவதற்காக - வாழ்க்கைக்கான கல்வியைக் கற்பதற்காக - சில நாட்களையாவது தேர்ந்தெடுப்போம்.

- அவசியத் தேவையான உணவுத்தயாரிப்பு
- ஆடைத் தயாரிப்பு
- உணவு, உடைத் தேவைக்கு அடிப்படையான விவசாயம்
- அனைத்துக்கும் தேவையான மின்சார உற்பத்தி
- சக உயிர்களை மதிக்கத் தேவையான பாலின சமத்துவம்
- இவை அனைத்துக்கும் அடிப்படையாக இருக்க வேண்டிய அறிவியல் அணுகுமுறை
- இவற்றை நேரடிக்காட்சிகளாக அறிய - 5 நாட்கள் சுற்றுப்பயணம்
- 2016 மே 20 - 24 ஆகிய 5 நாட்கள்
- நன்கொடை : ஒருவருக்கு ரூ 1500 ( உணவு, தங்குமிடம், பயணக்கட்டணம் உட்பட)
- 8 முதல் 15 வயது வரை உள்ளவர்கள் மட்டும் பங்கேற்கலாம்.
- பெற்றோர்களும் வரலாம். அவர்களுக்கான கட்டணம் ரூ 2500.
- ஏப்ரல் 30 க்குள் பாதித் தொகையைச் செலுத்தி வருகையை உறுதிசெய்யுங்கள்.

5,Days
Rs:1500

தொடர்புக்கு:
இரஞ்சிதா 98426 26686
பெரியார்செல்வி 98656 30383
மலரினியன் 98947 03804









இந்துவாகப் பிறந்த நான், இந்துவாகச் சாக மாட்டேன் என்று சூளுரைத்தவர் தோழர் அம்பேத்கர்.

1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் இலட்சக்கணக்கான மக்களோடு அவர் புத்த மதத்திற்கு மாறிய நாளில் 22 உறுதிமொழிகளை எடுத்துக்கொண்டார். அவருடன் புத்தமதத்துக்கு மாறிய இலட்சக்கணக்கான மக்களும் இந்த உறுதிமொழிகளை முழங்கினர். ஆர்.எஸ்.எஸ். ஸை அதிர வைத்த அந்த உறுதி மொழிகளில் சில:

1. சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியோரைக் கடவுள்களாக நம்பி நான் வணங்கமாட்டேன்.

2. இராமனையும், கிருஷ்ணனையும் கடவுள்களாக நம்பி நான் வணங்கமாட்டேன்.

3.பார்வதி, கணபதி என்ற கடவுள் உருவங்களையும் நான் வணங்க மாட்டேன்.

4. இந்தப் பூமியில் ஆண்டவன் என்றொருவன் பிறக்கமுடியும் என்பதையும், அவதாரமாக வருவார் என்பதையும் நான் நம்பவில்லை

5. புத்தர், விஷ்ணு கடவுளின் அவதாரம் என்ற பொய்யான கட்டுக் கதையை நான் நம்பவில்லை.

6. இறந்த முன்னோர்களுக்குப் பிண்டங்கள் வைத்துச் சிரார்த்தம் செய்யும் சடங்கை நான் இனிமேல் செய்ய மாட்டேன்.

7.புத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், கொள்கைகளுக்கு எதிராக நான் செயல்படமாட்டேன்.

8,பார்ப்பனர்கள் மூலம் எந்த விதமான மதச் சடங்குகளையும் (சமஸ்கார்) செய்யமாட்டேன்.

9.பார்ப்பனர்களே உயர்ந்த முதல்சாதி என்று வலியுறுத்தும் - மனிதர்களுக்கிடையே சமத்துவ மின்மையைப் போதிக்கும் மற்றும் மனிதகுல விடுதலைக்கு எதிரான - இந்துமதத்தை இன்றோடு கைகழுவி, நான் புத்தமதத்தில் என்னை இணைத்துக் கொள்கிறேன்.

10. புத்த மதமும், தம்மமும் இந்த மண்ணில் சிறந்தது என்று நான் ஏற்றுக் கொள்கிறேன்.